Volume : 7 Issue - 9

# வைகறை வெளிச்சம்

செப்டம்பர் : 2014

விலை: ரூ.20

ஆசிரியர் மு.குலாம் முஹம்மது M.A.,

துல்கஅதா : 1435



## இஸ்ரேலை ஹமாஸ் விழ்த்தியது எப்படி?



## மும்பை 26/11

வினிதா காம்தி தொடுக்கும் போர்



கலவர சூழலில் இருந்து.....?

## காயல் பட்டிணம்

بسم الله الرحمن الرحيم

# அன்பகம்

நெ.17, 3-வது குறுக்குத் தெரு, ஸ்ரீநகர் காலனி, கும்பகோணம்,
தஞ்சை மாவட்டம் - 312 001.

குடும்பத்தோடு இஸ்லாத்தை ஏற்றுக் கொள்பவர்களுக்கு ஓர் கல்வியகம் வேண்டும் என்ற குரல் இஸ்லாத்தை ஏற்றிடும் மக்களிடமிருந்து வந்தது. இந்த ஏக்கம் போக்கிடவே அன்பகம். இதற்கு முன் ஆண்களுக்கென ஒரு கல்வியகத்தையும் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளும் பெண்களுக்கென ஒரு கல்வியகத்தையும் பெண்கள் காப்பகத்தையும் உருவாக்கி நடத்தியவரை தலைவராகக் கொண்டு இயங்குகின்றது இந்தக் கல்வியகம் அல்ஹம்துலில்லாஹ்.

**12-09-2007 முதல் கும்பகோணத்தில் ஓர் வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருகின்து.**
*(அல்ஹம்துலில்லாஹ்)*
**குடும்த்திலுள்ள நபர் ஒருவருக்கு ஆகும் செலவு ருபாய் 8000/- மருத்துவ வசதிகள் உட்பட அனைத்தும் இலவசம்.**

அன்பிற்கினிய சமூதாயப் பெருமக்களே!

இந்தப் பணிகளில் உங்களுடைய ஆலோசனைகளையும் உதவிகளையும் தாராளமாக வழங்குங்கள்.
இவை நமது பணிகள் இன்ஷா அல்லாஹ் நாம் அனைவரும் இணைந்து இந்த பணிகளை விரிவாக்குவோம்இ நிலைநிறுத்துவோம்.

செக் ∴ டி.டி. அனுப்புபவர்கள் :

## DARUL ISLAM FOUNDATION TRUST

என்ற பெயருக்கு எடுத்துஇ பின்வரும் முகவரிக்கு அனுப்பவும்
52/1, மண்ணடி தெரு, 4-வது மாடி, அறை எண்.7, மண்ணடி, சென்னை - 600 001.
☎ : 044 - 45566909, 📱 : 9444239594.
இணையதள முகவரி : www.daruislam.in மின் அஞ்சல் : darustrust@yahoo.com
Please draw your cheqes / DD in favour of DARUL ISLAM FOUNDATION TRUST
Canara Bank A/C 1287101017301 - Branch St.Mary's Road, R.A.Puram, Chennai.
and sen to: 52/1 Mannadi Street, 4th floor, Room No.7, Mannai Chennai - 600 001.
Phone : 044-45566909 Mobile : 9444239594
E-mail : darultrust@yahoo.com, Website : www.darulislam.in



بِسۡمِ ٱللَّهِ ٱلرَّحۡمَٰنِ ٱلرَّحِيمِ


# வைகறை வெளிச்சம்

செப்டம்பர் : 2014 ஷவ்வால் : 1435

ஆசிரியர்
மு.குலாம் முஹம்மது M.A.,

துணை ஆசிரியர்
கே.எம்.இல்யாஸ் ரியாஜி

தனி இதழ் ரூ.20
ஆண்டுச் சந்தா
உள்நாடு ரூ.240
வெளிநாடு ரூ.1500

பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர்
**DARUL ISLAM FOUNDATION TRUST**
என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.


**நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் தீனுல் இஸ்லாத்தில் முழுமையாக நுழைந்துவிடுங்கள்; தவிர ஷைத்தானுடைய அடிச்சுவடுகளை நீங்கள் பின்பற்றாதீர்கள்; நிச்சயமாக அவன் உங்களுக்கு பகிரங்கமான பகைவன் ஆவான்**

*(சூரத்துல் பகரா 2: 208)*


விளம்பரங்களுக்கு : 9444239594



**VAIGARAI VELICHAM**
52/1, Mannadi Street,
4th Floor, Room-7,
Mannadi, Chennai - 600 001.
Tel : 044-25224887
Mob : 8148129887
E-mail : darultrust@yahoo.com


## உள்ளே

### கவர் ஸ்டோரி




அநீதியின் உச்சம் ........ 2

காசா இஸ்ரேல் போர் 2014 முடிவுற்றது ........ 6

ஹமாஸ் வென்றது எப்படி? ........ 28

தாய்பால் அறிவியலும் குர்ஆனும் ........ 39

சிரத்துல் முஸ்தகீம் பதிப்பகம் ........ 42

நான் ஏன் முஸ்லீம் ஆனேன் ........ 43

பெட்டகம் ........ 48

உறுப்புகளின் பணியைவிட உள்ளத்தின் பணியே முதன்மையானது ........ 51

இஸ்லாமிய நாகரீகத்தால் மனிதகுலம் பெற்ற பலன்கள் ........ 54

மும்பை 26/11 ........ 58

கலவர சூழலில் காயல்பட்டிணம் ........ 62


**http://www.facebook.com/vaigaraivelicham**


All disputes arising out of any publication in this monthly will come under the jurisdication of Chennai courts. Private circulation to promote the Original Issue.




# அநீதியின் உச்சம்

அல்லாஹ்வின் அழகிய திருப்பெயரால்

ஆயிரம் தலை வெட்டிய மோடியின் ஆட்சியில் நீதிமன்றங்கள் மோடியின் பேரவையாக மாறிவருகின்றன என்பதை நாம் நமது தலையங்கங்களில் சுட்டிக்காட்டி வந்தோம்.

இப்போது இந்த மோடியின் பேரவைகள் இயங்க தொடங்கி உள்ளன.

இந்த நாட்டில் ஹதராபாத் மக்காஹ் மஸ்ஜித் குண்டு வெடிப்பு (15 மே 2007)

அஜ்மீர் தர்க்கா ஷெரிப் குண்டு வெடிப்புகள் 11.10.2007 சம்ஜோத்தா எக்ஸ்பிரஸ் குண்டு வெடிப்புகள் 9.02.2007 இவற்றையெல்லாம் நடத்தி 192 இந்திய குடிமக்களை (இந்துக்களையும் முஸ்லிம்களையும்) கொலை செய்த அசிமானந்தா என்ற சாமியாருக்கு பெயில் கொடுக்கப்பட்டிருக்கிறது .

மலேகானின் இரண்டு முறை குண்டுவெடிப்புகளை நடத்தி நூற்றுக்கணக்கான முஸ்லிம்களையும் சில ஹிந்துக்களையும் கொலை செய்த பெண் சந்நியாசி பிரக்கியா சிங் தாகூர் க்கு பிணை என்ற பெயில் தயாராகிக் கொண்டு இருக்கின்றது.

இதில் 192 பேரை கொலைசெய்த அசீமானந்தாவை விடுதலை செய்யும் போது நமது நீதிமன்றம் ஓர் விசித்திரமான விளக்கத்தை விளம்பிற்று

அஃது அசிமானந்தா செய்திருக்கும் குற்றங்கள் அனைத்தையும் விசாரித்து முடிக்க அதிக ஆண்டுகள் பிடிக்கும். அதுவரை அவரை சிறையில் வைத்திருக்க இயலாது ஆகவே பிணையில் விடுவிக்கின்றது.

ஆனால் ஆயிரமாயிரம் முஸ்லிம்கள் விசாரணை கைதிகளாகவே வாழ்நாளை கழித்துக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களிடம் நமது நீதிமன்றங்கள் விசாரணையை எதிர்கொள்ளுங்கள் தீர்ப்பு உங்கள் விடுதலையை முடிவு செய்யட்டும் எனக் கூறுகின்றார்கள்.

அவர்கள் குற்றமற்றவர்கள் அப்பாவிகள் அவர்கள் வழக்கை விசாரித்தால் அவர்கள் நிச்சயமாக விடுதலை பெறுவார்கள். ஆனால் நமது நீதிமன்றங்கள் கண்ணுக்குத் தெரிந்தே இந்த அநியாயத்தை செய்து கொண்டு இருக்கின்றன.

முன்னதாக மாயாகோடானி என்ற பெண் டாக்டருக்கு பிணை வழங்கபெற்றது. இவர் 2002 குஜராத் இனப்படுகொலைகளின் போது கர்ப்பிணி பெண்களை கொலைசெய்வதற்கு தலைமை தாங்கியவர். சில கர்ப்பிணிகளின் வையிற்றிலிருந்த குழந்தைகளை கிழித்தெடுத்து கல்லிலே வீசுவதை பார்த்து ரசித்தவர்.

2004ல் மோடி ஒரு மாபெரும் பூகம்பத்தை கிளப்பினார் அதில் தன்னை கொலை செய்ய இர்ஷாத் ஜஹான் என்ற பெண்ணும் இன்னும் மூன்று பேரும்

பாய்ந்து வந்தார்கள். அவர்களைக் குஜராத் காவல் படையினர் பறந்து பிடித்தார்கள். இதில் அவர்களும் சுட்டார்கள் குஜராத் காவல் படையினரும் சுட்டார்கள். அதில் நான்கு பேர் கொலை செய்யப்பட்டார்கள். ஆனால் இவையெல்லாம் ஜமுக்காளத்தில் வடிகட்டிய பொய் என்பது பின்னர் தெரியவந்தது. இர்ஷாத் ஜஹான் உட்பட நான்கு பேரும் குஜராத் காவல்துறையினரால் கடத்தி செல்லப்பட்டு கொலை செய்யப்பட்டார்கள். அதுவும் ஒரு பண்ணை வீட்டில் வைத்து பல நாள் சித்திரவதைக்கு பின்னரே கொலை செய்யப்பட்டார்கள். இது மோடியின் நேரடி பொறுப்பில் நடந்தது.

அதேபோல் ஷோராப்தீன் என்பவரையும் அவருடைய மனைவியையும் இணைத்தே கடத்தி சென்றனர் குஜராத் காவல் துறையினர் முதலில் அவரைக் கொலை செய்தார்கள் பின்னர் அவர் மனைவியை எரித்துக் கொன்றார்கள். இத்தனையையும் இப்போதைய பாரதீய ஜனதாகட்சித் தலைவர் அமித்ஷா என்பவர் தான் செய்தார் பின்னர் இந்தக் கொலைகளை கண்ணால் கண்ட சாட்சி4 "பிரஜாபதி" என்பவரையும் சுட்டுக்கொன்றார் இந்த வழக்கில் அமித்ஷா ஒரு வருடம் சிறையில் இருந்தார் பின்னர் காங்கிரஸ் உடன் நடத்திய பேரத்தில் பிணையில் வந்தார்.

அரசின் சார்பில் இந்தக் கொலைகளை செய்தவர்கள் காவல் துறை அதிகாரிகள். அவர்கள் இந்த கொலைகளுக்கு எதிர் தாக்குதல் எனப் பெயர் வைத்தார்கள்.

பாதிக்கப்பட்டவர்களின் சார்பில் இடைவிடாது நடந்த போர்களில் அத்தனை அதிகாரிகளும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்கள். இப்போது மோடி ஆட்சிக்கு வந்தபின் இவர்களெல்லாம் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டது மட்டுமல்ல அவர்களுக்கு பெரிய பெரிய பதவிகளும் வழங்கப்படுகின்றன. இவர்களையெல்லாம் பிணையில் விடும் நீதிபதிகளை என்னவென்று சொல்வது?

மோடி ஆட்சிக்கு வந்த பின் இவர்களை எல்லாம் விடுவித்திட இயலும் என்றால் நீதித்துறை ஒட்டுமொத்தமாக மோடியின் கைகளில் சிக்கிக்கொண்டது என்று தானே பொருள்? நாட்டில் நீதித்துறை தனித்துதான் இயங்குகின்றது என்பதெல்லாம் பித்தலாட்டம் தானே?

மோடி ஆட்சியில் அமர்ந்த அடுத்தநாளே இந்த அநீதிகள் அரங்கேறிட தொடங்கின.

இதற்கு நேர் மாறான ஓர் ஆட்சி இறைவனின் தூதர் முஹம்மது (ஸல்) அவர்கள் வாழ்ந்து மக்களுக்கு வழிகாட்டிக் கொண்டிருந்த காலம். அரபு பெருநிலத்தில் பாத்திமா என்றொரு பெண் திருடிவிட்டாள். இவர் அன்றைய அரபுகளால் மிகவும் உயர்ந்த குலம் எனக் கருதப்பட்ட குலத்தை சார்ந்தவள். இவள் திருடிடும் குற்றத்திற்கு இஸ்லாம் கையை துண்டித்து விடும் தண்டனையை வழங்குகின்றது. இந்த பாத்திமா என்ற பெண்மணியின் கையையும் துண்டிக்க வேண்டிய நிலை. ஆனால் அவள் உயர்ந்த குலத்தை சார்ந்தவள். என்பதால் அவளது குலத்தை சார்ந்தவர்கள் தங்கள் குலத்தை சார்ந்த பெண்மணியின் கை துண்டிக்கப்படுவதை விரும்பவில்லை. தடுத்தாக வேண்டும் என முடிவு செய்தார்கள்.

ஆகவே தண்டனையை தடுத்திட பெருமானார் (ஸல்) அவர்களுக்கே தூது அனுப்பினார்கள். அதற்கு உசாமாபின் சைத் (ரழி) அவர்களை தேர்ந்தெடுத்தார்கள். அவர்களின் பார்வையில் இவர் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு மிகவும் வேண்டியவர்.

இவருக்கு பெருமானார் (ஸல்) அவர்கள் இப்படி பதில் சொன்னார்கள் "என் மகள் பாத்திமாவே திருடி இருந்தாளென்றால் அவள் கையையும் துண்டித்திருப்பேன்". பெருமானார் (ஸல்) அவர்களுக்கு ஒரு மகள். அவள் பெயரும் பாத்திமாதான்.

பெருமானார் (ஸல்) அதை மக்களிடம் இப்படி கூறினார்கள் "நீங்கள் அல்லாஹ் தந்த வரையரைகளிலா தலையிட பார்கின்றீர்கள்"


"உங்களுக்கு முன்னாள் இருந்த சமுதாயத்தவர்கள் இப்படி தங்களுக்கு வேண்டியவர்களுக்கு ஒரு நியதி தங்களுக்கு வேண்டாதவர்களுக்கு ஒரு நியதி என வைத்துக் கொண்டதால்தான்" அழிந்து போனார்கள்.

இப்போது மோடியின் ஆட்சியின் கீழ் இந்தியாவும் நமது நீதித்துறையும் இப்படி தான் ஆகிவிட்டது. தங்களுக்கு வேண்டியவர்களுக்கு கொலைகளிலிருந்து விடுதலை. அத்தோடு பட்டம் பதவி பதக்கம் என தொடங்கிவிட்டார்கள்.

இந்த அநியாயங்கள் அகற்றப்பட்டு நீதி நிலைநாட்ட" என்மகள் பாத்திமாவே திருடினாலும் கையை வெட்டி இருப்பேன்" என முழங்கிய உத்தம நபிகள் அவர்கள். அவர்கள் அவனியோர் அனைவருக்கும் வழங்கிய நீதி நெறி அதன் ஆட்சி இங்கே நிலைநாட்டப்பட வேண்டும்.

فَلِذَٰلِكَ فَادْعُ وَاسْتَقِمْ كَمَا أُمِرْتَ وَلَا تَتَّبِعْ أَهْوَاءَهُمْ
وَقُلْ آمَنتُ بِمَا أَنزَلَ اللَّهُ مِن كِتَابٍ وَأُمِرْتُ لِأَعْدِلَ بَيْنَكُمُ
اللَّهُ رَبُّنَا وَرَبُّكُمْ
لَنَا أَعْمَالُنَا وَلَكُمْ أَعْمَالُكُمْ لَا حُجَّةَ بَيْنَنَا وَبَيْنَكُمُ اللَّهُ يَجْمَعُ بَيْنَنَا
وَإِلَيْهِ الْمَصِيرُ

எனவே, (நபியே! நேர்வழியின் பக்கம் அவர்களை) நீர் அழைத்துக் கொண்டே இருப்பீராக; மேலும், நீர் ஏவப்பட்ட பிரகாரம் உறுதியுடன் நிற்பீராக! அவர்களுடைய (இழிவான) மனோ இச்சைகளை நீர் பின்பற்றாதீர்; இன்னும், "அல்லாஹ் இறக்கி வைத்த வேதங்களை நான் நம்புகிறேன்; அன்றியும் உங்களிடையே நீதி வழங்கும்படியும் நான் ஏவப்பட்டுள்ளேன். அல்லாஹ்வே எங்கள் இறைவனாவான்; அவனே உங்களுடைய இறைவனும் ஆவான். எங்கள் செயல்கள் எங்களுக்கு; உங்கள் செயல்கள் உங்களுக்கு; எங்களுக்கும் உங்களுக்குமிடையே தர்க்கம் வேண்டாம் அல்லாஹ் நம்மிடையே (மறுமையில்) ஒன்று சேர்ப்பான், அவன் பாலே நாம் மீண்டு செல்ல வேண்டியிருக்கிறது" என்றும் கூறுவீராக. *42:15.*




இந்தியாவில் ஓர் இராணுவப் புரட்சி மூலம் இந்தியாவை இந்து ராஷ்டிரமாக அறிவித்திட வேண்டும். இந்திய அரசியல் நிர்ணய சட்டத்தையும் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்திய அரசையும் தூக்கிவிட வேண்டும் என்ற இந்துத்துவ தீவிரவாதிகளின் திட்டத்தைக் கண்டுபிடித்து உலகுக்கு அறிவத்தார். நேர்மையான மராட்டிய மாநில காவல்துறை அதிகாரி ஹேமந்த் கர்கரே! இதனால்தான் அவர் கொலை செய்யப்பட்டார். அது எப்படி? ஏன் என்பதை விளக்கும் நூல். ஓவ்வொரு குடிமனும் அவசியம் படிக்க வேண்டிய நூல்.

**வைகறை வெளிச்சம்**

**இதழில் விளம்பரம் செய்து பயனடையுங்கள்**

**வைகறை வெளிச்சம் சந்தாக்களை புதுப்பித்து பயனடையுங்கள்**

**வேர்கள் பதிப்பகம்**

ஆசிரியர்

**பாலஸ்தீன முஸ்லிம்கள் அகதிகளான வரலாறு**

**விலை ரூ.110**

**தாலிபான் பிடியில்**

**விலை ரூ.90**

# இஸ்ரேலை ஹமாஸ் விழ்த்தியது எப்படி?

✍ மௌலவி அபுல்ஹஸன் ஃபாஸி M.A.



கடந்த ஜுலை ஏழாம் தேதி முதல் சுமார் ஐம்பது நாட்கள் நடந்த இஸ்ரேல் காசா போர் எகிப்தை மத்தியஸ்தமாக கொண்ட பேச்சுவார்த்தைக்கு பின்பு ஆகஸ்ட் 26 ஆம் தேதி செவ்வாய் கிழமை இரவு நிரந்தர போர் நிறுத்தம் செய்வதாக ஹமாஸ் மற்றும் இஸ்ரேல் தரப்பினர் கையெழுத்திட்டதை தொடர்ந்து முடிவுக்கு வந்துள்ளது.

நீண்ட இழுபறிக்கு பின்பு ஹமாசின் கோரிக்கைகளை இஸ்ரேல் ஏற்றுக் கொண்டது. 26.08.14 செவ்வாய் கிழமை இரவு உள்ளூர் நேரப்படி இரவு 7.00 மணி (GMT நேரப்படி மாலை 4.00 மணி) க்கு போர் நிறுத்தம் செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

### அல்லாஹ்வின் உதவி கிடைத்த போர்

அல்குர்ஆனில் அல்லாஹ் கூறுவான். "எத்தனையோ சிறிய கூட்டத்தினர் பெரும் கூட்டத்தினரை வென்றிருக்கின்றனர். அல்லாஹ் பொறுமையாளர்களுடன் இருக்கின்றான்." (அல்குர்ஆன் 2:249) வரலாற்றில் நாம் கேள்விப்படுகிறோம். ஹிஜ்ரி இரண்டாம் ஆண்டு நடந்த பத்ரு யுத்தத்தில் முஸ்லிம்கள் எண்ணிக்கையிலும், ஆயுத வலிமையிலும்எதிரிகளைக் காட்டிலும் குறைவாகவே இருந்தார்கள். வாகனம் கூட மூன்று நபருக்கு ஒரு வாகனம் என்று தான் இருந்தது. ஆயுதங்கள் தான் சங்கைக்குரிய சஹாபாக்களிடம் குறைவாக இருந்ததே தவிர அவர்களின் உள்ளங்களில் அல்லாஹ்வின் மீதான நம்பிக்கையும், ஷஹாதத்தின் மீதான ஆசையும், அல்லாஹ்வின் மார்க்கத்தை காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணமும் நிறைவாகவே இருந்தது.

அவர்களுக்கு உதவி செய்வதை அல்லாஹ் நாடினான். பத்ருப் போரில் முஸ்லிம்கள் வெற்றி பெற்றார்கள்.
பத்ருப் போரில் வெளிப்பட்ட அல்லாஹ்வின் அற்புதம் காசா இஸ்ரேல் 2014 போரில் 'பகுத்தறிவு இஸ்லாம்' பேசப்படும் இக்காலத்திலும் மீண்டும் ஒருமுறை வெளிப்பட்டுள்ளது.

### இஸ்ரேலின் ஆயுத வலிமை

இப்போரில் உலகின் 'திறந்தவெளிச் சிறைச்சாலை' எனப்படும் காசா அப்பாவி மக்களுக்கு எதிராக தங்களின் அனைத்து சக்திகளையும் பயன்படுத்தியது இஸ்ரேல். தரைப்படை, விமானப்படை, கடற்படை என இஸ்ரேலின் முப்படைகளும் அப்பாவி காசா மக்களுக்கெதிராக களமிறக்கப்பட்டன.



விமானப் படையின் மூலம் 400 டன் எடையுள்ள குண்டுகள் குடியிருப்பு பகுதிகளில் வீசப்பட்டன. அது மட்டுமல்ல தடை செய்யப்பட்ட குண்டுகளையும் இஸ்ரேல் பயன்படுத்தியது. இஸ்ரேல் விமானப்படைத் தளபதி அமீர் எஷேல் (Amir Eshel) கடந்த 12.08.14 அன்று இவ்வாறு கூறியிருந்தார். பெரிய அளவில் குண்டுகள் வீசப்பட்டுள்ளன.இனிவரும் காலத்தில் காசா மக்கள் அதனை உணர்வார்கள்." (அல்குத்ஸ் யு.கே. 13.08.14)

கடல் வழியே உதவிகள் ஏதும் வராதபடி இஸ்ரேலிய கடற்படை தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டது. கடலில் மீன் பிடிக்கக்கூட முடியாமல் காசா மக்கள் உணவுக்கே அவதிப்பட்டார்கள். உலகின் மிக வலிமையான ராணுவம் என்று பீற்றிக் கொள்ளும் இஸ்ரேல் ராணுவம் தரைப்படையையும் இப்போரில் பயன்படுத்தியது. இதற்கு முன்னர் ஹமாசுக்கு எதிராக இஸ்ரேல் தரைப்படையை பயன்படுத்தியதில்லை.

வெறும் கற்களை வைத்து போராடும் பாலஸ்தீன மக்களுக்கெதிராக 14500 டாங்கிகள் களமிறக்கப்பட்டன. ஒரு நாளைக்கு ஆயிரம் டாங்கிகள், ஒரு மணி நேரத்திற்கு 42 டாங்கிகள் என்ற விகிதத்தில் அவற்றில் இருந்து 35 ஆயிரம் பீரங்கி குண்டுகள் காசா மக்களை நோக்கியும், ஹமாஸ் வீரர்களை நோக்கியும் சுடப்பட்டன.

முப்படைகளின் ராணுவ பலம், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் ஆதரவில் அரசியல் பலம், இத்தனைக்கும் மேலாக பொருளாதார பலம் என அனைத்திலும் வலிமையாக இருந்த இஸ்ரேல் இப்போரில் 20 பில்லியன் ஷேகலை பயன்படுத்தியது. (இஸ்ரேலிய பணமான 3.5 ஷேகல் (sheqel) ஒரு அமெரிக்க டாலருக்கு நிகரானது)

2008,2009ஆம் ஆண்டுகளில் காசாவுக்கு எதிராக நடந்த யுத்தங்களை விட நான்கு மடங்கு அதிகமாக காசாவின் மீது குண்டுகள் வீசப்பட்டன. பீரங்கித் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இதனை இஸ்ரேல் பாதுகாப்புத்துறை அமைச்சர் ஒப்புக் கொண்டுள்ளார். (ரஃயுல் யவ்ம்) யூதர்களின் அணியில் அரபு முஸ்லிம் சியோனிஸ்டுகள் காசாவின் மீது தரைப்படைத் தாக்குதல் நடத்துவதாக இஸ்ரேல் அறிவித்த பொழுது நாமும், உலகெங்கும் வாழும் இஸ்லாமிய இலட்சியவாதிகளும் காசா மக்களுக்கு என்ன நேருமோ? ஏது ஆகுமோ? என்று பயப்படவே செய்தோம்.

தரைப்படையை இறக்கினால் அதிசீக்கிரத்தில் காசாவை பிடித்து விடுவோம் என்று 2009 ஆம் ஆண்டில் இருந்து இஸ்ரேல் கூறி வந்தது.

2012 ஆம் ஆண்டு காசா இஸ்ரேல் போரில் வடக்கு காசாவில் தரைப்படையை நிறுத்தி வைத்து பயமுறுத்தியது இஸ்ரேல்.அப்போது ஹமாஸ் இவ்வாறு பதிலடி தந்தது.

"தரைப்படையை அனுப்பினால் எழ முடியாதளவு இஸ்ரேலை வீழ்த்துவோம். காசாவுக்கு வரும் இஸ்ரேல் வீரர்கள் பிணமாகத் தான் திரும்புவார்கள். போரில் இருந்து விரண்டோடினாலே தவிர."



இவ்வாறு ஒன்பது ஆண்டுகளாக காசாவை ஆக்கிரமிக்க வேண்டும் என்ற கனவை நனவாக்கவே திட்டமிட்ட முறையில் இஸ்ரேல் போர் தொடுத்தது. ஏற்கனவே அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் ஆதரவு இருந்து வந்த நிலையில், இம்முறை அரபு நண்பர்களும் அதற்கு கிடைத்து திருந்தார்கள். காசாவை அடித்து நொறுக்குவதற்கும், அங்கு வாழும் முஸ்லிம்களை சியோனிச பயங்கரவாதிகள் கொன்று குவிப்பதற்கும் இந்த அரபு நண்பர்கள் எல்லா வகையிலும் ஆதரவு தெரிவித்திருந்தார்கள்.

யூதர்களின் இந்த புதிய அரபு நண்பர்கள் யார்? என்பதை கடந்த ஏப்ரல், ஆகஸ்ட் வைகறை வெளிச்சம் இதழ்களில் தெளிவுபடுத்தியுள்ளோம்.

## அல்லாஹ்வின் வாக்குறுதி உண்மையானது

யூதர்களின் தரப்பில் முப்படைகளின் ராணுவ பலம், ஆயுத பலம், அரசியல் மற்றும் பொருளாதார வலிமை, அத்துடன் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் ஆதரவு, இதற்கெல்லாம் அப்பால் சவூதி, துபாய், எகிப்து, ஜோர்டான் நாடுகளின் மறைமுக ஆதரவு ஆகியவற்றுடன் களமிறங்கியது இஸ்ரேல்.

ஆனால் காசா மக்களின் நிலைமையோ அவ்வாறில்லை. 2006 ஆம் ஆண்டு முதல் காசா இஸ்ரேலினால் முற்றுகையிடப்பட்டிருந்தது.எகிப்தில் இக்வான்கள் இயக்கத்தைச் சார்ந்த டாக்டர் முஹம்மது முர்சி ஆட்சி கவிழ்ந்த பிறகு ரஃபா எல்லையை அடைத்து வைத்து தமது சியோனிச விசுவாசத்தை நிரூபித்தார் எகிப்து கொடுங்கோல் ஆட்சியாளர் சிஸி.

எட்டு ஆண்டுகளாக பொருளாதார முடக்கம், அரசு நிர்வாகம் ஸ்தம்பிப்பு, உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தகம் பாதிப்பு ஆகியவற்றால் காசா மக்கள் உணவுக்கே பெரும் அவதிப்பட்டனர்.

அம்மக்கள் நினைத்திருந்தால் உலக நன்மைகளை எண்ணிப் பார்த்து இஸ்ரேலுக்கு அடிபணிந்திருக்கலாம். அதைத் தான் இஸ்ரேலும், அமெரிக்காவும், ஐரோப்பாவும், எகிப்தும், சவூதியும், துபாயும் எதிர்பார்த்தன.

ஆனால் அவர்கள் உலக வாழ்க்கையை விடவும் மறுமை வாழ்க்கைக்கு முன்னுரிமை தந்தார்கள். அற்பமான இவ்வுலக இலாபங்களை கவனிக்காமல் முடிவில்லாத மறுமை வாழ்க்கையை தேர்ந்தெடுத்தார்கள். எதிரிகளின் முன் அடிபணிவதை விடவும் மரணம் மேலானது என்று கருதினார்கள். மொத்தத்தில் அல்லாஹ்வை அவர்கள் தேர்ந்தெடுத்தார்கள். அவனது எதிரியான ஷைத்தானை எதிர்த்தார்கள். பண பலம், படை பலம், ஆயுத பலம் இவற்றைக் காட்டிலும் அல்லாஹ்வின் மீதே அவர்கள் நம்பிக்கை வைத்தார்கள். அவனது உதவியே இறுதி வெற்றியை தரும் என்று முழுமையாக நம்பவும் செய்தார்கள். அல்லாஹ்வும் உதவி செய்வதை நாடினான். அவனது வாக்குறுதி உண்மையானது.

அல்லாஹ் கூறுகிறான். "நீங்கள் பயப்படாதீர்கள்.கவலைப்படாதீர்கள். நீங்கள் (உண்மை) முஃமின்களாக இருந்தால் நீங்கள் தான் உயர்ந்தவர்கள்." *(அல்குர்ஆன் 3:139)*

இன்னொரு வசனத்தில் அல்லாஹ் கூறுகிறான். " அல்லாஹ் உங்களுக்கு உதவி செய்தால் உங்களை யாராலும் வெற்றி கொள்ள இயலாது." *(அல்குர்ஆன் 3:160)*

முஃமின்கள் அல்லாஹ்வின் மீதும், மறுமை நாளின் மீதும் நம்பிக்கை வைத்து களத்தில் எதிரிகளை எதிர்த்து நிற்கும் பொழுது உதவி செய்வதை கடமை என்றே படைத்த ஏக இறைவன் அறிவித்துள்ளான்.

அல்லாஹ் கூறுகிறான். " முஃமின்களுக்கு உதவி செய்வது நம் மீது கடமையாகும்." (அல்குர்ஆன் 30:47) இன்னொரு வசனத்தில் அல்லாஹ் கூறுகிறான். " பின்பு நமது தூதர்களுக்கும், முஃமின்களுக்கும் நாம் வெற்றியைத் தந்தோம்.
.

இவ்வாறே முஃமின்களுக்கு உதவி செய்வது நம் மீது கடமையாகும்." (அல்குர்ஆன் 10:103) இப்போரில் காசா மக்களும், ஹமாசும் பெற்ற வெற்றியை அல்லாஹ்வின் அற்புதம் என்றும், அவனது பகிரங்கமான உதவி என்று தான் சொல்ல வேண்டும்.
திருக்குர்ஆனிலும், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் வாழ்விலும், சங்கைக்குரிய சஹாபாக்களின் ஆட்சிக் காலத்திலும் நாம் கேள்விப்பட்ட 'அல்லாஹ்வின் உதவி' மீண்டும் ஒருமுறை நமது காலத்தில் வாழும் உண்மையான முஜாஹிதீன்களுக்கு கிடைத்துள்ளது. ஆம். இஸ்லாம் தான் சத்திய மார்க்கம் என்பது மீண்டும் ஒருமுறை நிரூபிக்கப்பட்டுள்ளது.

இப்போரின் தொடக்கத்தில் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு சவால் விட்டார். மிக விரைவில் காசாவை அடிமைப்படுத்தி விடுவோம் என்று. இதற்கு முன்னர் 1956 ஆம் ஆண்டு நடந்த இஸ்ரேல் எகிப்து போரில் ஒரு மணி நேரத்தில் காசாவை அது கைப்பற்றவும் செய்திருந்தது.

ஆனால் இப்போரில் 51 நாட்களாகிய பின்னரும் காசாவின் ஓர் அடி நிலத்தைக் கூட இஸ்ரேலினால் கைப்பற்ற முடியவில்லை. கடந்த காலங்களில் அரபு நாடுகள் அனைத்தும் ஒன்றிணைந்து போரிட்ட சமயத்தில் கூட இஸ்ரேலை தோற்கடிக்க முடியவில்லை. ஆனால் தனக்கென தனி ராணுவ அமைப்பு ஏதுமில்லாத ஹமாஸ் தன்னந்தனியாக களத்தில் நின்று இஸ்ரேலை தோற்கடித்துள்ளது.
ஏனெனில், ஹமாசின் ராணுவப் பிரிவான 'இஸ்சுத்தீன் கஸ்ஸாம்' மற்ற நாடுகளில் இருப்பது போன்று சம்பளம் பெற்று தனியாக இயங்கும் ராணுவ அமைப்பு அல்ல..

மாறாக பொதுமக்களும், அரசு ஊழியர்களும் தான் அதன் அங்கத்தினர். போர்க் காலத்தில் மட்டுமே அவர்கள் ராணுவ வீரர்களாக மாறுவார்கள். மற்ற காலத்தில் தங்களின் பணிகளையே அவர்கள் கவனிப்பார்கள். அவர்களை வைத்து தான் உலகின் மிக வலிமையான ராணுவம் என்று பெருமை பாராட்டப்பட்ட இஸ்ரேல் ராணுவம் தோற்கடிக்கப்பட்டுள்ளது.

நிச்சயமாக இது அல்லாஹ்வின் உதவியே அன்றி வேறில்லை. அல்லாஹ் கூறுகிறான். " ஈமான் கொண்டவர்களே! நீங்கள் அல்லாஹ்வுக்கு உதவி செய்தால் அல்லாஹ் உங்களுக்கு உதவி செய்வான். உங்களின் பாதங்களை (யுத்தங்களில்) நிலைப்படுத்துவான்." (அல்குர்ஆன் 47:7)

## காசா இஸ்ரேல் போர் 2014 : போருக்கான காரணம்

கடந்த ஜுன் 18 ஆம் தேதி மேற்குகரையில் உள்ள கலீல் நகரில் மூன்று இஸ்ரேலியஇளம் வயதினர் காணாமல் போயினர். அதற்கு ஹமாஸ் தான் காரணம் என்று பழி சுமத்திய இஸ்ரேல் அதற்கு பழிவாங்கப் போவதாக அறிவித்தது.

ஹமாஸ் அரசியல் பிரிவின் தலைவர் வீரமகன் காலித் மிஷ்அல், இஸ்ரேலியர்கள் காணாமல் போனதற்கும் எங்களுக்கும் சம்மந்தமில்லை என்றார்.

காசா மீது போர் தொடுப்பதற்கு கடந்த ஒரு வருட காலமாக சந்தர்ப்பம் எதிர்பார்த்திருந்த இஸ்ரேல், இப்பிரச்சினையை காரணம் காட்டி போர் தொடுத்தது. இதனை கடந்த மாத (ஆகஸ்ட்) வைகறை வெளிச்சம் இதழில் விரிவாக எழுதியுள்ளோம்.

### இஸ்ரேலின் மிருகத்தனமான தாக்குதல்

இஸ்ரேலில் இருந்து தான் காசாவுக்குள் பெட்ரோலும், மின்சாரமும் வருகிறது. எனினும் காசாவினுள் இஸ்ரேலினால் அத்துமீறி நுழைய முடியவில்லை. இது பன்னெடுங்காலமாக இஸ்ரேலுக்கு நெருடலை தந்து வந்தது.

எப்படியாவது காசாவை அடிமைப்படுத்தி விட வேண்டும். காசாவினுள் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டிட வேண்டும். இதுவே இஸ்ரேலின் எண்ணம். அதனை செயல்படுத்திட ஜூலை ஏழாம் தேதி விமானத் தாக்குதலை அது தொடங்கியது.

### ஹமாசின் அரசியல் வெற்றி

தாக்குதலை தொடங்கிய சமயத்தில் ஹமாசை இஸ்ரேல் குறைவாகவே மதிப்பிட்டது. தாக்குதலை ஓரிரு நாட்களில் முடித்துக் கொண்டு விடலாம் என்று தப்புக் கணக்குப் போட்டது.

அதனடிப்படையில் தான் மிக விரைவாக காசாவை அடிமைப்படுத்தி விடலாம் என்ற எண்ணத்தில் தரைப்படையையும் இஸ்ரேல் களத்தில் இறக்கியது.

ஆனால் ஹமாசின் வியூகம் வேறு விதமாக இருந்தது. ஆரம்பத்தில் அரசியல் ரீதியில் வெற்றி பெறுவதின் மீதே கவனம் செலுத்தியது. ஆதலால் முதலில் அதுதாக்குதல் யுத்தத்தை நடத்தவில்லை. மாறாக தற்காப்பு யுத்தத்தையே நடத்தியது.

இஸ்ரேலின் மிருகத் தனத்தால் காசாவில் பெண்கள் குழந்தைகள் உட்பட அப்பாவி மக்கள் இறந்த பொழுது காசாவுக்கு ஆதரவாக உலகெங்கும் குரல்கள் ஒலிக்கத் தொடங்கின.

மீடியாக்களிலும், சமூக வலைதளங்களிலும் இஸ்ரேலுக்கு எதிராக கண்டனக் குரல்கள் எழும்பின. அல்ஜஸீராவும், துருக்கி ஊடகங்களும் முழுக்க முழுக்க பாலஸ்தீனத்துக்கு ஆதரவாக நின்றன. இஸ்ரேலின் பயங்கரவாதத்தை அம்பலப்படுத்தின.

ஒரு கட்டத்தில் துருக்கி அதிபர் டாக்டர் ரஜப் தய்யிப் எர்துகான் அவரே மீடியாவாக மாறினார். இஸ்ரேலுக்கு எதிராக பெரும் குரல் எழுப்பினார். ஒரு சில பேட்டிகளில் கண்ணீர் விட்டு கதறி அழுதார். இஸ்ரேலை பயங்கரவாத நாடு என்று அறிவித்தார் . எர்துகானின் வார்த்தைகள் சர்வதேச அரசியலில் பெரும் அதிர்வுகளை ஏற்படுத்தின.

விளைவு அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஊடகங்கள் இஸ்ரேலின் மிருகத்தனத்தை மறைத்த போதிலும் நமது இந்தியாவின் ஹிந்து நாளிதழ் , ஃப்ரன்ட்லைன் இதழ் உட்பட உலகின் பிரபல ஊடகங்கள் 'இஸ்ரேலின் அரச பயங்கரவாதம்' என்ற சொல்லை உபயோகிக்கத் தொடங்கின.

அமெரிக்கா உட்பட உலகம் முழுவதும் எல்லா நாடுகளிலும் இஸ்ரேலின் அரச பயங்கரவாதத்திற்கெதிராக முஸ்லிம்கள் மட்டுமின்றி மதப் பாகுபாடின்றி எல்லா மக்களும் குரல் கொடுத்தனர்.

பல்வேறு நாடுகளின் நாடாளுமன்றங்களில் இஸ்ரேலுக்கெதிராக குரல் எழுப்பப்பட்டது. தென்னாப்பிரிக்க நாடாளுமன்றத்தில் அந்நாட்டின் ஆளும் கட்சியான ஆப்பிரிக்க நேஷனல் காங்கிரஸ் சார்பில் நாடாளுமன்றத்தில் கண்டனத் தீர்மானம் கொண்டு வரப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

பொலிவியா, சிலி, பெரு ஆகிய நாடுகள் இஸ்ரேலுக்கான தூதர்களை வாபஸ் பெற்றன. பொலிவியா இஸ்ரேலை பயங்கரவாத நாடாக அறிவித்தது. அத்துடன் ஏற்கனவே அமலில் இருந்த விசா நடைமுறைகளை ரத்து செய்வதாகவும் அறிவித்தது. 1972 முதல் இஸ்ரேலியர்கள் விசா இன்றி பொலிவியா சென்று வரலாம் என்று சலுகை தந்த நாடு பொலிவியா என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் இப்போர் சுமார் எட்டாண்டு காலமாக காசா இஸ்ரேலினால் முற்றுகையிடப்பட்டிருந்ததை வெளிச்சத்துக்கு கொண்டு வந்தது. இஸ்ரேலின் ‘காசா மீதான முற்றுகை’ உலக அளவில் அதற்கு எதிரான மனநிலையை ஏற்படுத்தியது.
அத்துடன் பெண்கள், குழந்தைகள் உட்பட அப்பாவி மக்களை கொன்றது சர்வதேச அளவில் இஸ்ரேலுக்கு பெரும் அவப்பெயரை உருவாக்கியது.

சர்வதேச அரங்கில் இஸ்ரேல் கூனிக் குறுகி நின்றது. விளைவு ஹமாசுக்கெதிரான இஸ்ரேலின் பிரச்சாரம் எடுபடாமல் போனது. இது அரசியல் ரீதியில் ஹமாசின் வெற்றியே.

### தொடங்கியது ஹமாசின் தாக்குதல்

தன்னிச்சையாக போரைத் தொடங்கிய இஸ்ரேல் ஹமாசை பணியச் செய்திட முடியும் என்று எதிர்பார்த்தது. தரைப்படைத் தாக்குதலையும் தொடுத்துப் பார்த்தது. ஆனால் ஹமாஸ் பணியவில்லை.

வடக்கு காசா பகுதியில் இஸ்ரேலின் தரைப்படையை எதிர்கொண்ட ஹமாஸ் ‘தற்காப்பு யுத்தம்’ என்ற அடிப்படையில் இஸ்ரேலின் நகரங்கள் மீது ஏவுகணைகளை வீசியது.
சர்வதேச அரங்கில் அரசியல் ரீதியில் வெற்றி கிடைப்பதை உறுதி செய்த பிறகே ‘தாக்குதல்’ யுத்தத்தை தொடங்கியது ஹமாஸ்.

தரைப்படைத் தாக்குதலில் இஸ்ரேல் வீரர்களை அது திணறடித்து வந்த நிலையில், இஸ்ரேலிய நகரங்கள் மீது தொடர்ந்து ஏவுகணைகள் எறியப்பட்டன.

இஸ்ரேல் தலைநகரமான டெல்அவிவ், வட மத்திய நகரமான நெதன்யா (Netanya), ஆக்கிரமிப்பு (மேற்கு) ஜெருசேலம், இஸ்ரேலில் அணுஉலைகள் அமைந்துள்ள திமானா நகரம் (Dimona), தெற்கு இஸ்ரேலில் உள்ள அஷ்தூத் (Ashdod), பீர்சபா (Beersheba), அஸ்கலான் (Ashkelon), பீர்சபாவுக்கும் காசாவுக்கும் மத்தியிலுள்ள நெடிவோட் (Netivot), அஃபாகிம் (Ofakim) மத்திய இஸ்ரேலில் உள்ள கன்யவனா (Gan Yavne), கர்யத் மலாகி (Kiryat Malakhi) கர்யத் கேட் (Kiryat Gat) ரிசோன் லிசைன் (Rishon LeZion) ஆகிய நகரங்கள் மீது ஏவுகணை மழையை பொழிந்தது ஹமாஸ்.

மேலும் இஸ்ரேல் ராணுவ தலைமையகமான ‘டிசலாம்’ இன் மீதும், விமானப் படை தலைமைகயகமான ‘பனீ ஷம்ஊன்’ இன் மீதும் 665 எண்ணிக்கையில் ரஷ்ய தயாரிப்பான கிராத் (Grad) ராக்கெட்கள்எறியப்பட்டன.

மேலும் தெற்கு டெல்அவிவ் நகரில் உள்ள சுரக் ("Tsurak) அணுஉலைகள் மீது மட்டும் 100 பர்ராக் வகை ராக்கெட்கள், 72 பர்ராக் வகை ஏவுகணைகள். 5 அல்ஃபஜ்ரு ஏவுகணைகள் எறியப்பட்டன. (Source: ஹமாசின் அதிகாரப்பூர்வ அறிவிப்பை மேற்கோள்காட்டி அல்குத்ஸ் யு.கே.நாளிதழ் 29.08.14)

19.08.14 அன்று ஹமாஸ் இஸ்ரேல் இடையிலான நான்காவது போர்நிறுத்தம் முறிந்த பிறகு ஹமாசின் ஏவுகணை தாக்குதல் இன்னும் வேகமடைந்தது.19 ஆம் தேதிக்கு பிறகு ஒரு நாளைக்கு 100 ஏவுகணைகள் வீதம் காசாவில் இருந்து இஸ்ரேலை நோக்கி வீசப்பட்டன.21ஆம் தேதி மட்டும் சுமார் 150 எறிகணைகள் எறியப்பட்டன. (அல்குத்ஸ் யு.கே. 22.08.14)

போர் நிறுத்தம் முறிந்த பிறகு இஸ்ரேல் தலைநகர் டெல்அவிவ் இல்உள்ள பென்குரியன் விமான நிலையத்தின் மீது அதிகமாக ஏவுகணைகள் எறியப்பட்டன. விமான நிலையத்தில் இருந்து 100 மீட்டர் தொலைவில் ஏவுகணைகள் விழுந்தன. இதனால் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் விமான சேவையை தற்காலிகமாக நிறுத்தின. மேலும் இஸ்ரேலில் அமைந்துள்ள அணுஉலைகளின் மீதும் ஏவுகணை தாக்குதலை நடத்தியது ஹமாஸ். விளைவு அணுஉலைகள் பாதுகாப்பாக உள்ளன என்று சர்வதேச சமூகத்திடம் சொல்ல வேண்டிய கட்டாயம் இஸ்ரேலுக்கு ஏற்பட்டது.

19.08.2014 அன்று இஸ்சுத்தீன் கஸ்ஸாம் தளபதி முஹம்மது ளைஃப் இஸ்ரேலின் தாக்குதலில் கொல்லப்பட்டார்.அதற்கு பிறகு ஹமாசின் தாக்குதல் இன்னும் அதிகரித்தது.'யடியோத் அஹ்ரானத்'(Yedioth Ahronoth )எனும் ஹிப்ரு மொழி பத்திரிக்கை தெரிவிக்கின்றது. "20.08.14 அன்று மட்டும் 160 ஹாவுன்வகை ஏவுகணைகளை வீசி இஸ்ரேல் மீது ஹமாஸ் தாக்குதல் நடத்தியது." 21.08.14 அன்று காசாவைச் சேர்ந்த சில துரோகிகளால் ஹமாஸ் தலைவர்கள் ராயித் அத்தார், முஹம்மது பர்ஹூம், முஹம்மது ஷிமாலா ஆகியோர் இஸ்ரேலின் விமானத் தாக்குதலில் குறிவைத்து கொல்லப்பட்டனர்.

இம்மூவரும் தங்கியிருந்த இடத்தை இஸ்ரேலுக்கு காட்டிக் கொடுத்த 18 பேருக்கு மக்கள் முன்னிலையில் தூக்குத் தண்டனை தந்தது ஹமாஸ். இச்சம்பவத்துக்கு பின்பு ஹமாசின் தாக்குதல்கள் இன்னும் வேகமானது. இஸ்ரேலின் மீது 24 மணி நேரமும் ராக்கெட்கள் எறியப்பட்டன.

இஸ்ரேலின் அதிகாரப்பூர்வ அறிவிப்பின்படி நான்கு சிவிலியன்கள், 65 வீரர்கள் உட்பட 69 பேர் இறந்ததாக அறிவிக்கப்பட்டது. காயமடைந்தவர்களின் எண்ணிக்கையை இஸ்ரேல் அறிவிக்கவில்லை.

இஸ்ரேலில் உள்ள பீர்சபா நகரில் உள்ள சுராகா மருத்துவமனையில் (Soroka Medical Center) 2522 பேர் யுத்தக் காலத்தில் காயங்களுக்கு சிகிச்சை பெற்றதாகவும், அவர்களில் 740 பேர் வீரர்கள் எனவும் அம்மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்தது. (ரஷ்து நாளிதழ்28.08.14) ஹமாசின் தொடர் ஏவுகணை தாக்குதலால் சுமார் 8000 வீடுகள் சேதமடைந்ததாக இஸ்ரேல் அறிவித்தது.

### ஆடிப்போனது இஸ்ரேல்

ஒரு கட்டத்தில் ஹமாசின் தொடர் ஏவுகணை தாக்குதலால் இஸ்ரேல் நிலைகுலைந்தது. இத்தனைக்கும் Iron Dome எனப்படும் இரும்பு தடுப்பு கவசம் நாடு முழுவதும் பொருத்தப்பட்டுள்ளது என்று சர்வதேச அரங்கில் பெருமையடித்த நாடு இஸ்ரேல்.

எங்கள் நாட்டை யாராலும் தாக்க முடியாது. எங்கள் நாட்டின் வான்வெளி பாதுகாப்பானது. Iron Dome எனப்படும் ஏவுகணை தடுப்பை எங்களின் வான் எல்லை முழுவதும் அமைத்துள்ளோம். எதிரி நாட்டில் இருந்து ஏவப்படும் ஏவுகணைகளை 'ஏவுகணை தடுப்புக் கருவிகள் வழிமறித்து தன்வசம் இழுத்து விடும் என்றெல்லாம் கதை அளந்தது இஸ்ரேல்.

இதனை நம்பி ஏழு நாடுகள் இந்த ஐயன் டூம் (Iron Dome) டெக்னாலஜியை வாங்குவதற்கு திட்டமிட்டதாகவும் கூறப்பட்டது. (Soruce : FRONTLINE 22.08.14) ஹமாசின் ஏவுகணை தாக்குதலின் முன்பு இந்த ஐயன் டூம் செயல்படாமல் போனது. 29.08.14ம் தேதி வெளியிடப்பட்ட ஹமாசின் அதிகாரப்பூர்வ அறிவிப்பின்படி யுத்தம் நடந்த 51 நாட்களில் சுமார் 3249 ஏவுகணைகளை ஹமாஸ் வீசியிருந்தது. அதில் 692 ஏவுகணைகள் மட்டுமே ஐயன் டூம் கருவியினால் வழிமறிக்கப்பட்டன. மற்ற அனைத்தும் இலக்கினை சரியான முறையில் தாக்கிடவே செய்தன.

ஹமாசின் ஏவுகணை வீச்சினால் இஸ்ரேல் திணறியது எனலாம். 'தங்களின் அரசு பாதுகாக்கும்'என்ற இறுமாப்பில் போர் தொடங்கிய சமயத்தில் இஸ்ரேல் விமானங்கள் காசா மீது குண்டுகள் வீசுவதை குன்றுகளில் ஏறி நின்று ரசித்த இஸ்ரேலியர்கள் ஹமாசின் ஏவுகணைகள் இஸ்ரேலிய நகரங்களை தாக்கிய பொழுது அலறித் துடித்தார்கள்.

ஹமாசின் ஏவுகணைத் தாக்குதலுக்கு அஞ்சி தரையில் பதுங்கிய இஸ்ரேலிய ராணுவ வீரர்கள் பயத்தில் ஆடையில் சிறுநீர் கழித்து, அவர்களின் கீழாடை (பேண்ட்) பின்பகுதியில் ஈரமாக இருந்ததை அரபு நாளிதழ் ஒன்று புகைப்படமாக வெளியிட்டிருந்தது.

இஸ்ரேலிய பொதுமக்கள் மட்டுமல்ல.. இஸ்ரேலிய ராணுவ வீரர்கள், இஸ்ரேலிய தளபதிகள், இஸ்ரேலிய அரசியல்வாதிகளும் கூட ஹமாசின் தாக்குதலினால் நிலைகுலைந்தார்கள். அவர்களின் ஒவ்வொரு நடமாட்டத்தையும் துல்லியமாக கண்டறிந்து ஹமாஸ் தாக்குதல் நடத்தியதே அதற்கு காரணம். இஸ்ரேல் ராணுவ விவகாரங்கள் ஆய்வாளர் 'அமாஸ் ஹரல்'(Amos Harel) கூறியதாக ஹார்சட் இஸ்ரேலிய நாளிதழ் தெரிவிக்கின்றது.

"தெற்கு இஸ்ரேலில் உள்ள 'நஹல் ஓஸ்' (Nahal Oz) நகரில் ஒருவர் ஏவுகணை வீச்சில் பலியானார்.அவரைப் பார்க்க ராணுவ தளபதி 'பின்யாமின் பென்னி கென்ட்ஸ்'(Binyamin "Benny" Gantz) சென்றார். அவரின் வருகையை அறிந்து, அக்கிராமத்தின் மீது ஏவுகணையை வீசியது ஹமாஸ். அதில் ராணுவ தளபதி காயமுற்றார். இது மிகப்பெரும் அதிர்ச்சியைத் தருகின்றது.

மேலும் அதற்கு முன்னதாக தனக்கென தனி பாதுகாப்பு படையை வைத்துள்ள கூட்டுத் தொழில் அமைப்பினரான 'கிப்புட்ஸ்' (kibbutz) அமைப்பினர் வசித்து வரும் 'டகானியா'(Degania) நகருக்கு வந்தார் பென்னி. தொழில்துறை அமைப்பினரான அவர்களை சந்தித்து பாதுகாப்பின் மீது நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும் என்பதே அவரின் வருகையின் நோக்கமாக இருந்தது. ஆனால், அவர் அங்கு வருவதற்கு முன்பு ஒன்பது தடவையும் வந்து போன பிறகு ஒரு தடவையும் ஹமாஸ் 'ஹாவுன்' வகை ஏவுகணையை வீசித் தாக்குதல் நடத்தியது.



கட்டுப்பாடும், பாதுகாப்பும் அதிகம் நிறைந்த கிப்புட்சில் கூட இஸ்ரேல் ராணுவ தளபதி வருவதை மறைக்க இயலவில்லை.

கிப்புட்ஸ் மக்களுக்கு தைரியத்தை தரவும், பாதுகாப்பின் மீது நம்பிக்கையை ஏற்படுத்தவும் தான் தலைமைத் தளபதி அங்கு சென்றார். அங்கு போன பிறகு அவரின் பாதுகாப்பே கேள்விக்குறியானது.

மேலும் தென்பகுதி ராணுவ கமாண்டர் ‘சாமி தர்ஜமான்’ (Sami Turgeman) ‘கிப்புட்ஸ்ட்’ மக்கள் வசிக்கும் தொழிற்பேட்டைக்கு சென்றார். அச்சமயத்தில் ‘நகல் ஓஸ்’ (Nahal Oz) நகரையும், கிப்புட்சையும் ஏவுகணைகளைவீசித் தாக்கியது ஹமாஸ். ஹமாசின் ஏவுகணை வீச்சில் இருந்து தப்பிக்க ‘தர்ஜமான்’ பதுங்கி ஓடியதை இஸ்ரேலின் ஹிப்ரு தொலைக்காட்சியான ‘சேனல் 10’ ஒளிபரப்பி இஸ்ரேலின் பலவீனத்தை வெளிப்படுத்தியது கடைசியில் ராணுவ அதிகாரிகள் வருவதால் தான் கிப்புட்சின் மீது தாக்குதல் நடத்தப்படுகிறது எனறானது. விளைவு கிப்புட்ஸ் உரிமையாளர்கள் இஸ்ரேல் ராணுவ அதிகாரிகள் தயவு செய்து வரவேண்டாம் என்றார்கள். ஆதலால் தான் பாதுகாப்பு அமைச்சர் ‘ஷாஉல் யாலோன்’ தமது ‘கிப்புட்ஸ்’ வருகையை ரத்து செய்தார்.” (ஹார்சட் இஸ்ரேலிய நாளிதழை மேற்கோள் காட்டி ரஃயுல் யவ்ம் அரபு நாளிதழ் 24.08.14)

இதன் மூலம் இஸ்ரேலின் உளவுத்துறையான மொசாத்தை விட தமது உளவுத்துறை வலிமையானது என்பதை நிரூபித்தது ஹமாஸ்.

ஹமாஸ் தலைவர்களின் இருப்பிடங்களை இஸ்ரேலுக்கு காட்டிக் கொடுத்த துரோகிகளை உடனே கண்டறிந்து அவர்களை மக்கள் முன்னிலையில் ஹமாசினால் தூக்கிலிட முடிந்தது. இஸ்ரேலுக்குள் இருந்து தகவல்கள் தரும் ஹமாஸ் உளவாளிகளை இஸ்ரேலினால் இன்று வரை கண்டறிய முடியவில்லை. ஆக அரசியல், பொருளாதாரம், ராணுவம், உளவுத்துறை என அனைத்திலும் இஸ்ரேலை விஞ்சியது ஹமாஸ்.

போரை நிறுத்திட கெஞ்சிக் கூத்தாடிய இஸ்ரேல் ஏற்கனவே ஹமாசின் தொடர் ஏவுகணைத் தாக்குதலால் பீதியில் உறைந்து போயிருந்த இஸ்ரேலியர்களுக்கு ராணுவத் தளபதி காயமடைந்தது, ராணுவ கமாண்டர் ஹமாசின் தாக்குதலுக்கு பதுங்கி ஓடியது போன்ற செய்திகள் மேலும் அவர்களை கதிகலங்கச் செய்தது.

நெதன்யாகு அரசின் மீது நம்பிக்கை இழந்த அவர்கள், வீதிகளில் இறங்கி போரை நிறுத்தும்படி அரசுக்கெதிராக ஆர்ப்பாட்டம் செய்யத் தொடங்கினார்கள்.

13.08.14ம் தேதி தொடங்கிய ஐந்து நாட்கள் போர் நிறுத்தம் 18.08.14 ஆம் தேதியுடன் முடிவடைவதையும், ஹமாசின் கோரிக்கைகளை இஸ்ரேல் ஏற்காத நிலையில் மீண்டும் போர் தொடரலாம் என்பதையும் அறிந்து சுமார் 1000 இஸ்ரேலியர்கள் டெவ்அவிவ் நகரில் நிரந்தர போர் நிறுத்தம் வேண்டி ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்.

ஆர்ப்பாட்டத்தில் ‘நிரந்தர போர் வேண்டாம்’ என்று கோஷமிடப்பட்டது. துருக்கியின் டெய்லி சபாஹ் நாளிதழ் இதனை புகைப்படத்துடன் வெளியிட்டிருந்தது. (டெய்லி சபாஹ் 18.08.14)



மேலும் இஸ்ரேலை பொறுத்தவரை சில நாட்கள் தாக்குதல் நடத்தினால் ஹமாசை ஒடுக்கி விடலாம் என்று தான் நினைத்திருந்தது. நீண்ட நாட்கள் போர் செய்திடும் திட்டம் அதனிடம் இல்லை தான்.

ஏற்கனவே அது நினைத்தபடி ஹமாஸ் பணியாத பொழுது எப்படியாவது போரை நிறுத்தி விடலாம் என்றே நினைத்தார் இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு. 12.07.14 அன்று எகிப்துடன் பேச்சுவார்த்தை நடத்தியதாக கூறி, தன்னிச்சையாக போர் நிறுத்தம் அறிவித்துப் பார்த்தார்.

ஆனால் போர் நிறுத்தத்தினை ஹமாஸ் சம்மதிக்கவில்லை. எகிப்தின் மத்தியஸ்தை ஏற்க முடியாது என்று அறிவித்த ஹமாஸ், துருக்கி மற்றும் கத்தார் நாடுகள் அமைதிப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வதை நிபந்தனையிட்டது.

எப்படியாவது போரை நிறுத்தி இஸ்ரேலை அழிவில் இருந்து காப்பாற்றியாக வேண்டும் என்று துடித்த அமெரிக்கா, பிரான்ஸ் தலைநகர் பாரிசில் அமைதிப் பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்தது. இதனை கடந்த ஆகஸ்ட் மாத வைகறை வெளிச்சம் இதழில் தெளிவாக எழுதியுள்ளோம்.

பாரீஸ் பேச்சுவார்த்தையின் போது போரை நிறுத்திட ஹமாஸ் பின்வரும் நிபந்தனைகளை வகுத்தது.

☞ காஸா மீதான இஸ்ரேலிய முற்றுகையை முழுமையாக விலக்கி கொள்ளுதல்.

☞ சர்வதேச நாடுகளின் மேற்பார்வையின் கீழ் காஸா புனரமைப்பு.

☞ மின்சார பிரச்சினைகளை முழுவதுமாக காஸாவின் கட்டுப்பாட்டில் கொண்டு வருதல்.

☞ காஸாவுக்கான கடல் எல்லையில் 96 கடல் மைல்கள் வரை சென்று மீன் பிடிக்கும் உரிமை.

☞ நிதி தடைகளை முழுவதுமாக நீக்குதல்.

☞ போர் தொடங்குவதற்க்கு முன் இருந்த அமைதியை இரு தரப்பும் அப்படியே தொடர்வது.

☞ துறைமுகம், விமான நிலையம், நிதி, மற்றும் நீதி நிர்வாகங்களை காஸா மக்களே சுதந்திரமாக செயல்படுத்திக் கொள்வது.

இஸ்ரேல் ராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட பலஸ்தீன் போராளிகள் அனைவரையும் விடுதலை செய்வது இந்நிபந்தனைகளை ஏற்கவில்லையெனில், நாங்கள் போரிடத் தயார் என்று அறிவித்தார் வீரமகன் காலித் மிஷ்அல். வெளியுலகில் வாய்ச்சவடலாகப் பேசிய நெதன்யாகு, பேச்சுவார்த்தை நடத்தி போரை முடித்து வைக்குமாறு எகிப்திடம் கெஞ்சினார். கடந்த மார்ச் மூன்றாம் தேதி (03.03.14) கோர்ட் மூலம் ஹமாசை பயங்கரவாத இயக்கமாக அறிவித்திருந்தார் எகிப்து கொடுங்கோல் ஆட்சியாளர் சிஸி. ஆரம்பத்திலிருந்து ஹமாசுடன் பேசுவதை மறுத்து வந்த சிஸி, இஸ்ரேல் மன்றாடியதால் ஹமாசுடன் பேச ஒப்புக் கொண்டார்.



### போரை நிறுத்த வேண்டிய நிர்பந்தம் ஏன்?

நெதன்யாகு தொடங்கிய இப்போர் தொடக்கத்தில் இஸ்ரேலிலுள்ள சிலரால் வரவேற்கப்பட்டாலும் ஹமாஸ் தமது தாக்குதலை தீவிரப்படுத்திய பொழுது 'பயனற்ற போர்' என்று இஸ்ரேல் ஊடகங்களால் விமர்சிக்கப்பட்டது. போரின் தொடக்கத்தில் 82% ஆதரவு நெதன்யாகுவுக்கு இருந்தது. நாட்கள் செல்லச் செல்ல அது கொஞ்சம் கொஞ்சமாக இறங்கி 29% ஆனது. போரை நிறுத்த வேண்டும் என்று ஆகஸ்ட் மாத தொடக்கத்தில் இருந்தே இஸ்ரேலில் இருந்து குரல்கள் ஒலிக்கத் தொடங்கின.

இஸ்ரேலின் பாதுகாப்புத்துறை திட்டமிடல் இயக்குனர் 'எகுத் உதி தேகல்'(Ehud "Udi" Dekel) டெல்அவிவ் நகரில் உள்ள தேசிய பாதுகாப்பு கல்வி நிலையத்தில்( Institute for National Security Studies) ஓர் ஆய்வறிக்கையை தாக்கல் செய்தார். அதில் கூறியிருப்பதாவது,

"இப்போரில் ஹமாஸ் காசாவின் மீது தனது ஆதிக்கத்தை ஏற்க வேண்டும் என்பதையும், காசா முற்றுகையை நீக்குவதையும் கோரி வருகிறது.அதனை ஏற்கவில்லையெனில், நீண்ட காலப் போருக்கு அது தயாராகவே உள்ளது. அதே நேரத்தில் இஸ்ரேல் ஹமாசிடமிருந்து ஆயுதங்களை பறிக்க வேண்டும் என்று கூறுகிறது. ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். போரை நிறுத்தாமல் தொடர்வது பல சிக்கல்களை ஏற்படுத்தும். அதிகமான அப்பாவி பாலஸ்தீனர்கள் கொல்லப்படுவதற்கும், இஸ்ரேலிய வீரர்களை இழப்பதற்கும் காரணமாக வேண்டி வரும்.

மேலும் போரை இடையில் சில நாட்கள் நிறுத்தி விட்டு, பின்பு தொடர்வது எதிர்மறையான அனுகூலங்களையே ஏற்படுத்துகிறது. போர் நிறுத்த காலங்களில் ஹமாஸ் தன்னை வலிமைப்படுத்தி விடுகிறது போர் நிறுத்தங்கள் நிச்சயமாக ஹமாசை அதனுடைய நிபந்தனைகளில் இருந்து கீழே இறங்கச் செய்யவில்லை. போர் நிலைகளில் மனஉறுதி கொண்ட வீரர்கள் மற்றும் ஆயுத பலம் ஆகியவற்றில் அது வலிமையாகவே உள்ளது." (ரஃயுல் யவ்ம் 12.08.14) ஹமாசின் நிபந்தனைகளுக்கு உட்பட்டால் தான் போரை நிறுத்த முடியும். இல்லையெனில், ஹமாஸ் போரை நிறுத்தாது என்பதை தெரிந்து கொண்ட பிறகு நிபந்தனைகளை ஏற்க முன்வந்தது இஸ்ரேல்.

ஹமாசின் கோரிக்கைகளை ஏற்ற இஸ்ரேல் மேற்கண்ட ஹமாசின் எட்டு நிபந்தனைகளையும் இஸ்ரேல் ஏற்பதாக எகிப்து கூறிய பிறகு எகிப்துக்கும் ஹமாசுக்கும் ஒப்பந்தம் கையெழுத்தானது. ஒப்பந்தத்தை கண்காணிக்கும் பொறுப்பு எகிப்திடம் வழங்கப்பட்டது.



*26.08.14* செவ்வாய் கிழமை இரவு ஏழு மணி முதல் போர் நிறுத்தம் அமலுக்கு வந்தது.காசாவில் உள்ள எல்லா பள்ளிவாசல்களிலும் தக்பீர் முழங்கப்பட்டது. காசாவிலும், மேற்கு கரையிலும் முஸ்லிம்கள் வெற்றி ஊர்வலங்களை நடத்தினார்கள். *12.08.14* ஐந்து மணி நேரம், ஜுலை *26,27*தேதிகளில் இரண்டு நாட்கள், *05.08.14* முதல் மூன்று நாட்கள், *13.08.14* முதல் ஐந்து நாட்கள் என நான்கு முறை தற்காலிக போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டு, ஹமாசின் கோரிக்கைகள் ஏற்கப்பட்ட பின்பு ஐந்தாவது முறையாக நிரந்தரப் போர் நிறுத்தம் அமல்படுத்தப்பட்டுள்ளது.

### பேச்சுவார்த்தையின் போது அவமானப்பட்ட இஸ்ரேல்

பேச்சுவார்த்தையில் மத்தியஸ்தராக பங்காற்றிய எகிப்து, ஹமாஸ் மற்றும் பதஹ் தூதுக் குழுவினரையும், இஸ்ரேல் பிரதிநிதிகளையும் நேரடியாக ஒன்றாக ஓரிடத்தில் வைத்து பேச்சுவார்த்தை நடத்தவில்லை. ஓரிடத்தில் பாலஸ்தீனப் பிரதிநிதிகளையும், மற்றொரு இடத்தில் இஸ்ரேல் பிரதிநிதிகளையும் எகிப்து அதிகாரிகள் சந்தித்து, ஒரு தரப்பினரின் கருத்துக்களை மற்றொரு தரப்பினரிடம் எடுத்தரைப்பது போன்றே பேச்சவார்த்தைகள் நடைபெற்றன.

பேச்சுவார்த்தையின் போது பலமுறை எகிப்து அதிகாரிகளால் இஸ்ரேல் பிரதிநிதிகள் நீண்ட நெடிய நேரம் காத்திருக்க வைக்கப்பட்டனர். பேச்சுவார்த்தையின் போது இஸ்ரேல் பிரதிநிதியாக செயல்பட்டவர் 'அமாஸ் கிலாட்' **(Amos Gilad)**.

அரசியல் மற்றும் ராணுவ விவகாரங்கள் துறை இயக்குனரான இவர் இஸ்ரேல் தொலைக்காட்சியான 'சேனல் *10*' இல் *28.08.14* அன்று ஒரு நேர்காணலில் கூறியதாவது, "பாலஸ்தீன தூதுக் குழுவினருடன் நாங்கள் நடத்திய பேச்சுவார்த்தையில் அழுத்தங்கள் அதிகமிருந்தன. நாங்கள் நேரடியாக ஹமாசுடன் பேசவில்லை. எகிப்து அதிகாரிகளுடன் தான் பேசினோம். அவர்கள் தான் எங்களின் கருத்துக்களை அவர்களிடமும், அவர்களின் கருத்துக்களை எங்களிடமும் பரிமாற்றம் செய்தார்கள்.

ஓரிடத்தில் நீண்ட நேரம் காத்திருக்க வைக்கப்படுவது ஏமாற்றுவதற்குரிய சூத்திரங்களில் ஒன்று. அவ்வாறு தான் நாங்கள் காத்திருக்க வைக்கப்பட்டோம். எனினும் எகிப்தின் மீது நாங்கள் சந்தேகப்படவில்லை. ஹமாசுடன் நாங்கள் நேரடியாக பேசியிருந்தால் போர் நிறுத்தம் ஏற்பட்டிருக்காது." (அல்குத்ஸ் யு.கே. *28.08.14*) ஆக போரை நிறுத்திட அனைத்து வகையான அவமானங்களையும் பொறுத்துக் கொண்டது இஸ்ரேல் தூதுக் குழு.

### சதித்திட்டங்களை முறியடித்த எர்துகானும் பாலஸ்தீன மக்களும்

இப்போரில் பாலஸ்தீன அதிபர் மஹ்மூது அப்பாஸின் ஃபதஹ் இயக்கத்தையும், ஹமாஸ் இயக்கத்தையும் பிரிப்பதற்கு இஸ்ரேலும், எகிப்தும், சவூதியும் திட்டமிட்டன.

நிச்சயமாக இத்தகைய நரித்தனத்தில் இவர்கள் ஈடுபடுவார்கள் என்பதை நன்கறிந்திருந்தார் தற்போதைய முஸ்லிம் உம்மாவுக்கு கிடைத்த சிறந்த தலைவரான துருக்கி அதிபர் டாக்டர் ரஜப் தய்யிப் எர்துகான். போர் தொடங்கியவுடன் ஹமாஸ் அரசியல் தலைவர் காலித் மிஷ்அல் உடன் தொடர்பு கொண்ட எர்துகான், பாலஸ்தீன அதிபர் மஹ்மூத் அப்பாசை துருக்கி வரவழைத்தார். ஹமாஸ் ஃபதஹ் இயக்கங்கள் இறுதிவரை ஓரணியில் நிற்க வேண்டும் என்று அவரிடம் வலியுறுத்தினார்.

**ஃபதஹ் ஹமாசை பிரிக்க சதி**

12.07.14 அன்று இஸ்ரேல் தன்னிச்சையாக அறிவித்த போர் நிறுத்தத்தின் போது எகிப்து ஃபதஹ் இயக்கத்தை மட்டும் அழைத்து பேச்சுவார்த்தை நடத்தியது. ஹமாஸ் தடை செய்யப்பட்ட இயக்கம் என்பதால் அதனுடன் பேச இயலாது என்று வெளிப்படையாக அறிவித்தார் எகிப்து கொடுங்கோல் ஆட்சியாளர் சிஸி. பேச்சுவார்த்தையை ஹமாஸ் நிராகரித்தது. இத்தகைய சதி எதிரிகளின் தரப்பில் இருந்து வரும் என்று ஏற்கனவே ஃபதஹ் இயக்கம் அறிவுறுத்தப்பட்டிருந்ததால் ஹமாஸ் இன்றி பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள இயலாது என்று பாலஸ்தீன அதிபர் அப்பாஹ் அறிவித்தார்.

**இஸ்ரேல், எகிப்து, சவூதியின் திட்டங்கள் தவிடு பொடியானது.**

ஹமாசுடன் பேச இயலாது என்று எகிப்து அறிவித்த சமயத்தில், ரஃபா எல்லையை அடைத்து வைத்து பாலஸ்தீன மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் கூட கிடைக்காமல் ஆக்கிடும் எகிப்துக்கு பாலஸ்தீன மக்களின் விஷயத்தில் பேச உரிமை இல்லை என்றார் எர்துகான். அத்துடன் எகிப்து இன்றி பாரிஸ் பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்தார் அவர். மேலும் சர்வதேச அரங்கில் சிஸியின் செயலை எர்துகான் அம்பலப்படுத்தியதால் எகிப்து முழுவதும் போராட்டங்கள் வெடித்தன. விளைவு பேச்சுவார்த்தையில் ஹமாஸை பிரதிநிதியை சேர்க்க வேண்டிய கட்டாயம் எகிப்துக்கு ஏற்பட்டது.

**ஹமாசையும் பாலஸ்தீன மக்களையும் பிரிக்க சதி**

ஹமாசையும் ஃபதஹ் இயக்கத்தையும் பிரிப்பதில் தோல்வியடைந்த இஸ்ரேல் அணியினர் ஹமாசை விட்டு பாலஸ்தீன மக்களை பிரிப்பதற்கு முயற்சித்தனர்.

இஸ்ரேல் அமைதிப் பேச்சுவார்த்தைக்கு தயாராக இருப்பதாகவும், ஹமாசின் பிடிவாதத்தினால் தான் போர் நீடிக்கின்றது என்றும் இஸ்ரேல் ஊடகங்கள் மட்டுமல்ல.. எகிப்து ஊடகங்களும் குற்றம் சுமத்தின.

ஹமாசுக்கெதிரான இப்பிரச்சாரத்தில் சவூதி மன்னர் அப்துல்லாஹ்வின் மருமகனும், தற்போதைய சவூதி வெளியுறவுத்துறை அமைச்சரின் சகோதரருமான அமீர் துருக் ஃபைசலும் குதித்தார்.

'ஷர்க் அவ்சத்' நாளிதழுக்கு அவர் எழுதிய கட்டுரையில் இவ்வாறு குறிப்பிட்டார்." தற்போதைய போருக்கு ஹமாஸ் தான் காரணம். போர் நிறுத்தம் செய்யாமல் தேவையற்ற நிபந்தனைகளை விதித்து ஹமாஸ் ஆணவம் பிடித்து திரிகின்றது. ஹமாசின் ஏவுகணைகள் இஸ்ரேலை எதுவும் செய்யாது." (தக்ரீர் அரபு நாளிதழ்) காண்க :வைகறை ஆகஸ்ட் பக் 36)

இச்சமயத்தில் மக்கா ஹரம் இமாம்களான அப்துர் ரஹ்மான் சுதைசி, ஷெய்கு ஷுரைம், ஷெய்கு சாலிஹ் இப்னு தாலிப், மஸ்ஜிதுன் நபவீ இமாம் ஷெய்கு சலாகுல் புதைர் மற்றும் 86 சவூதி இஸ்லாமிய அறிஞர்கள் காசா மக்கள் ஹமாசின் பின்னால் நிற்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தனர். (காண்க: வைகறை ஆகஸ்ட் பக் 39,40)

**நெதன்யாகுவுக்கு சுதைசி கடும் கண்டனம்**

சவூதி, எகிப்து நாடுகளை வைத்து காசா மக்களையும் ஹமாசையும் பிரிக்க முடியாமல் போகவே இதில் நேரடியாக

குதித்தார் இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு. கடந்த வாரம் காசா மக்களுக்கு இவ்வாறு அறிவிப்பு செய்தார்.



"போர் நடக்கும் இடங்களில் இருந்து காசா மக்கள் காலி செய்ய வேண்டும். போரில் ஹமாசை மக்கள் தனியாக விட வேண்டும். அப்பாவி மக்களை கொல்வது எங்களின் நோக்கமல்ல..மக்களை வைத்து ஹமாஸ் போரை நீட்டித்து வருகிறது. "தொடர்ந்து பேசிய நெதன்யாகு கடைசியில் இப்படிச் சொன்னார். "எங்களுடன் அரபுகள் உள்ளனர்."

நெதன்யாகுவுக்கு சவூதி இஸ்லாமிய அறிஞர்களான ஷெய்கு முஹம்மது அரீஃபீ, ஷெய்கு சல்மான் அவ்தா, புனித மக்கா ஹரம் ஷரீம் தலைமை இமாம் ஷெய்கு அப்துர் ரஹ்மான் சுதைசி ஆகியோர் தங்களின் ட்விட்டர் மற்றும் ஃபேஸ்புக் வலைத்தளங்களில் 'குல்லுனா ஹமாஸ்' (நம்மில் ஒவ்வொருவரும் ஹமாஸ்) என்று பதிவிட்டனர்.

மேலும் நெதன்யாகுவின் பேச்சுக்கு சுதைசி இவ்வாறு பதிலடி தந்தார். "யூதர்களில் அருவருப்பானவனே, யூத ஷைத்தானே! அல்லாஹ்வின் விரோதியே! நீ பொய் சொல்கிறாய்.

அரபுகள் உன்னுடன் இல்லை. மாறாக அரபுகளும், முஸ்லிம்களும் உனக்கும், உனக்கு ஊழியம் செய்பவர்களுக்கும் எதிராக தங்களின் சகோதரர்களுடன் தான் உள்ளனர்." (அல்முஜ்தமா வார இதழ் 22.08.14)

**ஹமாசின் பின்னால் ஓரணியில் நின்ற பாலஸ்தீன மக்கள்**

அல்குர்ஆனில் அல்லாஹ் கூறுகிறான். "எத்தனையோ சிறிய கூட்டத்தினர் பெரும் கூட்டத்தினரை வென்றிருக்கின்றனர். அல்லாஹ் பொறுமையாளர்களுடன் இருக்கின்றான்." அல்குர்ஆன் 2:249) இன்னொரு வசனத்தில் அல்லாஹ் கூறுகிறான். " ஈமான் கொண்டவர்களே நீங்கள் பொறுமையை கடைபிடியுங்கள். ஒருவொருக்கொருவர் சகித்துக் கொள்ளுங்கள். நீங்கள் (எல்லோரும்) இணைந்து நில்லுங்கள். அல்லாஹ்வை அஞ்சுங்கள். நீங்கள் வெற்றியாளர்களாக ஆவீர்கள்." (அல்குர்ஆன் 3:200)

மேற்கண்ட இரண்டு வசனங்களும் யுத்தங்கள் தொடர்பானவை. வல்லோன் அல்லாஹ் யுத்தங்களில் பொறுமையையும், ஒற்றுமையையும் வெற்றிக்கு அடித்தளமாக கூறுகிறான். இது விஷயத்தில் ஹமாசின் பின்னால் ஓரணியில் உறுதியாக நின்ற மேற்குகரை மக்களையும், காசா மக்களையும் நாம் பாராட்டியாக வேண்டும். இஸ்ரேலின் மிருகத்தனமான தாக்குதலினால் கடந்த 51 நாட்களில் 2145 காசா மக்கள் பலியானார்கள். 11 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் படுகாயமடைந்தனர். 4,75,000மக்கள் போரினால் பாதிக்கப்பட்டனர்.

மேலும் குண்டு வீச்சில் காசாவிலுள்ள 55,000 வீடுகள் சேதமடைந்தன. அதில் 17,200 வீடுகள் முழுமையாக சேதமடைந்தன. சுமார் 70 பள்ளிவாசல்கள், பள்ளிக்கூடங்கள் முழுமையாக தரைமட்டமாயின. அது மட்டுமல்ல.. போர்க்காலத்தில் அன்றாடம் உணவுக்கே காசா மக்கள் அவதிப்பட்டனர். குடிநீரின்றி, மின்சாரமின்றி இரவில், பகலில் உறங்கக் கூட முடியாமல் அவர்கள் பட்ட வேதனைகள் ஏராளம்.

அத்தனை இழப்புகளுக்கு மத்தியில் அந்த மக்கள் உறுதியாக நின்றார்கள். போர் நிறுத்தம் வேண்டும் என்றோ , போருக்கு ஹமாஸ் தான் காரணம் என்றோ அவர்கள் ஒரு வார்த்தைக் கூட பேசவில்லை.

இது விஷயத்தில் அவர்கள் மூச்சு விட்டால் கூட அதனை பன்மடங்காக திரித்து எழுதுவதற்கு சியோனிச ஊடகங்கள் காத்துக் கிடந்தன. உலகமே அவர்களின் ஈமானைக் கண்டு அதிசயித்தது. அவர்களையும், ஹமாசையும் பிரிப்பதற்கு சியோனிஸ்டுகளும், முஸ்லிம் பெயர்களில் வாழும் அரபு சியோனிஸ்டுகளும் முயற்சிக்கவே செய்தனர். ஹமாசையும், முஜாஹிதீன்களையும் கொச்சைப்படுத்தி சில அரபு சியோனிச ஊடகங்கள் பல பக்கங்களில் எழுதவே செய்தன.

இவ்வாறு எழுதி அவர்கள் தங்களை அடையாளப்படுத்திக் கொண்டார்களே தவிர காசா மக்களும், சர்வதேச இஸ்லாமியர்களும் அவர்களை கிஞ்சிற்றும் பொருட்படுத்தவில்லை. ஹமாசுக்கெதிராக ஒரு வார்த்தையைக் கூட கூறவும் இல்லை.

அல்லாஹ் கூறுகிறான். “ நிச்சயமாக அல்லாஹ்வின் பாதையில் ஈயத்தால் உருக்கி வார்க்கப்பட்ட கட்டிடத்தைப் போன்று (உறுதியாக நின்று) அணிவகுத்து போரிடுபவர்களை அல்லாஹ் நேசிக்கின்றான்.” (அல்குர்ஆன் 61:4)

### சத்தியத்தின் அணியில் கத்தார்



அரசியல் மற்றும் ராணுவ ரீதியில் காசா மக்களும், ஹமாசும் மிகப் பெரிய வெற்றியடைந்ததற்கு துருக்கி, கத்தார், ஈரான் ஆகிய நாடுகளே மிக முக்கியமான காரணமாகும். இக்வான்களுக்கும், ஹமாசுக்கும், உலகெங்கும் வாழும் இஸ்லாமிய அறிஞர்களுக்கும், புதிதாக இஸ்லாத்தை ஏற்று, ஏதேனும் இஸ்லாமிய ஆராய்ச்சித் துறையில்ஆராய்ச்சி செய்ய நாடுபவர்களுக்கும் நீண்ட நெடிய காலம் உதவி செய்து வரும் நாடு கத்தார். இவ்விடம் கத்தார் அமீர் தமீமைப் பற்றி நாம் தெரிந்தாக வேண்டும். 34 வயது வாலிபரான இவர் இஸ்லாமிய உலகின் மிகச் சிறந்த அரசியல் அறிவுஜீவியாக உருவெடுத்துள்ளார். இவர் கடந்த 2013 ஜுன் மாதம் தான் அமீராக பதவியேற்றார். பதவியேற்றவுடன் மூன்று பிரச்சினைகளை சந்தித்தார். ஒன்று இக்வான்கள் பிரச்சினை, இரண்டாவது டாக்டர் யூசுஃ.ப் அல் கர்ளாவி பிரச்சினை, மூன்றாவது ஹமாஸ் பிரச்சினை.

### இக்வான்கள் பிரச்சனை.

இவர் பதவியேற்ற ஜுன் மாதத்தில் எகிப்தில் இக்வான்களின் ஆட்சி வீழ்த்தப்பட்டது. தொடர்ந்து இக்வான்கள் இயக்கம் அங்கு பயங்கரவாத இயக்கமாக அறிவிக்கப்பட்டது.

அமீர் தமீம் எகிப்துக்கான கத்தார் தூதரை வாபஸ் பெற்றார். மேலும் இப்படி அறிவித்தார். இக்வான்கள் இயக்கம் பயங்கரவாத இயக்கம் அல்ல . அதற்கு கத்தார் தொடர்ந்து உதவி செய்யும் என்றார்.

### கர்ளாவி பிரச்சனை

டாக்டர் யூசுஃப் அல்கர்ளாவீ எகிப்தையும், துபாயையும் ஜும்ஆ பயானில் கண்டித்து பேசியதை காரணம்





காட்டி சவூதி, துபாய், பஹ்ரைன் நாடுகள் தங்களின் தூதர்களை கத்தாரில் இருந்து வாபஸ் பெற்றன. திரும்பவும் தூதரக உறவு வேண்டுமெனில், கர்ளாவியை நாட்டை விட்டு வெளியேற்ற வேண்டும். கர்ளாவியின் கல்வி நிலையத்தை மூட வேண்டும். அல்ஜஸீரா தொலைக்காட்சியை கட்டுப்படுத்திட வேண்டும் என அந்நாடுகள் நிபந்தனையிட்டன.

மேலும் சவூதி அரேபியா இன்னும் ஒருபடி மேலே போய், இக்வான்களுக்கு தொடர்ந்து ஆதரவளித்தால் காசாவை முற்றுகையிட்டதைப் போன்று கத்தாரை முற்றுகையிடுவோம் என்று மிரட்டியது.
கத்தார் அமீர் தமீமுக்கு இது 'அரசியல் பரீட்சை' என்றே சர்வதேச ஊடகங்கள் எழுதின. தமீம் இது விஷயத்தில் துருக்கி சென்று எர்துகானின் நேரடி ஆலோசனையை பெற்றார். தொடர்ந்து துனூஷியா, அல்ஜீரியா நாடுகளுக்கு பயணம் செய்தார்.

அரசியல் நெருக்கடியை மிகவும் வெற்றிகரமாக சமாளித்தார். கர்ளாவியை நாட்டை விட்டுவெளியேற்றவும் இல்லை. இக்வான்களுக்கான உதவியை நிறுத்தவும் இல்லை. (காண்க வைகறை 2014 ஏப்ரல், மே இதழ்கள்)

## ஹமாஸ் பிரச்சினை

கடந்த 2013 ஆம் மார்ச் மூன்றாம் தேதி எகிப்து கோர்ட் ஹமாஸ் இயக்கத்தை தடை செய்தது. இக்வான்களின் ஆட்சி வீழ்த்தப்பட்ட பின்பு ஹமாசின் அரசியல் தலைவர் காலித் மிஷ்அல் கத்தார் வந்தார்.

ஹமாஸ் விஷயத்தில் சவூதியும், எகிப்தும் தொடர்ந்து கத்தாருக்கு நெருக்கடி தந்தன. 'நான் வேண்டுமானால் கத்தாரை விட்டு செல்கிறேன்' என்று அறிவித்தார் காலித் மிஷ்அல் (அல்குத்ஸ் யு.கே. 11.03.14) மிஷ்அல் கத்தாரை விட்டு செல்ல வேண்டாம் என்ற தமீம், காசாவுக்கு 110 மில்லியன் டாலர்கள் உதவி செய்வதாக அறிவித்தார்.

இவ்வாறு பதவியேற்றவுடன் ஏற்பட்ட முக்கியமான மூன்று பிரச்சினைகளில் எதிரிகளுக்கு அடிபணியாமல் அரசியல் ரீதியில் வெற்றி கண்ட அவர், காசா இஸ்ரேல் 2014 போரில் முஸ்லிம் உம்மத் வெற்றி பெறுவதற்கும் காரணமாகியுள்ளார்.

## கத்தார் மீது இஸ்ரேல் குற்றச்சாட்டு

தற்போதைய காசா இஸ்ரேல் போரில் ஹமாசின் சார்பில் கத்தார் பலமாக நின்றது. மீடியாவில் அதிகம் பேசாத தமீம், அரசியல் ரீதியில் இஸ்ரேலை ஒடுக்குவதற்கு முன்னணியில் நின்றார். அத்துடன் ஹமாஸ் இயக்கம் வெற்றிகரமாக செயல்படுவதற்கு பெரிய அளவில் பண உதவியும் செய்தார்.

கடந்த 22.07.14 அன்று கத்தார் தீவிரவாதத்தை ஆதரிக்கும் நாடு என்று இஸ்ரேல் ஜனாதிபதி சிமன் பெரஸ் குற்றம் சுமத்தியதையும், அதற்கு துருக்கி பிரதமர் ரஜப் தய்யிப் எர்துகான் பதிலளித்ததையும் கடந்த ஆகஸ்ட் மாத வைகறை இதழில் எழுதியிருந்தோம்.

## ஐ.நா.வில் இருந்து கத்தாரை நீக்க வேண்டும்

இஸ்ரேல் ஐ.நா.வுக்கான இஸ்ரேல் தூதர் 'ரோன் பிராசர்' (Ron Prosor ). இவர் இரு தினங்களுக்கு முன்பு நியூயார்க் டைம்ஸ் நாளிதழுக்கு கட்டுரை எழுதியிருந்தார்.

அதில் அவர் கூறியிருப்பதாவது, கத்தார் தொடர்ந்து ஹமாசுக்கு ஆதரவாகவே நிற்கின்றது. போர் நீடிப்பதற்கு கத்தாரின் ஆதரவே முக்கிய காரணமாக உள்ளது. பிரச்சினையை தீர்க்கும் நாடாக கத்தார் இல்லை. மாறாக பிரச்சினையை ஏற்படுத்தும் நாடாகவே அது உள்ளது.

ஹமாசுக்கு பண உதவி செய்வதை கத்தார் நிறுத்த வேண்டும். கத்தார் மில்லியன் கணக்கில் டாலர்களை காசாவுக்கு தருகின்றது. கத்தார் தரும் பணம் தான் ராக்கெட்களாகவும், ஏவுகணைகளாகவும் மாறுகின்றன.

கத்தாரில் இருந்து செயல்படும் 'அல்ஜஸீரா தொலைக்காட்சி' ஊடகப் பணியை செய்யவில்லை. மாறாக அது இரத்தங்களை கழுகும் வேலையை செய்கிறது.

ஆதலால் கத்தாரை ஐ.நா.வில் இருந்து நீக்குவதற்கு இஸ்ரேலின் சார்பில் நாங்கள் முறையிடுவோம்." ( அல்ஜஸீரா *25.08.14*) முன்னதாக எகிப்து கொடுங்கோல் ஆட்சியாளர் சிஸியும், இஸ்ரேல் வெளியுறவுத்துறை அமைச்சர் லிபர்மேனும் ஒரு நாள் முன்னதாக *24.08.14* அன்று அல்ஜஸீராவுக்கு கண்டனம் தெரிவித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**காசாவுடன் நிற்போம் கத்தார் அமீர்**

ரோன் பிராசரின் புகார் குறித்து கத்தார் அமீரிடம் நிருபர்கள் கேட்டனர். அதற்கு அவர் இவ்வாறு பதிலளித்தார்.." நாங்கள் காசாவுடன் நிற்கிறோம். இனி வருங்காலத்திலும் காசாவுடன் தான் நிற்போம்." (அல்ஜஸீரா *25.08.14*)

**மறக்க இயலாத ஈரானின் உதவி**

இப்போரில் இஸ்ரேலை மண்டியிட வைத்ததில் ஈரான் அளித்த ஆயுதங்களே முக்கியப் பங்காற்றின. ராணுவ ரீதியில் இஸ்ரேலை பாலஸ்தீன மக்கள் வென்றதற்கு ஈரான் தான் காரணம் என்றால் மிகையில்லை. ஈரானின் பர்ராக் ஏவுகணைகளும், ஃபஜ்ரு ஏவுகணைகளும், ஹாவுன் ராக்கெட்களும் இஸ்ரேலியர்களின் தூக்கத்தை தொலைத்தன. ஈரான் வழங்கிய தொழில் நுட்பத்தினால் காசாவுக்குள் நுழைந்த ஆளில்லா விமானத்தையும் ஹமாஸ் தரையிறக்கியது. (அல்குத்ஸ் யு.கே. *25.08.14*)

போரின் இறுதிக் கட்டத்தில் காசாவுக்குள் நுழைந்த இஸ்ரேலிய விமானங்களை ஹமாசின் ராக்கெட்டுகள் துரத்தின. அவை இஸ்ரேலிய போர் விமானங்களை தாக்கவில்லை என்றாலும் வருங்காலத்தில் காசாவுக்குள் விமானத்தில் இருந்து குண்டு வீச இயலாத நிலை ஏற்படலாம் எனும் அச்சத்தை அவை இஸ்ரேலுக்கு ஏற்படுத்தின.

மேலும் உள்நாட்டிலேயே ஆயுதங்கள் தயாரிக்கும் தொழில்நுட்பத்தை ஹமாசுக்கு வழங்குவோம் என்று அறிவித்தார் ஈரான் விமானப் படைத் தளபதி சர்தார் ஹாஜி அலி. தொடர்ந்து அவர் கூறியதாவது,"இனி வருங்காலத்தில் இஸ்ரேல் விமானங்கள் காசாவின் மீது குண்டு போட முடியாதளவு ஆயுதங்களை காசாவுக்கு வழங்குவோம்." என்றார். (ரஃயுல் யவ்ம்) இவ்வாறு பல வகையில் பாலஸ்தீன மக்களுக்கு உதவி செய்தது ஈரான்.

காசா வெற்றி குறித்து கடந்த *29.08.14* அன்று கத்தார் தலைநகர் தோஹாவில் நிருபர்கள் சந்திப்பை நடத்தினார் ஹமாஸ் அரசியல் பிரிவு தலைவர் காலித் மிஷ்அல். தமது பேட்டியில் ஈரானை நினைவு கூர்ந்த மிஷ்அல், ஈரானின் உதவிகளை எங்களால் மறக்க இயலாது என்றார். தொடர்ந்து மிஷ்அல் கூறியதாவது,

கடந்த நூற்றாண்டில் இருந்து ஈரான் பாலஸ்தீன மக்களுக்கு பொருளாதார உதவிகளையும், ஆயுத உதவிகளையும் செய்து வருகிறது.

எங்களுக்கும் ஈரானுக்கும் கருத்து வேறுபாடு இருக்கவே செய்தது. எனினும் சியோனிச எதிரியின் முன்பு எங்களை ஈரான் கைவிடவில்லை.

"சியோனிச ஆபத்தின் முன்பு உம்மத்தின் நலனுக்காக நாங்கள் ஒன்றுபட்டோம். கருத்து வேறுபாடுகளையும், சித்தாந்த மோதல்களையும் நாங்கள் தூக்கி எறிந்தோம். எங்களுக்குள் இருந்த கருத்து வேறுபாடு 'முஸ்லிம் உம்மத்' என்ற அடிப்படையில் நாங்கள் இணைவதை விட்டும் எங்களை தடுக்கவில்லை.

இப்போதும் எங்களுக்கும் ஈரானுக்கும் கருத்து வேறுபாடு இருக்கத் தான் செய்கிறது. ஆனால் நிச்சயமாக அது பாலஸ்தீன விவகாரத்தில் இல்லை. சியோனிசத்திற்கெதிரான போரில் பாலஸ்தீனமோ, ஹமாசோ, ஈரானோ வெற்றி பெறவில்லை. மாறாக இப்போரில் முஸ்லிம் உம்மத் வெற்றி பெற்றுள்ளது. "
(ரஃயுல் யவ்ம் 25 29 .08.14)

### நெஞ்சை நெகிழச் செய்யும் எர்துகான்

இப்போரில் அரசியல் ரீதியில் ஹமாஸ் வெற்றி பெற்றதற்கும், உலகெங்கும் காசா மக்களுக்கு அனுதாபம் ஏற்பட்டதற்கும் துருக்கி பிரதமர் டாக்டர் ரஜப் தய்யிப் எர்துகான் தான் என்றால் மிகையில்லை.



என்றால் எரர்துகான் தான் அதனை முடித்து வைத்தார். ஹமாசின் பின்னால் நின்று போரை இயக்கிய அவர், ஹமாசுக்கு சாதகமாக அதனை முடித்து வைத்தார்.

போர் நின்ற பிறகு உலகெங்கும் வாழும் முஸ்லிம்களின் சார்பில் நிவாரணங்களை முதல் ஆளாக காசாவுக்கு அனுப்பியவரும் அவரே.

### காசா மக்களுக்கு துருக்கியில் இலவச சிகிச்சை

போர் நிறுத்தம் செய்யப்பட்ட பின்பு கடந்த 09.08.14 அன்று இவ்வாறு அறிவித்தார் எர்துான். காயமடைந்த அனைத்து காசா மக்களுக்கும் எல்லா விதமான சிகிச்சைக்கும் பொறுப்பேற்கிறோம்". (காண்க வைகறை ஆகஸ்ட் இதழ்)

09.08.14 அன்று திங்கட் கிழமை மட்டும் சுமார் 200 பேர் விமானம் மூலம் துருக்கி கொண்டு செல்லப்பட்டனர்.காயமடைந்த காசா மக்களை ஏற்றி துருக்கி வந்த முதல் விமானத்தை இஸ்தான்பூல் விமான நிலையத்துக்கு நேரில் வந்து வரவேற்றார் துருக்கி வெளியுறவுத்துறை அமைச்சர் அஹ்மது தாவூத் அவ்குலு.

### பாலஸ்தீன மக்களுக்கு எகிப்தின் துரோகம்

காசா பகுதியில் படுகாயமுற்று மேல்சிகிச்சை தேவைப்படும் மக்களை துருக்கி கொண்டு வந்து சிகிச்சை அளித்து வருகின்றது துருக்கி அரசு.
09.08.14 (திங்கட்கிழமை )முதல் துருக்கி விமானங்கள் காயமுற்றவர்களை துருக்கி அழைத்து வரும் பணியில் ஈடுபட்டுள்ளன.

இந்நிலையில், பாலஸ்தீனத்துக்கு உதவ வேண்டிய பக்கத்து நாடு எகிப்து எல்லா வகையிலும் இஸ்ரேலுடன் இணைந்து துரோகம் செய்து வருகின்றது. ஆம்புலன்ஸ் விமானங்கள் தரை இறங்க துருக்கி அனுமதி கேட்டும் இதுவரை எகிப்து அனுமதி தரவில்லை. இது விஷயத்தில் இஸ்ரேலை எகிப்து விஞ்சி விட்டது.

துருக்கி அதிபர் வீரமகன் ரஜப் தய்யிப் எர்துகான் ஐ.நா வின் ஒப்புதலுடன் ஐ.நா வழியாக பேசி விமானங்கள் தரை இறங்க இஸ்ரேலை சம்மதிக்க வைத்து விட்டார்.

காசாவில் இருந்து காயமுற்றவர்கள் டெல்அவிவ் நகருக்கு கொண்டு செல்லப்பட்டு அந்நகரில் உள்ள பென்குரியன் (Ben Gurion Airport) சர்வதேச விமான நிலையம் வழியாக துருக்கி ராணுவ விமானங்களில் துருக்கி கொண்டு செல்லப்படுகின்றனர். அரபு சியோனிஸ்டு சிஸி இஸ்ரேலிய சியோனிஸ்டு நெதன்யாகுவை விஞ்சி விட்டார்.

கொடுங்கோலன் சிஸியையும், அவரை ஆட்சியில் அமர்த்திய சவூதி அரேபியாவையும், சிஸிக்கு வால் பிடித்து நிற்கும் ஸலஃபிகளையும் என்னவென்று சொல்வது? இவர்கள் யார்? முஸ்லிம் உம்மத் புரிந்து கொள்ள வேண்டும். (அல்குத்ஸ் பிரஸ் 13.08,14)

**துருக்கி மக்களின் தாராளம்**

துருக்கி மருத்துவமனைகளில் காசா மக்களுக்கு சிகிச்சைக்கான செலவுகளை அரசே ஏற்கும் என்று எர்துகான் அறிவித்துள்ள நிலையில், துருக்கி மக்கள் நாங்கள் ஏற்கிறோம் என்று ஒவ்வொருவரும் தனித்தனியாக அறிவித்து வருகின்றனர்.

காசா மக்களுக்கு உதவ முடியாத நிலையில் உள்ள நமக்கு இச்செய்திகள் ஆறுதலை தருகின்றன. துருக்கி மக்களை அல்லாஹ் வளமாக்குவானாக..

**ஈரான் மருத்துவமனைகளில் சிகிச்சை தருவோம்**

ஈரான் துருக்கியைப் போன்றே காயமடைந்த காசா மக்களுக்கு ஈரான் மருத்துவமனைகளில் இலவச சிகிச்சை தருவதாக ஈரான் அரசு அறிவிக்கவே செய்தது.

துருக்கியைப் போன்றே ஈரானுக்கும் எகிப்து அனுமதி வழங்கவில்லை. இது குறித்து ஈரான் வெளியுறவுத்துறை இணையமைச்சர் அப்துல் லஹ்யான் கூறியதாவது, காசா போரில் காயமுற்று உயர் சிகிச்சை தேவைப்படும் மக்களை ஈரானுக்கு கொண்டு சென்று சிகிச்சை அளிக்கத் தயாராக உள்ளோம். மருந்து, உணவுகள் மற்றும் மனிதநேய உதவிகளை காசா மக்களுக்கு தந்திட கடந்த இரண்டு வார காலமாக எகிப்திடம் முறையிட்டு வருகிறோம்.

எகிப்து எங்களுக்கு அனுமதி தராமல் சண்டித்தனம் செய்து வருகிறது. காயமடைந்த பாலஸ்தீன குழந்தைகளையும், பெண்களையும் ஈரான் கொண்டு வந்து ஈரானின் உயர் மருத்துவமனைகளில் சிகிச்சை அளித்திட எகிப்தை தொடர்பு கொண்டோம்.

ஆனால் அதற்கு எகிப்து எந்த பதிலையும் தராமல் இழுத்தடித்து வருகிறது. எகிப்தின் இச்செயல் மனிதநேயத்துக்கு எதிரானது. இதனை எகிப்து கைவிட வேண்டும்.

எகிப்து அனுமதித்தால் கெய்ரோவுக்கும், இஸ்மாயிலிய்யாவுக்கும் ஆம்புலன்ஸ் விமானங்களை அனுப்ப தயாராக உள்ளோம்." (ரஃயுல் யவ்ம் 12.08.14)





## இஸ்ரேலின்தாக்குதலுக்கு நிரந்தர முற்றுப்புள்ளி துருக்கி

இஸ்லாமிய கூட்டமைப்பு நாடுகளின் (Organization of Islamic Cooperation) IOC கூட்டம் சவூதி அரேபியாவில் உள்ள ஜித்தா மாநகரில் செவ்வாய் கிழமை (12.08.14) நடந்தது.

கூட்டத்தில் முஸ்லிம் நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் சர்வதேச அளவில் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட துருக்கி வெளியுறவுத்துறை அமைச்சர் அஹ்மது தாவூது அவ்குலு கலந்து கொண்டு பேசும் போது,காசா மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தும் செயலுக்கு நிரந்தரமாக முற்றுப்புள்ளி வைத்திட வேண்டும் என்று வலியுறுத்தினார். அதற்காக ஏழு அம்சங்களை எடுத்துரைத்தார். தொடர்ந்து அவர் பேசியதாவது,

பாலஸ்தீனத்தில் இப்போது அமைந்துள்ள ஒன்றுபட்ட அரசுக்கு நாம் எல்லா வகையிலும் ஒத்துழைப்பு தர வேண்டும். காசாவின் மீது இஸ்ரேல் தாக்குதலை தொடங்கிய சமயத்தில் இருந்து இப்போது வரை காசா மக்களுக்காக எல்லா வகையான முயற்சிகளையும் நாங்கள் (துருக்கி) மேற்கொண்டு வருகிறோம்.

ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் மற்றும் ஐ.நா மனித உரிமை ஆணையம் ஆகியவற்றை பலமுறை தொடர்பு கொண்டு காசாவில் நடந்த மனித உரிமை மீறல்களை எடுத்துச் சொன்னோம். மிளிசி இம் இப்பணியைச் செய்ய வேண்டும்.

காசா மக்களுக்கு இப்போது தேவை மனிதநேய உதவிகள் தான். அதனை உடனே நாம் செய்தாக வேண்டும். துருக்கி செம்பிறைச் சங்கம் (Turkish Red Crescent), துருக்கி ஒத்துழைப்பு ஏஜென்சி (Turkish Cooperation and Coordination Agency (TİKA)), துருக்கி அதிபரின் பேரிடர் மேலாண்மை மையம்(Turkish Presidency of Emergency and Disaster (AFAD)), துருக்கி அரசின் சுகாதாரத்துறை அமைச்சகம் என துருக்கி அரசின் சார்பில் நிவாரணப் பணிகள் காசாவில் நடந்து வருகின்றன.

200 மில்லியன் டாலர்கள் அளவுக்கு மேற்கண்ட அமைப்புகள் சார்பில் நிவாரணங்கள் காசாவை சென்றடைந்துள்ளன..இது மட்டுமல்ல. எதிர்காலத்தில் காசாவுக்கு தேவைப்படும் மனிதநேய உதவிகள் குறித்தும் நாங்கள் (துருக்கி) தயாராகி வருகிறோம்.

பாலஸ்தீனம் மட்டுமல்ல.. ஈராக்கில் மேற்கொள்ள வேண்டிய பணிகளிலும் கவனம் செலுத்துகிறோம். ஈராக் விஷயத்தில் குவைத் துணைப் பிரதமர் ஷெய்கு சபாஹ் காலித் உடனும், பாலஸ்தீன விஷயத்தில் கத்தார் வெளியுறவுத்துறை அமைச்சர் காலித் அதிய்யா வுடனும் நான் பேசி வருகிறேன்.

காசா மக்களை சிகிச்சைக்காக துருக்கி கொண்டு வருவதை தொடர்வோம். கடந்த திங்கட்கிழமை (11.08.14) தொடங்கப்பட்ட இப்பணியில் அன்று மட்டும் 200 பேர் துருக்கி கொண்டு வரப்பட்டதாக சொன்ன அவ்குலு, செவ்வாய் கிழமை 12.08.14) மூன்று பேர் துருக்கி அழைத்து வரப்பட்டனர்



காசாவின் ஒரே மின்நிலையம் தாக்கப்பட்டதால் காசாவில் உயர்சிகிச்சைகள் மேற்கொள்ள முடியவில்லை என்ற அவ்குலு, காசா மக்களுக்கான சிகிச்சைக்கு செலவு செய்வதில் துருக்கி அரசு, துருக்கி முஸ்லிம் அமைப்புகள், துருக்கி வாழ் வெளிநாட்டு மக்கள், துருக்கி மக்கள் இடையே கடும் போட்டி நிலவுவதாக சொன்னார். (அல்லாஹு அக்பர்)

காசாவுக்கு இதுவரை 15000 உணவுப் பெட்டிகள் அனுப்பப்பட்டுள்ளன. கடல் வழியாக நிவாரணக் கப்பல் ஒன்று துருக்கியில் இருந்து காசாவுக்கு 11000 உணவுப் பெட்டிகளை கொண்டு சென்றுள்ளது. விமானப் பாதையை திறப்பதற்கு கோரிக்கை விடுத்துள்ளோம். இன்ஷா அல்லாஹ் ஆகஸ்ட் 15, 19 தேதிகளில் இரண்டு விமானங்கள் துருக்கியில் இருந்து 7500 உணவுப் பொருட்களை எடுத்துச் செல்லும்.

ஒவ்வொரு பெட்டியிலும் சிவப்பு இறைச்சி, பீன்ஸ், மொச்சைக் கடலை, சூரை, ஜுஸ், தேயிலை, சர்க்கரை, மாவு, பால் பவுடர் ஆகிய பொருட்கள் தரமான முறையில் வைக்கப்பட்டுள்ளன.

நம்முடைய பாலஸ்தீன சகோதர, சகோதரிகள் கடும் துன்பத்தில் உள்ளனர். அவர்களுக்கு உதவி செய்ய நாம் விரும்புகிறோம் என்றார். இவ்வாறு சொன்ன சமயத்தில் கண்கலங்கினார் அவ்குலு. (டெய்லி சபாஹ் 12.08.14)காசா போர் தோல்வியே இஸ்ரேல் முன்னாள் மேஜர் ஜெனரல் இஸ்ரேல் ராணுவத்தில் இருந்து ஓய்வு பெற்ற முன்னாள் மேஜல் ஜெனரல் 'கியாரா இலான்ட்' (Giora Eiland) கூறியதாவது, ஹமாஸ் உடனான போரின் தற்போதைய நிலைமை டெல் அவிவ் இல் இருந்து ஆணையிடுபவர்கள் தங்களின் பார்வையை திரும்பி பார்ப்பதை கட்டாயமாக்கியுள்ளது

இஸ்ரேலின் அரசியல் மற்றும் பாதுகாப்பு நிலைமை இஸ்ரேலுக்கு நலன் தருவதாக இருக்க வேண்டும். அது ஆபத்தினை இழுத்துக் கொண்டு வருவதாக இருக்கக் கூடாது. ஆனால் வேதனைக்குரிய விஷயம் இஸ்ரேலிய பிரதமர் நெதன்யாகு அதனைத் தான் செய்து வருகிறார்.

தேவையற்ற முறையில் போரை ஏற்படுத்தி அவர் தவறு செய்தார். பின்பு அத்தவறை சரிகட்டிட தொடர்ந்து தவறு செய்து வருகிறார்.

கட்டிடங்களை அதிக எண்ணிக்கையில் இடித்ததும், சிவிலியன்களை அதிக எண்ணிக்கையில் கொன்றதும் வெற்றியல்ல.. அதனைத் தான் நெதன்யாகு செய்தள்ளார்.

ஆனால் ஹமாசைப் பாருங்கள். அதன் ராணுவப் பிரிவான இஸ்சுத்தீன் கஸ்ஸாம் இப்போதைய போரை அது எதிர்பார்க்கவில்லை தான். ஆனால் போர் தொடங்கியவுடன் நேர்த்தியான முறையில் அதனை கட்டமைத்து நடத்தியது. முறையான வழிகாட்டலில், சமநிலையில் நின்று அதன் வீரர்கள் யுத்தம் புரிந்தார்கள். எந்தச் சூழ்நிலையிலும் தலைமையின் வழிகாட்டலை அவர்கள் இழக்கவில்லை. யுத்தம் கடுமையாக நடந்த சமயத்திலும் ஆபத்தை அவர்கள் நினைக்கவுமில்லை. அச்சுறுத்தலை அவர்கள் பொருட்படுத்தவும் இல்லை.

இஸ்ரேல் வெற்றி பெற்று விட்டதாக தனக்குத் தானே பின்பு உலகுக்கும், அடுத்து தனது குடிமக்களிடமும் பீற்றிக் கொள்கிறது. ஆனால் நடந்தது என்ன? இஸ்ரேலா வெற்றி பெற்றது?

## நாம் எங்கே செல்கிறோம்.? எப்படி தொடர்வோம்?

போரை தொடர்ந்திட இரண்டு வழிகள் தான் நம் முன் உள்ளன. ஒன்று அரசியல் புரிதல்களுக்குரிய தொடர்பை சாத்தியமாக்குதல் ஏனெனில், ராணுவ நடவடிக்கை மட்டும் தீர்வாகாது. இஸ்ரேல் ராணுவம் காசா பகுதியின் மீது குண்டு மழை பொழிகின்றன. ஆனால் காசாவில் இருந்து இஸ்ரேலின் மீது ராக்கெட் மழை பொழிகின்றது. அப்படியெனில். குண்டு பொட்டு என்ன பயன்? எதற்காக விமானத் தாக்குதல்?

மேலும் இஸ்ரேலிய தொலைக்காட்சியான சேனல் 2 ல் ஒரு ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொண்ட இவர் இப்படி குறிப்பிட்டார். இப்போது காசா ராணுவம் வைத்திருக்கும் ஒரு நாடாக மாறியிருக்கின்றது. காசாவை தனி நாடு என்று தான் குறிப்பிட வேண்டும். அது இஸ்ரேலின் பகுதியல்ல. அதனிடம் தனி ராணவம் இருக்கின்றது. அதனுள் அனுமதி பெற்றே பொருட்கள் செல்கின்றன. ஹமாஸ் சுங்க வரி தீர்மானிக்கின்றது காசாவை முற்றுகையிட்டதாக இஸ்ரேல்கூறுகின்றது. உணவு, குடிநீர், மருந்து, கட்டுமான பொருட்கள் தான் தடுக்கப்படுகின்றன. ஆனால் பெட்ரோலும், மின்சாரமும் அங்கு இஸ்ரேல் இல் இருந்து தான் செல்கிறது. என்ன முற்றுகை? விளங்க முடியவில்லை. மேலும் காசாவில் சட்ட அடிப்படையில் ஆட்சி நடக்கின்றது. மக்கள் அந்த ஆட்சியை தேர்ந்தெடுக்கின்றனர். அம்மக்கள் முழுமையாக ஹமாசை ஆதரிக்கின்றனர். அப்படியெனில், காசா தனி நாடு தான்." (ரஃயுல்யவ்ம் 24.08.14)

## போருக்கு பின்பு காசா

`26.08.14 அன்று இரவோடு போர் முடிவடைந்ததையொட்டி காசா மக்கள் இயல்பு வாழ்க்கைக்கு திரும்பினார். சென்ற 30.08.14 அன்று ஜும்ஆவை காசாவிலும், மேற்குகரையிலும் 'ஜும்ஆ நஸ்ரு' (வெற்றி ஜும்ஆ) என்று அனுசரிக்கப்பட்டது.

காசாவின் சந்தைகளில் வெள்ளிக்கிழமை முதல் கூட்டம் மிகுதியாக காணப்பட்டது. காசா மீனவர்கள் கடலுக்குள் மீன் பிடிக்கச் சென்று வெள்ளிக்கிழமை (30.08.14), சனிக்கிழமை (31.08.14) களில் ஏராளமான மீன்களை கொண்டு வந்தனர்.

காசாவில் இடிந்து விழுந்துள்ள கட்டிடங்களை சீரமைப்பதற்கு 10 மில்லியன் டாலர்களை கத்தார் அறிவித்துள்ள நிலையில், துருக்கி 1 பில்லியன் டாலர்களை அறிவித்துள்ளது. 100 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யும் ஜெனரேட்டார் கப்பலையும் அனுப்பி வைத்துள்ளது காசாவுக்கு தினமும் 110 மெகா வாட் மின்சாரம் தேவை என்பது குறிப்பிட தக்கது.

ஐ.நா.வின் மேற்பார்வையில் விரைவில் புனரமைப்பு பணிகள் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.




தொடர்புக்கு : abulhasanf@gmail.com



# ஹமாஸின் போர்த்தந்திரங்கள்

✍ ரஹ்மத்துல்லாஹ்

### காட்சி 1

இஸ்ரேல் ஒரு நிகழ்ச்சியில் பாட்டொன்று பாடப்படுகிறது எல்லோரும் ஆனந்தமாக கூத்தடித்து கும்மாளமிட்டு கொண்டிருக்கின்றனர். பாடலின் வரிகள் இதோ

“ இனி பாலஸ்தீனில் பள்ளிகூடங்களோ இருக்கப் போவதில்லை ஏனெனில் அங்கு படிப்பதற்கு பிள்ளைகளே இருக்கப் போவதில்லை”

எவ்வளவு குரூரத்தை உள்ளடக்கிய வரிகள்

### காட்சி 2

கொல்லப்பட்ட சின்னச்சிறு பாலகனை மடியில் கிடத்தி கொண்டு ஒரு பாலஸ்தீன தாய் "சென்று வா மகனே ! நீ எதற்காக பிறந்தாயோ அந்த இலக்கை அடைந்து விட்டாய் நிச்சயமாக நாம் அல்லாஹ்விற்கு உரியவர்கள் அல்லாஹ்விடமே மீள்வோம் இதோ நானும் உன் வழியை எதிர்பார்த்து காத்து கொண்டு இருக்கிறேன் இன்ஷா அல்லாஹ் சுவனத்தில் சந்திப்போம்.

பாலஸ்தீனத்தின் அருமையையும் பைத்துல் முகத்தஸின் அருமையையும் இவ்வுலக முஸ்லிம்கள் மறந்திருக்கலாம் ஆனால் நீ உன் கடமையை செவ்வனே நிறைவேற்றி விட்டாய்

### காட்சி 3

அமெரிக்காவின் உள்துறை இஸ்ரேலிய தடுப்பு படையின் தலைவரிடமும் கேட்கிறது "நாங்கள் உங்களுக்கு போதிய ஆயுதங்கள் அனைத்தையும் அளிக்கிறோம் போதிய பண உதவியையும் அளித்து வருகிறோம் இருப்பினும் ஏன் உங்களால் பாலஸ்தீனியர்களையும் ஹமாஸையும் வெற்றி கொள்ள முடியவில்லை"

தலையை குனிந்தபடி IDF தலைவர் "நாங்கள் வாழ வேண்டும் என்பதற்காக களத்தில் நிற்கிறோம் ஆனால் அவர்கள் மரணம் அடைய வேண்டும் என்பதற்காக (ஷஹாதத்தை எதிர்பார்த்து) களத்தில் நிற்கிறார்கள் நாங்கள் என்ன செய்ய முடியும் ?

### காட்சி 4

இஸ்ரேலிய இராணுவம் பீரங்கிகளுடன் காசாவை முற்றுகையிட தயாராக இருக்கின்றது ஹமாசின் முக்கிய தலைவரான இஸ்மாயில் ஹனியாவிடம் இதை பற்றி கேட்கப்படுகிறது. அவர் சொன்ன ஒற்றை வரி பதில் "நாங்கள் இதற்காக தான் காத்துக் கொண்டு இருக்கிறோம்."

## காட்சி 5

இஸ்ரேலில் இருந்து அனைத்து இஸ்லாமிய (?) நாடுகளின் தலைவர்களுக்கும் தொலைபேசி அழைப்பு அமெரிக்காவின் தலைவர் ஒபாமாவிற்கு ஓயாத போன். ஒரே ஒப்பாரி தான் "தயவு செய்து ஹமாசை போர் நிறுத்தத்தை ஏற்றுக் கொள்ள சொல்லுங்கள் உயிருடன் பிடித்து வைத்துள்ள இராணுவ லெட்டினண்ட் ஹாதர் கோல்டினை விடுவிக்க சொல்லுங்கள்"

நான் இந்த கட்டுரையை எழுத ஆரம்பிக்கும் போது ஆயிரகணக்கான அப்பாவி முஸ்லிம்கள் குறிப்பாக பெண்கள் குழந்தைகள் யூதர்களால் நிர்கதியாக்கப்பட்டு கொல்லப்படும் போது அதை வேடிக்கை பார்த்து கொண்டிருக்கும் முஸ்லிம்களில் ஒருவன் என்ற குற்ற உணர்ச்சியுடன் தான் ஆரம்பிக்கிறேன். எனினும் உலக முஸ்லிம்களால் கைவிடப்பட்ட பின்னரும் (ஒரு சில நாடுகளை தவிர) தனியாக காசா மக்களும் ஹமாசும் சியோனிச யூதர்களுக்கு எதிராக காட்டிய தீரமும் பெற்றுள்ள வெற்றியும் என்னை பெருமிதம் கொள்ள செய்கிறது. இதற்காக அவர்கள் கொடுத்துள்ள விலை சின்னஞ்சிறு பிஞ்சுகள் பாலகர்கள் அவர்களை பெற்றெடுத்த தாய்மார்கள் ஆம்! இஸ்ரேலின் இலக்கு இவர்கள் தாம் இஸ்ரேலியர்கள் போர்களத்தில் நேருக்கு நேர் நின்று இராணுவ வீரர்களை கொள்ளும் ஆண்மகன்கள் அல்ல.

உலகின் சட்டாம் பிள்ளை அமெரிக்காவும் அதன் செல்ல பிள்ளை இஸ்ரேலும் நிகழ்த்தியுள்ள முறைபடுத்தபட்ட இனப்படுகொலை தான் காசா தாக்குதல் (Systematic Genocide) ஆம் இப்படி தான் துருக்கியின் பிரதமர் எர்துகான் அவர்கள் இத்தாக்குதலை வர்ணித்தார்கள். ஆனால் இதற்காக இஸ்ரேல் கொடுத்த விலையும் அதிகம். பின்னர் தரைவழி தாக்குதலில் வாங்கிய அடியும் பின்னர் இவர்கள் சமாதான உடன்படிக்கையை தூக்கிக் கொண்டு நாடு நாடாக அலைந்ததும் எங்கள் இராணுவ வீரர்களை காப்பாற்றி தாருங்கள் என்று கெஞ்சி கதறியதும் ஊர் அறிந்தது உலகம் சிளீத்தது.

காசா எப்பொழுது தாக்கப்பட்டாலும் அதற்கு நேரிடையாகவும் மறைமுகமாகவும் உதவும் நாடுகள் இயக்கங்கள் சில. ஈரான், சிரியா, துருக்கி போன்ற நாடுகளும் ஹிஸ்புல்லாஹ், இக்வானுல் முஸ்லிமுன் அமைப்பு போன்ற இயக்கங்களும் காசாவிற்கும் ஹமாஸிற்கும் உதவி செய்து வருபவை. ஹமாஸ் இக்வானுல் முஸ்லிமுன் அமைப்பின் பாலஸ்தீன பிரிவு என்பது நாம் அறிந்ததே.

கடந்த 2012ம் ஆண்டுக்கு முன்பு இஸ்ரேல் காசாவை தாக்கும் போது ஈரான், சிரியா போன்றவை ஹமாஸிற்கு ஆயுதங்கள் வழங்கி உதவி செய்தன. காசா தாக்கப்படும் போது லெபனான் எல்லையிலிருந்து ஹிஸ்புல்லாஹ் தாக்குவதும் சிரியாவின் எல்லையிலிருந்து ஏவுகணை ஏவுவதும் வாடிக்கை.

2012ல் எகிப்தில் இக்வானுல் முஸ்லிமூன் அமைப்பு ஆட்சி பொறுப்புக்கு வந்ததும் ஹமாஸ் இன்னும் பலம் பெற்றது. எகிப்தில் மூடப்பட்டு முற்றுகையிடப்பட்டிருந்த காசா மக்களுக்கு அதன் ரபா எல்லை திறந்து விடப்பட்டது. இதன் மூலம் எண்ணற்ற உதவிகள் காசா மக்களை வந்தடைந்தது. அதுவரை ராக்கெட்களை பெற்று ஏவி வந்த ஹமாஸிற்கு ஈரான் அல்பஜ்ர் ராக்கெட் தொழில்நுட்பத்தை கற்று தந்தது. இதன் விளைவு கடந்த 2012ம் ஆண்டு நடந்த போரில் ஹமாஸிடம் இஸ்ரேல் தோற்று பின்வாங்கியது. இது குறித்த விரிவான கட்டுரை அப்போதைய வைகறை வெளிச்சம் இதழில் வெளிவந்தது.

இவை அனைத்தும் அமெரிக்காவையும் அதன் செல்லபிள்ளை இஸ்ரேலையும் ஒப்பாரி ஓலமிட வைத்து விட்டது என்றால் அது மிகையாகாது எனவே ஹமாசையும் காசா மக்களையும் தனிமைப்படுத்த அமெரிக்காவும் இஸ்ரேலும் இன்னும் நிபாக் எனும் நயவஞ்சக தன்மையை மனதில் கொண்ட சவூதி மன்னராட்சியும் இன்றும் அரபு அமீரகமும் சதித்திட்டம் தீட்டின.

விளைவு சிசி என்ற இராணுவ தளபதியால் எகிப்தின் இக்வானுல் முஸ்லிமூன் ஆட்சி (ஜனநாயக முறையில் தேர்ந்து எடுக்கப்பட்ட ஆட்சி) கவிழ்க்கப்பட்டு இராணுவ ஆட்சி நிறுவப்பட்டது. இதற்கு எகிப்தின் சலபிகள் உதவி செய்தனர். சிசியுடன் கைகோர்த்தனர். சவூதி இக்வான்களை தீவிரவாதிகள் என அறிவித்தது. 500 மில்லியன் டாலர்களை சிசிக்கு வழங்கியது. அமெரிக்கா இராணுவ உதவிகளை எகிப்தின் அரசுக்கு தந்து உதவியது. இக்வான்களின் தலைவர் எகிப்தின் பிரதமர் முர்சி சிறையில் அடைக்கப்பட்டார். எகிப்தின் ரபா எல்லை மூடப்பட்டது. காசா மீண்டும் சிறைபடுதப்பட்டது.

இரண்டாவதாக காசாவிற்கு ஆதரவளித்து வந்த சிரியாவில் உள்நாட்டு போர் தூண்டப்பட்டது, துவக்கிவிடப்பட்டது. தன் சொந்த நாட்டு மக்களின் மீதே அசாத் கொடூரமான தாக்குதல்களை நடத்தி லட்சக்கணக்கான மக்களை கொலை செய்தார். இதற்கு அந்நாட்டு மக்கள் பதிலடி கொடுக்கையில் இச்சண்டை மிக கவனமாக சுன்னி ஷியா சண்டையாக மாற்றப்பட்டது. ஆசாத் கம்யூனிச சிந்தனை கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. இதில் லெபனானின் ஹிஸ்புல்லாவும் இழுத்து விடப்பட்டது. ஈரானும் ஷியா முஸ்லிம்களுக்கு ஆதரவளித்தது. இதன் மூலம் அதாவது இந்த ஷியா சுன்னி முஸ்லிம்களின் சண்டையின் மூலம் ஹிஸ்புல்லாவும் ஈரானும் சிரியாவையும் சுன்னி முஸ்லிம்களை ஹமாசும் ஆதரித்தது என்ற நிலை உருவானது. மேலும் ஈராக்கிலும் ISIL என்ற அமைப்பின் வழியாகவும் ஷியா சன்னி முஸ்லிம்களிடையே சண்டை உருவானது. இதற்கிடையே ISIL ன் அபூ பக்கர் பக்தாதி தன்னை தன்னிச்சையாக கலிபாவென அறிவித்துக் கொண்டார். இது உலகின் பெரும் பான்மையான செய்திகளில் முக்கியத்துவம் பெற்று வருகையில் தனித்து விடப்பட்ட ஹமாசின் மீதும் காசாவின் மீதும் இஸ்ரேல் நயவஞ்சகத்தனமான கோழைத்தனமான இப்போரை தொடங்கியது.

ஜூலை 8ம் தேதி இந்த போர் துவங்கியது 57 நாட்கள் நடந்தது. பாலஸ்தீனியர்கள் தரப்பில் 2140 பேர் கொல்லப்பட்டனர் 11,000 பேர் காயமடைந்தனர்

இஸ்ரேல் தரப்பில் 64 இராணுவ வீரர்களும் 6 பொது மக்களும் மொத்தம் 70 பேர் இறந்ததாக இஸ்ரேல் அறிவித்தது. ஆனால் இஸ்ரேலில் இராணுவத்தினர் 150 பேருக்கும் மேலாக தங்களால் கொல்லப்பட்டதாக ஹமாஸ் அறிவித்தது. இஸ்ரேல் இதனை மறுக்கவில்லை. ஆனால் மறைத்தது. பிரஸ் டிவி என்ற ஊடகம் இதனை வெளியிட்டது மேலும் 1620க்கும் மேற்பட்ட இஸ்ரேலிய இராணுவத்தினர் காயப்பட்டதாகவும் இஸ்ரேலிய ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்டதை சுட்டிக்காட்டி பிரஸ் டிவி செய்தி வெளியிட்டது.



இஸ்ரேல் எனும் நாடு தோன்றியதிலிருந்து அதற்கு கொடுக்கப்பட்ட மிகப்பெரிய மரண அடி இது. இதன் காரணமாக இஸ்ரேல் சமாதான உடன்படிக்கை கோரி கதறி அழுததும் உலக நாடுகளின் கால்களில் விழுந்தும் சரியான ஆண்மைதனத்துடன் அதனை ஹமாஸ் ஏற்க மறுத்ததும் வெளிப்படையாக ஊடகங்களில் விவாதிக்கப்பட்டது. இஸ்ரேலின் கோழைத்தனம் திரைக்கு வந்தது.

### போர் தந்திரங்கள்

இந்த போரில் இஸ்ரேலை வெற்றி கொள்ள ஹமாஸ் அல்கஸ்ஸாம் இராணுவத்தினர் பல தந்திரங்களை கையாண்டனர். அதில் சில வழிகள் முன்னேறிய நாடுகளாலேயே செய்ய இயலாதது.

### சுரங்கம்

ஒவ்வொரு போரிலும் ஒவ்வொரு வழியை கையாளும் திறன் கொண்ட ஹமாஸ் இம்முறை இஸ்ரேலுக்கு அறிமுகப்படுத்தியது சுரங்கங்கள் வழியாக அவர்கள் எல்லைக்கு சென்றுதாக்கிவிட்டு அவர்களின் ஆயுதங்களை கையகப்படுத்தி மீண்டும் பத்திரமாக வீடு திரும்பும் முறை. இயல்பாக காசா மக்களும் குறிப்பாக ஹமாசும் இந்த சுரங்கங்களை ரஃபா எல்லையில் உள்ள அதாவது எகிப்து எல்லையில் உள்ள (பாலஸ்தீனத்தின் இந்த எல்லை மட்டும் தான் இஸ்ரேலின் ஆதிக்கத்தில் இல்லாதது. உலகத்தின் மற்ற பகுதிகளை தொடர்பு கொள்ள உள்ள அனைத்து எல்லைகளையும் 6 எல்லைகளையும் இஸ்ரேல் அடைத்து விட்டது) இந்த பகுதியை கடந்து உணவு பொருட்களையும் மருந்து பொருட்களையும் கொண்டு வருவதற்காக பயன்படுத்தி வந்தது.

இக்வானுல் முஸ்லிம்களின் ஆட்சியில் இந்த சுரங்கங்களுக்கு அவசியம் இல்லாமல் போனது. எல்லைகள் சுதந்திரமாக திறந்து விடப்பட்டன. பின்னர் இராணுவ ஆட்சியாளன் சிசி ஆட்சிக்கு வந்தவுடன் அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் உத்தரவின்படி இந்த எல்லையை அடைத்தான். இக்வான்கள் ஆட்சியில் இருந்த போது ஹமாஸ் கையை கட்டிக்கொண்டு இருந்துவிட வில்லை. சுரங்கம் தோண்டும் வேலையை அப்போதும் அவர்கள் செய்து கொண்டிருந்தனர். ஆனால் இந்த முறை அவர்கள் சுரங்கம் தோண்டியது இஸ்ரேலை நோக்கி. இதனை இஸ்ரேல் அறிந்து கொள்ளவே முடியவில்லை.

இத்தகைய சுரங்கங்களை தோண்டுவதற்கு ஆண்டு கணக்கில் ஆகும். முன்னேறிய நாடுகள் கூட இத்தகைய சுரங்கங்களை தோண்டுவது சாத்தியமற்றதே என கணக்கிடுகின்றனர் வல்லுனர்கள். அதுவும் இவை இருப்பதே மற்றவர்கள் அறியாமல் தோண்டுவது சாத்தியமற்றதே. ஆனால் இதை நிகழ்த்தி காட்டினர் ஹமாஸ் இயக்கத்தினர்.

இந்த சுரங்கங்கள் மூலம் ஹமாஸ் இயக்கத்தின் இராணுவ பிரிவான அல்கஸ்ஸாம் இந்த போரில் மிக சுதந்திரமாக மிக இலாவகமாக இஸ்ரேலின் தென்பகுதிக்குள் சென்று தாக்கி இராணுவத்தினரை கொன்று பின்னர் அவர்களின் ஆயுதங்களையும் கைப்பற்றியது. இந்த சுரங்கங்களின் மூலமே இஸ்ரேலிய இராணுவத்தினருக்கு மிகப்பெரிய சேதத்தை ஏற்படுத்தியது ஹமாஸ்.



### இஸ்ரேலின் ஆளில்லா விமானத்தை கைப்பற்றியது ஹமாஸ்

காசாவில் உள்ள ஷெஜய்யா மாவட்டத்தில் ஹமாசின் இராணுவ பிரிவினர் இஸ்ரேலின் ஆளில்லா உளவு பார்க்கும் விமானத்தை கைப்பற்றினர். http://www.presstv.in/detail/2014/08/25/376555/100-rockets-fired-at-israel-in-under-24h

### இணையப்போர் (Cyber War)

மொசாத்தின் இணையதளத்தை முடக்கிய அனானிமஸ் என்ற ஹாக்கர் குழு மேற்கு கரையில் ஹூவ்வாரா என்ற கிராமத்தில் இஸ்ரேலுக்கு எதிராக நடந்த போராட்டத்தில் 22 வயதான தயீப் அபூ ஷெஹதா என்பவர் கொல்லப்பட்டார். இவர் அனானிமஸ் குழுவின் உறுப்பினர். ஆகவே இதனை கண்டிக்கும் பொருட்டும் இஸ்ரேலின் இனப்படுகொலையை தடுக்கவும் ஆக்கிரமிப்புக்கு எதிராகவும் அனானிமஸ் என்ற இணைய தடுப்பு குழுவினர் இஸ்ரேலின் அரசு இணையதளங்கள் பலவற்றை குறிவைத்து இணைய தாக்குதல் நடத்தினர். இதில் இஸ்ரேலின் இணையதளங்கள் ஆயிரக்கணக்கில் முடங்கின. அனானிமஸ் இந்த தாக்குதலை ஜூலை 7ம் தேதி துவங்கினர். இதில் மிக முக்கியமாக இஸ்ரேல் உளவுத்துறை மொசாத்தின் இணையதளம் பல நாட்கள் செயல்படாமல் போனது. அதுமட்டுமன்றி 170 இஸ்ரேலிய அதிகாரிகளின் பயனீட்டு சொல் மற்றும் கடவு சொற்களை (User Name and Password) வெளியிட்டு இவர்கள் இஸ்ரேலுக்கு திகில் ஊட்டினர் இஸ்ரேல் இதைப்பற்றி வாயே திறக்கவில்லை.

"நாங்கள் இஸ்ரேலை எதிர்க்கவில்லை, அதன் இனப்படுகொலையையும் நிராயுதபாணிகளான பொதுமக்களின் கொலைகளையும் எதிர்க்கிறோம். உலகில் உள்ள புத்திசாலிகளே இஸ்ரேலுக்கு எதிராக திரளுங்கள். இஸ்ரேலுக்கு எதிராக சைபர் போரை துவங்குங்கள்" என அவர்கள் அறிவிப்பு செய்தனர். இவை அனைத்தும் இஸ்ரேலுக்கு மண்டை குத்தலாகிப்போனது.

இதற்கு முன் இவர்கள் காசா மக்களுக்கு எதிரான பில்லர் ஆஃப் டிஃபன்ஸ் போரின் போது 5000 இஸ்ரேலிய அதிகாரிகளின் தகவல்களையும் இஸ்ரேலின் துணை பிரதமரின் டிவிட்டர் மற்றும் பேஸ் புக் அக்கவுட்ன்களை கடத்தி அவர்களை திகைப்பில் ஆழ்த்தினார்கள். http://rt.com/news/176888-anonymous-hacks-mossad-site/




### இஸ்ரேலின் ஐயான் போம் சிஸ்டத்தின் தகவல்களை கடத்திய சீனர்கள்

இஸ்ரேலின் பில்லியன் டாலர் மதிப்புள்ள ஐயர்ன் டோம் தடுப்பு (Iron Dome System) தகவல்களை சீனாவின் உதவியுடன் இயங்கி வரும் Crew hacking group என்ற இணைய கடத்தல் பிரிவு

எலிஸ்ரா குழுமம், இஸ்ரேல் ஏரோஸ்பேஸ் இன்டஸ்டிரீஸ் மற்றும் ரஃபேல் அட்வான்ஸ்டு டிஃபன்ஸ் சிஸ்டம் Elisra Group, Israel Aerospace Industries (IAI) and Rafael Advanced Defense Systems (Rads) என்ற மூன்று நிறுவனங்களும் இஸ்ரேலின் ஐயர்ன் டோம் சிஸ்டத்தை உருவாக்குவதில் பங்குகொண்டவை. தற்போது இந்த மூன்று நிறுவனங்களின் தகவல்களும் ஊடுருவப்பட்டு திருடப்பட்டுள்ளன. இதன் மூலம் இஸ்ரேலுக்கும் அமெரிக்காவிற்கும் மிகப்பெரிய பொருளாதார நட்டம் என கணக்கிடப்பட்டுள்ளது.

இத்துடன் இஸ்ரேலிய இரயில்வே, இஸ்ரேலின் மருத்துவமனைகள் போன்றவற்றின் இணையதளங்களையும் முடக்கியுள்ளனர் இந்த ஹாக்கர்கள். இத்துடன் இஸ்ரேலின் இணையவேகத்தையும் முடக்கியுள்ளனர் ஹாக்கர்கள்.

இவர்கள் Israel Aerospace Industries (IAI) இன் 700 கோப்புகளை களவாடி சென்றனர்.

இஸ்ரேல் ஹமாசுடன் மோதும் போதெல்லாம் இத்தகைய இணைய முடக்கங்கள் முயலப்படுகின்றன. சென்ற முறை 44 மில்லியன் இணைய மோதல்கள் இஸ்ரேலிய இணையதளங்கள் எதிர்கொள்ள நேர்ந்தது. இம்முறையும் அதே நிலைதான்.

இஸ்ரேலின் சமூக வலைதளங்களும் செய்தி நிறுவனங்களும் இந்த தாக்குதலுக்கு உட்படுத்தப்பட்டன. இஸ்ரேலின் ஒரு செய்தி சானலில் ஹீப்ருவில் ஒரு செய்தி ஹமாசால் காட்டப்பட்டது. "இஸ்ரேலிய தாய்மார்களே! நீங்கள் உங்கள் மகன்களை இராணுவத்தில் இருந்து திரும்ப பெறுங்கள், அல்லது உங்கள் மகன்கள் கொல்லப்படுவதை அல்லது உயிருடன் பிடிக்கப்படுவதை பாருங்கள்"

டொமினோ இஸ்ரேல் அதன் ஃபேஸ்புக் பக்கத்தில் "நாங்கள் இன்று இஸ்ரேலுக்கு உள்ளாக டெல் அவிவ், ஹைஃபா ,ஜெருசலேம், அஷ்கலான், அஷ்தாத் போன்றவற்றை 2000க்கும் மேற்பட்ட இராக்கெட்டுகளை கொண்டு தாக்க போகிறோம், இது 7 மணிக்கு நடக்கும், இஸ்ரேல் முடியும் வரை இது தொடரும்" என்ற தகவலை கண்டு அதிர்ந்து போனது.


http://www.theguardian.com/technology/2014/jul/29/chinese-hackers-steal-israel-iron-dome-missile-data
https://news.vice.com/article/anonymouss-offensive-against-israel-reveals-the-splintered-state-of-hacktivism





### சானல் 10 தொலைக்காட்சியின் செயற்கைகோள் ஒளிபரப்பில் உள்நுழைந்த ஹமாஸ்

சானல் 10 தொலைக்காட்சி இஸ்ரேலின் தொலைக்காட்சி சானலாகும். இதன் செயற்கைகோள் ஒளிபரப்பில் ஊடுருவிய ஹமாஸ் இராணுவத்தினா் "உங்கள் அரசாங்கங்கள் இந்த தாக்குதலை துவங்க இந்நேரத்தை தேர்ந்தெடுத்துள்ளது. உங்கள் அரசாங்கம் எங்கள் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே, பாதுகாப்பு அரண்களுக்குள் நீண்டநாட்களுக்கு இருக்கப்போவதை தயார் செய்து கொள்ளுங்கள்" என்ற செய்தியை ஒளிபரப்பினர்.
http://www.jpost.com/Operation-Protective-Edge/WATCH-Hamas-hacks-into-Channel-10-broadcast-362767
மேலே நாம் குறிப்பிட்டுள்ளவை மிக சொற்ப உதாரணங்களே, இது போன்ற பல்வகையான தொழில்நுட்ப போர்களை நடத்தி குறிப்பாக சைபர் வார் எனப்படும் இணைய போர்களை நடத்தி இஸ்ரேலை முடக்கி போட்டுவிட்டன என்றால் மிகையாகாது.




இதுமட்டுமல்ல பல்லாயிரக்கணக்கான இஸ்ரேலியர்களுக்கு மேலே படத்தில் உள்ளதை போன்ற பல குறுஞ்செய்திகள் தன்னிச்சையாக வரும்படி செய்யப்பட்டன. அதில் ஹைஃபா நகரத்தின் கெமிக்கல் பிளான்ட் ராக்கெட் தாக்குதலுக்கு உள்ளானதாகவும் பல இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டதாகவும் தீவிரவாதிகள் நகரை வலம்வருவதாகவும் உடனடியாக இஸ்ரேலியர்கள் நகரை விட்டு காலி செய்யும்படியும் இஸ்ரேலிய அரசால் கோரப்பட்டது. இதை உண்மையென நம்பி பலர் குழம்பி நகரை காலி செய்ய தயாரானார்கள். இதை சரி செய்வதற்கும் இஸ்ரேலிய அரசுக்கு மண்டை குழப்பிப்போனது.

"உங்களுடைய தலைவர்களின் முட்டாள்தனத்தினால் இஸ்ரேலியர்கள் பாதுகாப்பு அரண்களுக்குள் முடங்க வேண்டியதாகிப்போனது. எங்களுடைய நிபந்தனைகள் ஏற்கப்படும் வரை நாங்கள் இஸ்ரேலை ராக்கெட்டுகளை கொண்டு தாக்குவது நிறுத்தப்படாது"

"தீவிரவாதிகள் ஊடுருவி விட்டனர். உங்களுடைய பாதுகாப்பு அரண்கள் தான் அவர்களின் இலக்கு. எனவே, உங்கள் பாதுகாப்பு அரண்களில் உள்ள புதியவர்களை குறித்து கவனமாக இருங்கள்" இந்த குறுஞ்செய்திகளை அனுப்ப வழமையாக SMS வழியாக அனுப்பவில்லை. அதற்கு அலைபேசி எண்களின் தகவல்கள் (Database) தேவைப்படும்.

அதில் யார் செய்தி அனுப்புகிறாரோ அந்த எண்ணும் தெரிய வரும். ஆனால் இந்த செய்திகள் அவ்வாறு அனுப்பப்பட்டதல்ல. மாறாக செல் பிராட்காஸ்ட் (Cell Broadcast Technology) தொழில் நுட்பம் கையாளப்பட்டு எல்லா அலைபேசிகளும் தானாக இந்த செய்திகளை பெறும் வண்ணம் ஹாக் செய்யப்பட்டன.



இஸ்ரேலின் உள்கட்டமைப்பு வசதிகளை செய்து தரும் மின்சார நிலையங்கள் குடிநீர் நிலையங்கள் போக்குவரத்து சிக்னல்களை கட்டுப்படுத்தும் கணினிகள் போன்றவை ஆபத்தான இணைய தாக்குதலுக்கு உள்ளாயின.

Phony messages highlight dangers of 'real' hackers | The Times of Israel http://www.timesofisrael.com/phony-messages-highlight-dangers-of-real-hackers/#ixzz39AurebK1

http://www.timesofisrael.com/phony-messages-highlight-dangers-of-real-hackers/

**இஸ்ரேலிய இளைஞர்கள் மன நோயால் பீடிக்கப்பட்டு உள்ளனர்**

இதற்கிடையே இஸ்ரேலுக்கும் அரபு நாடுகளுக்கும் இடையே போர் மூளும் போது இஸ்ரேலிய இளைஞர்கள் மனநோயால் பீடிக்கப்படுகின்றனர் என டைம்ஸ் ஆஃப் இஸ்ரேல் இதழ் கூறுகிறது

''Israeli teens mental health worsens when Arab-Israeli conflict does | The Times of Israel http://www.timesofisrael.com/long-conflict-wears-on-teen-psyche-14-year-study/#ixzz39RekYMo1

**ஹமாசுக்கும் காசா மக்களுக்கும் போரினால் கிடைத்த வெற்றி என்ன?**

1. ஏழு வருடங்களாக நடந்து வரும் காசா முற்றுகை முடிவுக்கு வரும்.

2. கோரெம் ஷாலோம் மற்றும் எரேஸ் எல்லைகள் (Kerem Shalom and Erez crossings) ஏற்கனவே திறந்து விடப்பட்டுவிட்டன. இன்னும் 3 எல்லைகள் திறக்கப்பட உள்ளன என்று மூஸா அபூ மர்சூக் என்ற ஹமாசின் மூத்த அதிகாரி கூறியுள்ளார்.

3. எகிப்தின் ரஃபா எல்லையை நிரந்தரமாக திறக்க எகிப்துடன் பாலஸ்தீன அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்திவருகின்றனர். இந்த எல்லை போர்நிறுத்த ஒப்பந்தத்தின் வரையறைக்குள் வராது என்பது குறிப்பிடத்தக்கது.

4. 2014க்குள் காசா மீனவர்கள் 12 நாட்டிகல் மைல் வரை சென்று மீன் பிடிக்க அனுமதிக்கப்படுவர்.

5. பாலஸ்தீனத்திற்கென பன்னாட்டு விமான நிலையம் மற்றும் கடற்தளமும் அமைக்கப்படும்.

6. பாலஸ்தீனத்திற்கென அனைத்து நாட்டின் உதவிகளும் அனுமதிக்கப்படும்.



**ஆயிரக்கணக்கான இஸ்ரேலியர்கள் மீண்டும் வீடு திரும்ப தயக்கம்.**

1,25,000 இஸ்ரேலிய ஆக்ரமிப்பாளர்கள் இஸ்ரேலுக்கும் ஹமாசிற்கும் இடையில் போர்நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்ட போதிலும் மீண்டும் வீடு திரும்ப தயக்கம் தெரிவித்துள்ளனர். ஹமாசின் ராக்கெட் தாக்குதலுக்கு எதிராக இஸ்ரேல் இராணுவத்தினால் தங்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பையும் தர இயலாது என அவர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

அஷ்கலான் நகரின் மேயர் இதாமர் ஷிமோனி (Ashkelon, Itamar Shimoni) இதே கருத்தை தெரிவித்துள்ளார். மேலும் இந்த ஒப்பந்தம் ஹமாசிடம் சரணடைவதை போன்றது என்ற கருத்தை Sdot Negev Regional Council தெரிவித்துள்ளது.

:

**http://www.presstv.in/detail/2014/08/27/376769/israeli-settlers-refuse-to-return-home/**

### ஈரானின் பாராட்டு

ஈரானின் துணை வெளியுறவுதுறை அமைச்சர் முஹம்மத் பத்ருதீன் சையத் அணிசேரா நாடுகளின் அவையை கூட்டி இஸ்ரேலின் கோரமுகத்தை எடுத்துரைத்து உலகநாடுகள் இஸ்ரேலின் இந்த கொடுமையை கண்டிக்க தவறிவிட்டதை சுட்டிக்காட்டினார்.

**http://www.presstv.in/detail/2014/08/04/374023/intl-bodies-unable-to-stop-israel**

"பல்வேறு வகைகளில் பாலஸ்தீன தடுப்புப்படையினருக்கு உதவி செய்ய நாங்கள் தயாராக உள்ளோம். முஸ்லிம்களின் பாதுகாப்பில் ஷியா,சுன்னி என்ற வித்தியாசம் எங்களுக்கு இல்லை " என இஸ்லாமிய புரட்சி படையில் மேஜர் ஜெனரல் முஹம்மது அலி ஜஃபரி கூறினார்.

"ஷியா சுன்னி முஸ்லிம்களின் ஒற்றுமையில் சியோனிஸ்ட் நாடு (இஸ்ரேல்) சிதறுண்டு போகும். அந்த நாளுக்காக நாங்கள் தயாராக உள்ளோம்" என்றும் அவர் கூறினார்,

**"We are prepared to support the Palestinian resistance in various aspects. In defending Muslims, we recognize no distinction between Shias and Sunnis," commander of the Islamic Revolution Guards Corps (IRGC) Major General Mohammad Ali Jafari said on Monday**

**"The Zionist regime [of Israel] will collapse soon as a result of the unity among Shia and Sunni Muslims and we are ready for that day," Jafari pointed out.**

**http://www.presstv.in/detail/2014/08/04/374002/iran-ready-to-fully-support-palestine**

ஈரானை சேர்ந்த 183 சட்ட வல்லுனர்கள் (Iranian lawmakers) ஹமாசின் இந்த வெற்றியை பாராட்டி புகழ்ந்துள்ளனர். காசா மக்களின் தியாகத்தை புகழ்ந்துள்ள அவர்கள் இறுதி வெற்றி அவர்களை அடைந்து விட்டது என்று பாராட்டினர்.

"வரலாற்று தோல்வியை இஸ்ரேலுக்கு ஹமாஸ் பரிசளித்துள்ளது" என ஈரானின் மஜ்லிஸ் பேச்சாளர் அலி லாரிஜானி அவர்கள் ஹமாசை பாராட்டினார். "அவர்கள் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைத்து இந்த வெற்றியை சுவைத்துள்ளனர்.



மேற்கத்திய உலகத்தின் ஆதரவோடும் அரபு நாடுகளின் மௌனத்தோடும் காசாவை தாக்கிய இஸ்ரேலை அவர்கள் கலங்கடித்துள்ளனர். இந்த பகுதியின் புற்று நோயான (Cancer) இஸ்ரேலை துடைத்தெறியும் சக்தி ஹமாசுக்கு உண்டு." என்று கூறியுள்ளார்.

http://www.presstv.in/detail/2014/08/27/376738/gaza-crushed-israel-delusional-grandeur

ஹிஸ்புல்லாவும் ஹமாசை பாராட்டியுள்ளது. இந்த போரில் பங்கேற்ற இஸ்ரேல் இராணுவத்தினரையும் இஸ்ரேல் இராணுவத்தில் சேர்ந்து பணியாற்றிய வேறு நாடுகளை சார்ந்த மக்களை பற்றியும் விசாரணை நடத்தி அவர்களை போர்குற்றம் புரிந்தவர்கள் என அறிவிக்க வேண்டும் என கோரி பாலஸ்தீன வெளியுறவுதுறை அமைச்சர் ரியாத் அல் மாலிகி ஐக்கிய நாடுகள் சபைக்கு கடிதம் எழுதியுள்ளார்.



http://www.presstv.in/detail/2014/08/27/376697/try-israeli-soldiers-for-war-crimes

## இஸ்ரேலை உளவு பார்த்த ஹமாசின் ஆளில்லா விமானம்

ஹமாஸ் அதன் இராணுவ வரலாற்றில் இன்னொரு மைல் கல்லை அடைந்துள்ளது. இஸ்ரேலை நோக்கி பல ஆளில்லா உளவு விமானங்களை ஹமாஸ் வெற்றிகரமாக அனுப்பியது. அதில் ஒரு விமானத்தை இஸ்ரேல் சுட்டு வீழ்த்தியதாக கூறிக்கொண்டது. எனினும் இது குறித்த உறுதியான கூறுகள் எதுவும் தென்படவில்லை. காசாவின் வடக்கு பகுதிக்கு 25கி.மீ தூரத்தில் இந்த விமானத்தின் பகுதிகள் கிடக்கின்றனவா என்ற ஆய்வினையும் இஸ்ரேல் மேற்கொண்டது. ஏனெனில் இந்த விமானங்கள் எவ்வளவு திறன் வாய்ந்தவை, வெறும் உளவு விமானங்களா அல்லது ஆயுதங்களை ஏற்றிக்கொண்டு வந்து தாக்க வல்லவையா என்பது குறித்த கவலையில் இஸ்ரேல் ஆழ்ந்துள்ளதாக தெரிகிறது.

இந்த ஆளில்லா விமானங்கள் 75 மைல் வரை சென்று திரும்ப கூடிய வல்லமை பெற்றவை என வால் ஸ்டிரீட் ஜர்னல் என்ற பத்திரிகையும் இன்னும் பல பத்திரிகைகளும் செய்தி வெளியிடுகின்றன. இவை ஆயுதங்கள் ஏற்றி செல்லும் வல்லமை பெற்றவையா என்பது குறித்து தெளிவாக தெரியவில்லை என இப்பத்திரிகைகள் கூறுகின்றன. ஆனால் அந்த வல்லமையும் ஹமாஸ் கூடிய விரைவில் பெற்று விடும் என்றே தெரிகிறது எனவும் இந்த பத்திரிகைகள் தெரிவிக்கின்றன. ஹமாஸ் இதன் மூலம் இஸ்ரேலின் எந்த ஒரு பகுதிக்கும் சென்று தாக்கும் வல்லமை பெற்றுவிட்டதாகவே தெரிகின்றது. கடந்த 6 வருடங்களில் 3 போர் பாலஸ்தீனத்தின் மீது கடந்த 6 வருடங்களில் 3 முறை இஸ்ரேல் போரை தொடர்ந்து தோல்வியை தழுவியுள்ளது. கடந்த 2012 நவம்பர் மாதத்தில் 8 நாட்கள் ஆபரேஷன் பில்லர் ஆஃப் டிஃபன்ஸ் என்ற பெயரில் பாலஸ்தீனத்தினை தாக்கி அப்பாவி பொதுமக்கள் 171 பேரை கொன்று குவித்தது.

2008 2009ல் 22 நாட்கள் காசாவின் மீது தாக்குதல் நடத்தி 1400 அப்பாவி பாலஸ்தீனர்களை கொன்று குவித்து மகிழ்ந்தது இஸ்ரேல். இந்த தாக்குதல்களையெல்லாம் இஸ்ரேல் குறிப்பாக ரமளான் மாதங்களிலேயே துவக்குகிறது. ஆனால் இந்த தாக்குதல் அனைத்தையும் பொறுமையுடனும் உறுதியுடனும் எதிர் கொண்டு இப்போர்களை வென்று காட்டியுள்ளது ஹமாஸ்.

## 2005 முதல் நடந்து வருவதென்ன?

2005 போரில் 27 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர். பாலஸ்தீனர்கள் தரப்பில் 112 பேர் கொல்லப்பட்டனர். அதற்கு முந்தைய போரில் 13 யூதர்களும் 531 பாலஸ்தீனர்களும் இறந்தனர். அப்போதைய இஸ்ரேலிய பிரதமர் ஏரியல் ஷரோன். பாலஸ்தீனத்தில் மஹ்மூத் அப்பாஸ். 21 யூத குடியிருப்புகள் கலைக்கப்பட்டு அகற்றப்பட்டன. 8500 யூத ஆக்கிரமிப்பாளர்கள் அவர்கள் ஆக்ரமித்த வீடுகளை காலி செய்து விட்டு வேறு இடத்திற்கு அனுப்பப்பட்டனர். ஒவ்வொரு யூத குடும்பத்திற்கும் 4 இலட்சம் டாலர் நஷ்டஈடாக இஸ்ரேல் வழங்கியது. 2008ல் நடந்த போரில் இஸ்ரேலியர்கள் 2 பேர் பாலஸ்தீனர்கள் 124 பேர் கொல்லப்பட்டனர். 2009ல் நடந்த போரில் இஸ்ரேலியர்கள் 13 பேர் கொல்லப்பட்டனர். அதில் 10 பேர் இஸ்ரேலிய இராணுவத்தினர். 518 பேர் காயமடைந்தனர். பாலஸ்தீன முஸ்லிம்கள் 1391 பேர் கொல்லப்பட்டனர். அதில் 318 பேர் 18 வயதுக்கு உட்பட்ட சிறுவர்கள். 5300 பேர் காயமடைந்தனர். 11,154 வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டன. அப்போதைய இஸ்ரேலிய பிரதமர் எஹூத் உல்மர்ட். காசாவிற்கு காலித் மெஷால் பிரதமர். 2012 ஆபரேஷன் பில்லர் ஆஃப் டிஃபன்ஸ் : 6 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர். 239 பேர் காயமடைந்தனர். ஹமாஸ் 765 சாதாரண வகை ராக்கெட்டுகளையும் 741 நீண்ட தூரம் சென்று தாக்கும் ராக்கெட்டுகளையும் 135 மார்டர் ஷெல்களையும் கொண்டு தாக்கியது.

171 பாலஸ்தீன பொதுமக்கள் கொல்லப்பட்டனர். 1000 பாலஸ்தீனர்கள் காயமடைந்தனர். 1500 வான் தாக்குதல்களையும் 7 கடற்படை தாக்குதல்களையும் 360 மார்டர் ஷெல் தாக்குதல்களையும் இஸ்ரேல் மேற்கொண்டது. 2005 முதல் 20125 வரை நடந்த போர்களில் 61 இஸ்ரேலியர்களும் 2332 பாலஸ்தீனர்களும் கொல்லப்பட்டனர்.

இஸ்ரேல் தரப்பில் கொல்லப்பட்டவர்களின் தகவல் இஸ்ரேலிய அரசால் மூடி மறைத்து தரப்படும் தகவல். இந்த எண்ணிக்கை நிச்சயம் கூடுதலாகவே இருக்கும் என போர் வல்லுனர்களால் கணக்கிடப்பட்டுள்ளது.

## SOURCES:

Institute for Palestine Studies, Palestine Center for Human Rights, Amnesty International, OHCHR, B'Tselem.

* Deaths calculated as those Palestinians and Israelis killed in direct conflict - www.ochaopt.org, www.aljazeera.com

## ஹமாசின் ராக்கெட் பலம்

- ☞ கஸ்ஸாம் ராக்கெட் 9 கிலோ எடை 17.7 கி.மீ சென்று தாக்கக்கூடியது.
- ☞ GRAD ராக்கெட் 45 கி எடை 20 முதல் 48 கி.மீ சென்று தாக்கும் வல்லலை.
- ☞ வி75 ராக்கெட் 60 கி எடை 75 கி.மீ சென்று தாக்கும் வல்லமை.
- ☞ FAJR-5 75 கி.மீ சென்று தாக்கும் வல்லமை.
- ☞ வி302 ராக்கெட் 144 கி எடை 160 கி.மீ. சென்று தாக்கும் வல்லமை.



# தாய்ப்பால்

## அறிவியலும் குர்ஆனும்

✍ கேப்டன் அமீருத்தீன்

ஆண்டுதோறும் ஆகஸ்ட் முதல்வாரம் தேதி 1லிருந்து 7வரை உலக தாய்ப்பால் வாரம் கொண்டாடப்படுகிறது. ஐக்கிய நாடுகள் சபையில் உலக சுகாதார அமைப்பும் குழந்தைகள் நலப்பிரிவும் இதனை பல ஆண்டுகளாக முன்னெடுத்துச் சென்று தாய்ப்பால் கொடுப்பதன் நன்மைகள் பற்றி உலகளவில் விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றன.

இந்த ஆண்டு தாய்ப்பால் வாரம் சென்னை திருவல்லிக்கேணி அரசு கஸ்தூரிபாய் காந்தி தாய்சேய் நல மருத்துவ மனையிலும் சென்னை அடையாரில் உள்ள போர்டீஸ் மலர் மருத்துவ மனையிலும் அனுஷ்டிக்கப்பட்டது. அப்போது தாய்ப்பால் கொடுப்பதன் அவசியம் பற்றி குழந்தை நல மருத்துவர்கள் பலர் கூறிய கருத்துகளை இங்கு சுருக்கமாய் தருகின்றேன்.

தாய்ப்பாலில் அனைத்து விதமான சத்துகளும் சரியான விகிதத்தில் இருக்கின்றன. பெண்கள் குழந்தைகளுக்கு கண்டிப்பாக தாய்ப்பால் கொடுக்க வேண்டும். இதனால் குழந்தைகளின் உடலில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும். சளி ஆஸ்துமா வயிற்றுப்போக்கு போன்ற பிரச்சனைகள் குழந்தைகளுக்கு ஏற்படாது. குழந்தைகள் புத்திசாலிகளாக இருப்பார்கள். குழந்தைகளின் இறப்பு விகிதமும் குறையும். குழந்தை பிறந்த ஒரு மணி நேரத்தில் தாய்ப்பால் கொடுக்க வேண்டும். இதனை 30 சதவீதம் பெண்கள் மட்டுமே பின்பற்றுகின்றனர். குழந்தைகளுக்கு 6 மாதம்வரை தொடர்ந்து தாய்ப்பால் மட்டுமே கொடுக்க வேண்டும். இதுபோல 47 சதவீதம் பெண்கள்தான் செய்கின்றனர். அதே போல குழந்தைக்கு 2 ஆண்டுகளுக்கு உணவுடன் தாய்ப்பாலும் கட்டாயம் கொடுக்க வேண்டும். ஆனால் 24 சதவீதம் பெண்கள் மட்டுமே குழந்தைக்கு 2 ஆண்டுகளுக்கு தாய்ப்பால் கொடுக்கின்றனர். டாக்டர்கள் தாய்ப்பால் மட்டுமே பரிந்துரைக்க வேண்டும். அதைத் தவிர பவுடர் பால் டின்பால் போன்ற செயற்கை பால்களை கொடுக்கும்படி பரிந்துரைக்கக் கூடாது என சட்டம் உள்ளது. (தி இந்து 02.08.2014)

குழந்தைகளுக்கு தாய்ப்பால் கொடுப்பதால் ஏராளமான நன்மைகள் உள்ளன. மேலும் தாய்ப்பால் கொடுக்கும் பெண்களுக்கு மார்பக புற்றுநோய் கருப்பைவாய் புற்றுநோய் வரும் வாய்ப்பு குறைவாக இருக்கும். குழந்தைகளின் எடையும் சரியாக இருக்கும். தாய்ப்பால் கொடுப்பதால் தாயின் இளமைத் தோற்றம் குறையும் என்ற மூடநம்பிக்கை சில பெண்களிடம் இருக்கின்றது. இது முற்றிலும் தவறானது. தாய்பால் கொடுக்கும் பெண்கள் இளமையாகவும் அழகாகவும் இருப்பார்கள் தாய்ப்பால் குடிக்கும் குழந்தைகளுக்கு நோய் எதிர்ப்பு


சக்தி மற்றும் அறிவுத்திறன் அதிகமாக இருக்கும். தமிழகத்தில் கொடுப்போர் 33 சதவீதம் என்று புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. தாய்பால் கொடுப்பதால் ஏற்படும் நன்மைகள் குறித்து பெண்களிடம் இன்னும் அதிகமாக விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். (தி இந்து 04.08.2014)

தாய்ப்பால் கொடுப்பதால் ஏற்படும் நன்மைகள் பற்றியும் அதன் அவசியம் குறித்தும் மேமே சொல்லப்பட்ட நிபுணர்களின் கருத்துக்களும் கண்டுபிடிப்புகளும் இந்நூற்றாண்டில் நாம் அடைந்த அறிவியல் வளர்ச்சியின் விளைவாகும் சில நூற்றாண்டுகளுக்கு முன்வரை இந்த உண்மையை நமது மூதாதையர்களுக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லை. இருப்பினும் அக்கால பெண்கள் குழந்தைகளுக்கு தாய்ப்பால் கொடுத்து வளர்ப்பதை தங்களின் கடமையாகக் கருதினார்கள் தாய் பாசத்தின் பிரதிபலிப்பாக அது சமூகத்தால் நோக்கப்பட்டது. ஆனால் நாளடைவில் நிலமை மாறியது. ஆதில் பெண்கள் மட்டும் விதி விலக்கல்ல குழந்தை பிறப்பதையே தள்ளிப்போடும் அளவுக்கு அவர்களது மனநிலை மாறியது. கருத்தடை மாத்திரைகளை உட்கொண்டு அவர்கள் தங்களின் ஆரோக்கியத்தை கெடுத்துக் கொண்டனர்.

குழந்தைகள் பிறந்தாலும் தாய்ப்பால் கொடுப்பதால் தனது மேனி அழகு குறைந்து விடும் என்றுகருதினர். ஆனாலும் தமது குழந்தைகளுக்கு தாய்ப்பால் கொடுத்து வளர்ப்பதை கடமையாகவும் அவசியமற்ற சடங்காகவும் கருதி ஒதுக்கினர். சமூகமும் குடும்பமும் கூட அதற்கு ஒத்துழைத்தது என்றே சொல்ல வேண்டும்.

இப்போது அறிவியல் உலகில் சமூகம் விழித்துக் கொண்டு தாய்ப்பால் கொடுப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு வாரம் கொண்டாடி இளம் தாய்மார்களை தட்டி எழுப்புகின்றது. அவர்களின் அச்சத்தையும் நம்பிக்கையின்மையையும் போக்குகின்றனர். இந்நேரத்தில் 1400 ஆண்டுகளுக்கு முன் அருளப்பட்ட இறுதி இறைவேதமாம் திருக்குர்ஆன் அதுபற்றி என்ன கூறுகின்றது என்பதை அறிவது நமது கடமையாகும். பரப்புரை செய்வதும் நம்மீதுள்ள சுவையான சுமையாகும்.

ஒரு தாய் தன் குழந்தைக்கு முழுமையாக 2 ஆண்டுகளுக்கு தாய்ப்பால் கொடுக்க வேண்டும் என்ற கட்டளையை நாம் குர்ஆனில் படிக்கும் போது நமக்கு பெரும் வியப்பு மேலிடுகிறது. இதனைதான் இன்றைய அறிவியல் வல்லுனர்களும் அறிவுறுத்துகிறார்கள். குடும்பத்தில் ஏற்படும் எந்த வித சூழ்நிலையிலும் குழந்தைக்கு தாய்ப்பால் கிடைக்காமல் போய்விடக்கூடாது என்பதற்கு குர்ஆன் வலியுறுத்தும் வழிகாட்டுதல்கள் பச்சிளம் குழந்தையின் பிறப்புரிமையை பாதுகாக்க கூடியதாக இருக்கின்றன இதோ குர்ஆன். “தாய்மார்கள் தம் குழந்தைகளுக்கு இரண்டு வருடங்கள் முழுவதும் பாலூட்ட வேண்டும் (இது) பாலூட்டுவதை முழுமைப்படுத்த விரும்புகின்றவர்க்கு (உரியதாகும்). (தாய்மார்களாகிய) அவர்களுக்குரிய நியாயமான உணவு உடை ஆகியவற்றிற்கான பொறுப்பு தந்தையை சாரும். எந்த மனிதன் மீதும் அவனுடைய தகுதிக்கு அப்பாற்பட்ட பொறுப்பு சுமத்தப்பட மாட்டாது. எந்த தாயையும்



தன் குழந்தையின் காரணமாக (தந்தை) துன்புறத்தக்கூடாது. எந்தத் தந்தையையும் தன் குழந்தையினால் (தாய்) துன்புறுத்தக் கூடாது. அவ்வாறு செய்வதும் வாரிசுக்கும் (கடமையாக) உள்ளது. அவ்விருவரும் தம்முள் உடன்பட்டு கலந்து ஆலோசித்து பாலூட்டுவதை நிறுத்திக் கொள்ள விரும்பினால் (அதனால்) அவர்களுக்கு எந்தக் குற்றமுமில்லை. நீங்கள் உங்கள் குழந்தைகளுக்குச் செவிலித்தாய் மூலம் பாலூட்ட விரும்பி நீங்கள் கொடுக்க ஒப்புக் கொண்டதனை நியாயமான முறையில் நிறைவேற்றுங்கள் உங்கள் மீது எந்தகைய குற்றமுமில்லை. அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள் நீங்கள் செய்வதை நிச்சயமாக அல்லாஹ் பார்க்கின்றான் என்பதையும் தெரிந்துக் கொள்ளுங்கள். (திருக்குர்ஆன் 02:233)

மேற்கண்ட வசனத்தை மீண்டும் ஒருமுறை கவனமாய் படியுங்கள் 2 ஆண்டுகளுக்கு முழுமையாக குழந்தைக்கு தாய்ப்பால் கொடுக்கப்பட வேண்டும் என்பதை குர்ஆன் வலியுறுத்திக் கூறுகிறது. குழந்தைக்கு தாய்ப்பால் கிடைப்பதற்கும் அதனுடைய உரிமை பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்கு குர்ஆன் வகுத்துத்தந்துள்ள சமூக அரண்களை கவனியுங்கள்.

பாலூட்டப்படும் குழந்தை ஒன்று கையிலிருக்கும் நிலையில் ஒரு பெண் மணவிலக்குப் பெற்றாலும் கூட குழந்தையின் அந்த உரிமைக்கு எந்த பாதிப்பும் நேர்ந்துவிடக்கூடாது என்பதில் குர்ஆன் மிகக் கண்டிப்பாக இருக்கிறது. அந்த தாய் தன்குழந்தைக்கு தொடர்ந்து பாலூட்ட வேண்டுமென்றும் அதே நேரத்தில் தந்தை அக்குழந்தைக்கும் தாய்க்குமான பராமரிப்பு செலவுகளை ஏற்க வேண்டுமென்றும் கட்டளையிடுகிறது. தாயோ அல்லது தந்தையோ தனது குழந்தையை ஒரு பாரமாக கருதிவிடக்கூடாது. என்பதற்கான நிவாரணங்களையும் குர்ஆன் சுட்டிக் காட்டுகிறது. ஆதன் ஒரு பகுதியாகவே தாய் தந்தையரின் வாரிசுகளுக்கும் குழந்தை வளர்ப்பில் பங்கிருக்கிறது என்று குர்ஆன் கூறுகிறது. தாய் தந்தை இருவரும் உடன்பட்டு கலந்து பேசி பாலூட்டுவதை தாய் நிறுத்தும் நிலை ஏற்பட்டால் மட்டுமே செவிலித்தாய் மூலமேனும் குழந்தைக்கு பாலூட்ட வேண்டுமென்று குர்ஆன் கூறுகிறது.

குழந்தைக்கு பாலூட்டுதல் பாலூட்டுவதை நிறுத்திவிடுதல் ஆகியவற்றை குறித்து முடிவெடுப்பதை குர்ஆன் ஆண் பெண் இருவருக்கும் உடன்பாடான கூட்டு விருப்பத்துக்கே விட்டுள்ளது. இவ்வாறு குடும்ப விவகாரங்களில் கணவனையும் மனைவியையும் ஒரு தகுதியில் கண்டு சமமான உரிமைகளை வழங்குவது குர்ஆனுக்கே உரிய தனிச்சிறப்பாகும் மணவிலக்கு பெற்ற பின்னரும் பெண்ணின் உணர்வுகளையும் உரிமைகளையும் இந்த அளவிற்கு மதிக்குமாறு குர்ஆன் கணவனை வலியுறுத்துகையில் இல்லறவாழ்வில் பெண்ணின் உணர்வுகளை எந்த அளவிற்கு மதித்து நடக்க வேண்டும் என்பதற்கு இங்கு ஆலோசனையும் அறிவுரையும் இருக்கிறது. இந்த புரிதலே குடும்பத்தையும் சமூகத்தையும் ஆரோக்கியமாக வைத்திருக்கும்.

# சிராதுல் முஸ்தகீம் பதிப்பகம்

## தொடக்க விழா மற்றும் நூல் வெளியீட்டு விழா

சிராதுல் முஸ்தகீம் பதிப்பகம் தொடக்க விழா மற்றும் 'இஸ்லாமிய கலாச்சாரம்' நூல் வெளியீட்டு விழா சென்னை மண்ணடி முஸ்லீம் லீக் மாநில தலைமையகத்தில் உள்ள பரக்கத் அரங்கில் 17.08.2014 அன்று காலை 10 மணி முதல் 1.00 வரை சிறப்பாக நடைபெற்றது.

விழாவுக்கு 'வைகறை வெளிச்சம்' மாத இதழ் ஆசிரியர் மூத்த பத்திரிக்கையாளர் மு. குலாம் முகம்மது தலைமை தாங்கினார்.

விழாவில் மௌலவி வி. தமீம் அன்சாரி ஆலிம் காஷிஃபி கிராஅத் ஓதி வரவேற்புரை நிகழ்த்தினார். விழாவில் மு.குலாம் முஹம்மது அவர்கள் தலைமை உரை நிகழ்த்தினார்கள்.

மௌலவி K.M. இல்யாஸ் ரியாஜி (தலைமை இமாம் மந்தைவெளி) நூலாய்வுரை நிகழ்த்தினார்கள். நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்ட பேராசிரியர் K.M. காதர் மொய்தீன் தேசிய பொதுச் செயலாளர் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் ) முதல் பிரதி வெளியிட தொழிலதிபர் M.முஹம்மது அன்சாரி பெற்றுக் கொண்டார். இரண்டாம் பிரதியை இந்திய யூனியன் தமிழ் மாநில பொதுச்செயலாளர் K.A.M. முஹம்மது அபூபக்கர் அவர்கள் வெளியிட பத்திரிக்கையாளர் மு. குலாம் முஹம்மது அவர்கள் பெற்றுக் கொண்டார்கள்.

நிகழ்ச்சியில் சென்னை மண்ணடி மஸ்ஜிது மஃமூர் பள்ளிவாசல் இமாம்களான மௌலானா இல்யாஸ் காஸிமி, மௌலானா அப்துர் ரஹ்மான் ஹஜ்ரத், மண்ணடி அஷ்ரஃப் பள்ளிவாசல் தலைமை இமாம் மௌலானா சித்தீக் அலீ பாகவி ஹஜ்ரத், லஜ்னதுல் முஹ்ஸினீன் பள்ளிவாசல் தலைமை இமாம் பக்ருத்தீன் பாகவி, சென்னை அஷ்ரப் பள்ளிவாசல் மத்ரஸா ஹஜ்ரத் முஹ்யித்தீன் ரஹ்மானி ஹஜ்ரத் மற்றும் உலமாக்கள் பலரும், மூத்த எழுத்தாளர்களான மறுமலர்ச்சி த.மு.மு.க மாநில தலைவர் கேப்டன்



அமீருத்தீன், தாழை மதியவன், மூத்த எழுத்தாளர் நூருல்லாஹ் , முஸ்லிம் லீக் மாநில செயலாளர் காயல் மஹ்பூப் அவர்கள், தாருல் இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ்ட் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.



நிகழ்ச்சியின் முடிவில் மௌலவி அபுல் ஹஸன் ஆலிம் ஃபாஸி (காப்பாளர் சிராதுல் முஸ்தகீம் பதிப்பகம்) நன்றி கூறினார். (அல்ஹம்து லில்லாஹ்)

# நான் ஏன் முஸ்லிம் ஆனேன்?



**தொடர் 13**

மௌலவி அபுல்ஹஸன் ஃபாஸி M.A.

அல்குர்ஆனில் அல்லாஹ் கூறுகிறான். "நபியே! நீங்கள் விரும்பியவர்களுக்கு நேர்வழி காட்டிட இயலாது. என்றாலும் அல்லாஹ் அவன் நாடியவர்களை நேர்வழிப்படுத்துகிறான்." (அல்குர்ஆன் 28:56) இவ்வசனம் நபி (ஸல்) அவர்கள் தமது சிறிய தந்தை அபூதாலிப் இஸ்லாத்தை ஏற்காமல் மரணித்ததை நினைத்து வருந்திய சமயத்தில் அருளப் பெற்றது.

உண்மையில் ஹிதாயத் எனும் நேர்வழி அல்லாஹ்வின் நாட்டத்தில் உள்ளதாகும். அவன் நாடியவர்களை நேர்வழிக்கு கொண்டு வருகிறான். அவன் நாடியவர்களை வழிகேட்டில் திளைக்கச் செய்கிறான்.

### விதியே முந்துகின்றது

ஒருவனின் வாழ்க்கையில் நடப்பவை அனைத்தும் அவனது விதிப்படியே நடக்கின்றது. அவன் என்ன தான் செய்தாலும் சரி! பிறப்பு, இறப்பு, ரிஸ்க் எனும் வாழ்வாதாரம், ஹிதாயத் எனும் நேர்வழி ஆகியவை விதிப்படியே வாழ்க்கையில் கிடைக்கின்றன.

ஆம். மனித வாழ்க்கையில் விதியே முந்துகிறது. இன்னும் சொல்வதெனில், விதி வாழ்க்கையை விட மட்டுமல்ல..மனிதனை விடவும், இன்னும் எல்லா படைப்புகளை விடவும் முந்தியதாகும்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். " வானங்கள் மற்றும் பூமியை படைப்பதற்கு ஐம்பதாயிரம்வருடங்களுக்கு முன்பு படைப்புகளின் விதியை அல்லாஹ் எழுதி விட்டான்." (நூல் : முஸ்லிம்)

வாழ்க்கையில் விதி முந்துவதால் தான் ஒரு துறையில் சாதிக்க நினைத்த சிலர் இன்னொரு துறைக்கு சென்று விடுகிறார்கள்.

டாக்டராக நினைத்தவர் பொறியாளராக ஆவதும், அரசு ஊழியராக ஆக நினைத்தவர் வியாபாரியாக மாறுவதும் நடக்கின்றன. மனித வாழ்க்கையில் சில திருப்புமுனைகள் நடப்பதற்கு விதியே முக்கிய காரணம்.

அமெரிக்காவைச் சேர்ந்த 'ஜோசுவா எவன்ஸ்' இத்தகைய திருப்புமுனையை சந்தித்த ஒருவரே. பழமையான கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்த இவர், கிறிஸ்தவ பாதிரியாராகவும், கிறிஸ்தவ பிரச்சார அழைப்பாளராகவும் ஆகிட விரும்பினார். ஆனால் அல்லாஹ்வின் விதியில் அவர் முஸ்லிமாகவும், இஸ்லாமிய தஃவா அழைப்பாளராகவும் வாழ்வதாக இருந்தது.

கிறிஸ்தவ மத போதகர் ஆவதை இலட்சியமாகக் கொண்டு வாழ்ந்த ஜோசுவா முஸ்லிமானார். தற்போது அமெரிக்காவில் இஸ்லாமிய தஅவா அழைப்பாளராக பணியாற்றி வருகிறார்.

### நான் ஏன் முஸ்லிம் ஆனேன்?

அமெரிக்காவின் தெற்கு கரோலினா மாகாணத்தில் உள்ள கிரின்வில்லி (Greenvill) நகரைச் சேர்ந்தவர் ஜோசுவா எவன்ஸ் (Joshua Evans). மெத்தோடிஸ்ட் பிரிவு கிறிஸ்தவ குடும்பத்தைச் சேர்ந்த ஜோசுவா, கிறிஸ்தவ மதப் பிடிப்பில் மிகவும் கண்டிப்புடன் வளர்க்கப்பட்டார்.

அவரின் குடும்பம் வாரம் தவறாமல் சர்ச்சுக்கு சென்றது. ஜோசுவா சிறுவயதில் இருந்தே சர்ச்சுகளில் நடக்கும் ஞாயிற்றுக்கிழமை பைபிள் வகுப்புகளில் கலந்து கொண்டார்.

ஜோசுவாவை ஒரு கிறிஸ்தவ மத பாதிரியாகவும், மத போதகராகவும் ஆக்கிட வேண்டும் என்பது அவரது குடும்பத்தார்களின் ஆசை. அவரின் உள்ளத்திலும் அவ்வெண்ணம் இருக்கவே செய்தது.

அதனை நிறைவேற்றும் எண்ணத்தில் பள்ளிப் படிப்பு முடிந்தவுடன் அவரது சொந்த ஊரில் அமையப் பெற்றிருந்த பாப் ஜான்ஸ் பல்கலைகழகத்தில் (Bob Jones University) பட்டமேற்படிப்புக்கு சேர்ந்தார். அப்பல்கலை. சர்வதேச அளவில் புகழ்பெற்ற பைபிள் கல்லூரிகளில் ஒன்று.

அங்கு சேர்ந்த பிறகு பைபிளை ஆரம்பம் முதல் கடைசி வரை (cover to cover) முழுமையாக படித்தார் ஜோசுவா. பைபிளை முழுமையாக படித்தும் தனக்குள் எந்த மாற்றமும் ஏற்படாததை உணர்ந்த அவர், தொடர்ந்து படிக்க படிக்க கிறிஸ்தவத்தை அதன் முழு வடிவத்தில் அறியத் தொடங்கினார்.

#### கிறிஸ்தவத்தின் மீது நம்பிக்கை இழந்தார்

1996 ஆம் ஆண்டு. அவ்வாண்டில் அவரது வாழ்க்கை மாற்றத்தை சந்தித்தது. ‘கிறிஸ்தவ அழைப்பாளர்’ கனவுடன் பாப் ஜான்ஸ் பல்கலையில் சேர்ந்த அவருக்கு பைபிளை முழுமையாக படித்த பிறகு அவரின் ‘பாதிரியார் கனவு’ தகர்ந்து போனது.

பைபிளில் அவர் கண்ட மூன்று விஷயங்கள் அதன் மீது அவர் வைத்திருந்த நம்பிக்கையை தகர்த்தெறிந்தது. அவை பின்வருமாறு,

#### 1.பைபளில் காணப்பட்ட குளறுபடிகள்

பைபிளை அவர் ஆய்வு ரீதியாக படிக்கத் தொடங்கிய பொழுது அதில் பல தவறுகள் இருப்பதை கண்டறிந்தார். பைபிள் குறித்து அவர் ஆய்வு செய்த பொழுது பல வகையான பைபிள்கள் அவர் கையில் கிடைத்தன. பல பதிப்புகளில், பல பிரதிகளில் காணப்பட்ட அவை ஒவ்வொன்றும் ஒன்றுக்கொன்று வித்தியாசப்பட்டன.

ஒரு பதிப்பில் காணப்பட்ட ஒன்று இன்னொரு பதிப்பில் இல்லை. அவ்வாறே ஒரு பதிப்பில் குறைவான வாசகத்தில் சொல்லப்பட்ட ஒன்று இன்னொரு பதிப்பில் அதிகமாக கூறப்பட்டிருந்தது.

சொந்த நலனுக்காக ‘சேர்த்தல் நீக்குதல்’ அதில் புகுந்திருப்பதை கண்டறிந்தார் ஜோசுவா. ஹிப்ரு, கிரீக் மொழிகளில் உள்ள பைபிள்கள் வரை படித்துப் பார்த்தார். எனினும் எந்த மாற்றத்திற்கும் ஆளாகாத மூலப் பிரதி என்று எதனையும் அவரால் கண்டறிய முடியவில்லை.

#### 2. முன்மாதிரியாக ஆக இயலாத பைபிள் கதாபாத்திரங்கள்

சிறுவயதில் சர்ச்சில் ஞாயிற்றுக்கிழமை வகுப்புகளில் அவர் கலந்து கொண்ட காலத்தில் நோவா (நபி நூஹ்) மற்றும் அவரின் கப்பல் குறித்தும், தாவீத் (நபி தாவூது) மற்றும் கோலியாத் (அரபியில் ஜாலூத்) குறித்தும், மோசஸ் (நபி மூஸா) மற்றும் அவர் செங்கடலை கடந்தது குறித்தும், இன்னும் இயேசு (நபி ஈஸா) குறித்தும் பல செய்திகளை கேள்விப்பட்டிருந்தார்.

பைபிளை அவர் படித்த சமயத்தில், அவர்களில் சிலரைப் பற்றி மிக மோசமாக அதில் கூறப்பட்டிருந்தது. மது அருந்துதல், விபச்சாரம், தகாப்புணர்ச்சி (incest) போன்றவற்றில் அவர்கள் ஈடுபட்டதாக அதில் காணப்பட்டது.

மிகவும் அற்புதமான விஷயங்களை நிகழ்த்திய அவர்களிடம் இத்தகைய ஒழுக்க கேடுகளும் இருந்தனவா? தனக்குத் தானே கேள்வி கேட்டுக் கொண்டார் ஜோசுவா.

கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தார். அவர்களில் யாரையும் மனித வாழ்க்கைக்கு முன்மாதிரியாக ஆக்கிட முடியாது.

**3. திரித்துவக் கொள்கை.**

கிறிஸ்தவத்தில் ஜோசுவாவுக்கு பிடிக்காமல் போன மூன்றாவது விஷயம் திரித்துவக் கொள்கையாகும்.

அவர் புதிய ஏற்பாட்டிலும், பழைய ஏற்பாட்டிலும் ஓரிறைக் கொள்கை பற்றி கூறப்பட்டிருந்ததை அறிந்தார். எனினும் கிறிஸ்தவர்கள் பிதா, சுதன், பரிசுத்த ஆவி முக்கடவுள் கொள்கையை கடைபிடித்தனர். இது அவருக்கு பெரும் குழப்பத்தை தந்தது.

**மதங்கள் குறித்த ஆய்வு**

கிறிஸ்தவத்தின் மீது நம்பிக்கை இழந்த பிறகு உண்மையைத் தேட முயற்சித்தார் ஜோசுவா. மெய்யான இறைவழிகாட்டலை அடைந்தே தீர வேண்டும் என்ற ஆசையில், எல்லா மதங்களையும் படித்தார். ஆய்வு செய்தார். அவற்றில் எதனையும் அவரின் மனம் ஏற்கவில்லை. எனினும் தேடலை அவர் கைவிடவில்லை. விடாமல் உண்மையை தேடிக் கொண்டே இருந்தார்.

**இஸ்லாத்தை ஏற்றார்**

இந்நிலையில், முஸ்லிம் ஒருவரின் நட்பு அவருக்கு கிடைத்தது. அந்நண்பர் திருக்குர்ஆன் மொழிபெயர்ப்பு ஒன்றினை ஜோசுவாவுக்கு தந்தார். திருக்குர்ஆனை ஆரம்பம் முதல் கடைசி வரை (cover to cover) படித்த பிறகு 1998 ஆம் ஆண்டு இஸ்லாத்தை ஏற்றார். இஸ்லாத்தை ஏற்ற பிறகும் இஸ்லாத்தை அறிவதையும், திருக்குர்ஆனை கற்றுக் கொள்வதை அவர் நிறுத்தவில்லை.

உலகில் பல்வேறு பகுதியில் உள்ள திருக்குர்ஆன் அறிஞர்களிடம் இஸ்லாமிய அறிவியல், குர்ஆன் அறிவியல், உளவியல் ஆகிய பாடங்களை படித்தார்.

அவர்களில் மத்திய மேற்கு அமெரிக்காவில் உள்ள மின்னசெட்டா மாநிலத்தில் உள்ள இஸ்லாமிய பல்கலைகழகத்தின் துணை முதல்வர் டாக்டர் வலீத் இத்ரீஸ் அல்மூனிசி (Shaykh Waleed Al-Menesse,) முக்கியமானவர்.

**கேள்வி பதில் நிகழ்ச்சி**

அமெரிக்காவில் இரண்டு தொலைக்காட்சிகளை நடத்தி வரும், 'ஜோசுவா' தொலைக்காட்சி நேர்காணல் ஒன்றில் கலந்து கொண்டார். அதில் இஸ்லாத்தை ஏற்றது குறித்து அவரிடம் கேள்விகள் கேட்கப்பட்டன. அவரிடம் கேட்கப்பட்ட கேள்விகளும் அதற்கான பதில்களும் பின்வருமாறு,

<u>கேள்வி:</u> உங்களின் மத நம்பிக்கை குறித்து கூறுங்கள்?

<u>பதில்:</u> சிறுவயதில் எனது சொந்த ஊரான கிரின்வில்லி இல் படித்த காலத்தில் இருந்தே நான் மத நம்பிக்கை கொண்டவனாகவே திகழ்ந்தேன்.

<u>கேள்வி:</u> உங்களின் கிறிஸ்தவ மத தொடர்பு குறித்து கூறுங்கள்?

<u>பதில்:</u> எனது கிறிஸ்தவ தொடர்பு மிகவும் பழமையானது. நான் பிறந்ததே பழமையான கிறிஸ்தவ குடும்பத்தில் தான்.

மேலும் பாலர் பருவத்தில் இருந்தே சர்ச்சுகளில் ஞாயிற்றுக் கிழமை நடக்கும் பைபிள் வகுப்புகளில் நான் கலந்து கொண்டிருந்தேன். உலகப் புகழ் பெற்ற பைபிள் சிறப்பு பல்கலைகழகமான பாப் ஜான்ஸ் பல்கலை.யில் (Bob Jones University) நான் சேர்ந்ததே கிறிஸ்தவ மிஷனரி அமைச்சராக ஆக வேண்டும் என்பதற்காகவே.

மேலும் பைபிள் சிறப்பு கல்வியாளராக ஆகிட வேண்டும் என்றும் விரும்பினேன். இதற்காக ஹிப்ரு மற்றும் கிரீக் மொழி பைபிள்களையும் ஆய்வு செய்துள்ளேன்.

<u>கேள்வி:</u> எப்பொழுது இஸ்லாத்தை ஏற்றீர்கள்? அதற்கான காரணம் என்ன?

<u>பதில்:</u> பகுப்பாய்வு என்ற அடிப்படையில் ஆறு அல்லது ஏழு தடவை பைபிளை ஆரம்பம் முதல் கடைசி வரை (cover to cover) முழுமையாக படித்தேன். அப்போது அதில் பல முரண்பாடுகள் இருப்பதை அறிந்தேன். விளைவு அதுவரை நான் சேர்ந்திருந்த மிஷனரியை விட்டு விலகினேன்.

தொடர்ந்து மெய்யான மத வழிகாட்டலை தேடும் முயற்சியில் பௌத்த மதம், டாவோயிசம் மற்றும் எதுவெல்லாம் இவ்வுலகில் மதக் கொள்கையாக இருக்கின்றதோ அவை அனைத்திலும் உண்மையை தேடினேன். எனினும் அவற்றில் எதுவும் உண்மையை வழிகாட்டவில்லை.

ஒருநாள் முஸ்லிம் நண்பர் ஒருவரை யதார்த்தமாக சந்தித்தேன். அவர் பள்ளிவாசலுக்கு வெள்ளிக்கிழமை (ஜும்ஆ) தொழுகைக்கு வருமாறு என்னை அழைத்தார்.

அப்போது நான் இஸ்லாத்தை ஏற்றிருக்கவும் இல்லை. முதன் முதலில் முஸ்லிம்களின் பள்ளிவாசலில் தொழுகைக்காக சென்றேன். முஸ்லிம்களின் தொழுகையை பார்த்தேன். அது என்னை அதிகம் கவர்ந்தது. எனது உள்ளத்தில் ஏனோ ஒரு மாற்றத்தை விதைத்தது.

தொழுகை முடிந்த பிறகு எனக்கு திருக்குர்ஆன் பிரதி ஒன்றினை தருமாறு நண்பரிடம் வேண்டினேன். அவர் தந்தார். சுமார் ஒரு வாரம் திருக்குர்ஆனை முழுமையாக (cover to cover) படித்தேன். ஒரு வார காலமே எனக்குப் போதுமானதாக இருந்தது.

1998 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இஸ்லாத்தை ஏற்றேன். அல்லாஹ் நிறைவானவன்.

<u>கேள்வி :</u> முஸ்லிமாகும் முடிவு எப்படி கடினமாக இருந்தது?

<u>பதில்:</u> முடிவு கடினமானதல்ல.. முடிவு எடுத்த பின்பு தான் கஷ்டங்கள் அணிவகுக்கும்.

<u>கேள்வி:</u> உங்களின் மதமாற்ற முடிவை உங்களின் குடும்பம் எப்படி எடுத்துக் கொண்டது?

<u>பதில்:</u> என்னை வளர்த்தவர் எனது பாட்டி. அவருக்கு நான் முஸ்லிமானதை ஜீரணிக்கவே முடியாமல் இருந்தது. எனது தாயார் பாப்டிஸ்ட் கிறிஸ்தவர். தந்தை' ஃப்ரீமேசனரி' (Freemasonry விடுதலை கட்டுனர் என்பது இதன் பொருள்) அமைப்பைச் சேர்ந்தவர்.

யாருக்கும் எதற்கும் அடிமைப்படாத 'சுதந்திரம்' என்பதைக் கொள்கையாக கொண்ட அமைப்பு அது. அதில் சேர்ந்திருந்த அவரால் எனது மதமாற்றத்தை ஏற்க இயலவில்லை.

அத்துடன் எனது குடும்பம் மிகவும் பெரியது. எனது குடும்ப

உறுப்பினர்களில் சிலர் தெற்கு கரோலினா அரசியலில் ஆதிக்கம் செலுத்துபவர்கள். ஆதலால் என்னை தனியாக அழைத்துப் பேச மட்டுமே முயற்சித்தார்கள். வெளிப்படையான கண்டனம் எதனையும் தெரிவிக்கவில்லை.

<u>கேள்வி:</u> ஒருவர் சரியான முறையில் இஸ்லாத்தை ஏற்பது எப்படி?

<u>பதில்:</u> அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை. முஹம்மது நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் திருத்தூதராக இருக்கிறார்கள் என்று உள்ளத்தில் ஏற்று,நாவால் மொழிந்து விட்டால் ஒருவர் முஸ்லிமாகி விடுவார். இதுவே 'ஷஹாதத் (சாட்சி) கூறுதல்' என்றழைக்கப்படுகிறது.

இதற்கு ஒரு சாட்சி தேவை. அவர் யாராகவும் இருக்கலாம். நான் எனது முஸ்லிம் நண்பரிடம் அவரின் வீட்டில் வைத்து தான் இதனைக் கூறி இஸ்லாத்தை ஏற்றேன். மற்றபடி சடங்குகள் ஏதும் கிடையாது.

<u>கேள்வி:</u> இஸ்லாம் உங்களின் வாழ்க்கையில் எத்தகைய மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது?

<u>பதில்:</u> கிறிஸ்தவ மதத்தில் இருந்து விலகிய பின்பு வாழ்க்கைப் பாதையில் தலைகீழாக பயணித்தேன். 17 வயது இளம் வாலிபராக இருந்த நான் உலக குழப்பங்களில் சிக்கித் தவித்தேன். ஆனால், இஸ்லாம் தான் சரியான பாதையில் என்னை திருப்பியது. ஆரம்பத்தில் எதிர்த்த எனது குடும்பத்தார்கள் இஸ்லாத்தை ஏற்ற பிறகு முன்பு இருந்ததை விட நன்றாகவும் நல்ல மனிதர்கள் தொடர்பு கொண்டவனாகவும் ஆனதை கவனிக்கவே செய்தனர்.

<u>கேள்வி:</u> உங்களின் மதமாற்றம் உங்களைப் பற்றி உங்களுக்கு என்ன புரிய வைத்துள்ளது?

பதில் : என்னைப் பற்றி எனது புரிதலில் மாற்றம் ஏதும் ஏற்பட்டிருப்பதாக நான் உணரவில்லை. என்றாலும் என்னை விட எல்லா வகையிலும் சிறந்த ஒருவனுடன் தொடர்பு வைத்துள்ளேன் என்பதை மட்டும் நான் உணர்கிறேன்.

அதற்கு இஸ்லாமே காரணம். படைத்த ஏக இறைவனுடன் அதுவே நம்மை இணைக்கின்றது.


<u>கேள்வி:</u> உண்மை மதம் என்று நீங்கள் நம்பும் இஸ்லாத்தை மற்றவர்களுக்கு பரிந்துரைப்பீர்களா?

<u>பதில்:</u> நிச்சயம் பரிந்துரைப்பேன். உலகில் உள்ள எல்லா மதங்களும் தாமே 'உண்மை மதம்' என்று வாதிக்கின்றன. எனினும் 1400 ஆண்டுகளாக உண்மைத்தன்மையை இழக்காமல் இருக்கும் ஒரே மதம் இஸ்லாம் மட்டுமே. இன்னும் சொல்வதெனில், ஆதிபிதா ஆதம் (அலை), இறைத்தூதர் இப்ராஹீம் (அலை) ஆகியோரின் மதமும் இஸ்லாமே. படைத்த ஏக இறைவனின் வழி ஒரே வழிதான். அவன் தமது வழிகாட்டலை அடிக்கடி மாற்றுவதில்லை.

**இஸ்லாமிய தஅவா பணி**

பாதிரியார் கனவுடன் கல்லூரி சென்ற ஜோசுவா இஸ்லாத்தை ஏற்ற பின்பு 'யூஷஃ' எனும் அழகிய பெயரில் இஸ்லாமிய தஅவா (பிரச்சார) அழைப்பாளராக செயல்பட்டு வருகிறார். தற்போது அமெரிக்காவில் உள்ள ஃப்ளோரிடா மாநிலத்தில் வாழ்ந்து வரும் இவர், விவாதங்கள், உரைகள், உரையாடல்கள், தொலைக்காட்சி நேர்காணல்கள், இணையதளங்கள் மற்றும் முகநூல் வழியாக இஸ்லாமிய பிரச்சாரம் செய்து வருகிறார்.

தொடர்புக்கு : abulhasanf@gmail.com




# பெட்டகம்

## நூல் விமர்சனம்

பேராசிரியர் முனைவர் **அப்துல் சமத்**



முஸ்லிம் சமூகத்தைப் பின்புலமாகக் கொண்ட கோயம்புத்தூரி ன் 300 ஆண்டுகால வரலாறு, அமீர் அல்தாபின் அரிய முயற்சியில் பெட்டகமாக வெளிவந்துள்ளது.

நிலம், மொழி, இனம், சாதி, சமயம் சார்ந்து ஒடுக்கப்பட்ட இனங்கள் சிறுபான்மைச் சமூகங்கள் விளிம்புநிலை மக்கள் தங்களை அடையாளப்படுத்தும் அரசியல் இன்று உலகம் முழுவதும் நடந்து வருகிறது.

அதிலும் குறிப்பாகத் தங்கள் உரிமைகளைப் பெறுவதற்காகவும், வாழ்வியல் இருப்பைத் தக்கவைத்துக் கொள்வதற்காகவும் வாழும் மண்சார்ந்து வட்டாரம் சார்ந்து தங்களை அடையாளப்படுத்துவது குறிப்பிடத்தக்கது. முஸ்லிம் முன்னேற்றக் கழகம் என்பது தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகம் என்றும், முஸ்லிம் லீக் என்பது தமிழ்மாநில முஸ்லிம் லீக் என்றும், தவ்ஹீத் ஜமாஅத் என்பது தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் என்றும் தங்களை அடையாளப்படுத்துவது இந்த அடிப்படையில் தான்.

இந்த அடையாள அரசியலின் ஒரு முயற்சிதான் தங்கள் வரலாற்றை, குறிப்பாக வட்டார வரலாற்றை கட்டமைத்தல் அல்லது மீட்டுருவாக்கம் செய்தல் என்பதாகும். தமிழகச் சூழலில் இந்த முயற்சியில் முஸ்லிம்கள் துவக்க நிலையிலேயே உள்ளனர். இந்த முயற்சியின் முன்னோடியாக சமீபத்தில் வெளிவந்த பெட்டகத்திற்காக, சென்னை சீதக்காதி அறக்கட்டளையின் ரூபாய் ஒரு லட்சத்துடன் கூடிய செய்கு சதக்கத்துல்லா அப்பா இலக்கிய விருதினை அமீர் அல்தாப் பெற்றுள்ளார்.

கோவையில் 1997ல் நடந்த கலவரமும், 1998 பிப்ரவரி 14ல் நடைபெற்ற தொடர் குண்டுவெடிப்பும், அதன் தொடர் கலவரங்களும், முஸ்லிம்களின் பொருளாதார அழிப்பும், கைது நடவடிக்கைகளும் கோவை முஸ்லிம்களின் மொத்த வாழ்க்கையை வேரோடு சாய்த்தன. அடக்கு முறைகளுக்குள்ளும் அவசரச் சட்டங்களுக்குள்ளும் மூச்சு திணறிய முஸ்லிம்கள், இன்று வரை சமூகப் பொருளாதாரத் தளங்களில் தங்களை நிலைநிறுத்திக் கொள்ள முடியாமல் தவித்து வரும் நேரத்தில் பெட்டகத்தின் வரவு முக்கியத்துவம் பெறுகிறது.

தீவிரவாதிகள், வந்தேறிகள், சக சமூகங்களுடன் ஒத்துப் போகாதவர்கள் என்ற விமர்சனங்களால் குறுகிப்போன ஒரு சமூகத்தினரை, நாங்கள் இந்த மண்ணின் மைந்தர்கள், கோவையின் சகல உருவாக்கத்திலும், வளர்ச்சியிலும் மகத்தான பங்களிப்பு செய்தவர்கள் என்று உரக்கச் சொல்லி உறுதிப்படுத்தும் முயற்சிதான் பெட்டகம்.

தமிழக முஸ்லிம்களின் வரலாறு சொல்லும் முனைப்பில், குமரி மாவட்ட முஸ்லிம்களின் வரலாற்றை ‘பெட்டகம்’ என்ற பொது அறிமுக நூலாக ஏற்கனவே முற்றம்’ இதழாசிரியர் அபூஹாசிமா தந்துள்ளர்.

முஸ்லிம்கள் பாரம்பரியமாக வாழும் காயல்பட்டிணம், கீழக்கரை, கடையநல்லூர், இளையான்குடி போன்ற சில வட்டார வரலாறுகள் ஏற்கனவே வெளிவந்துள்ளன. இவற்றுள் சேயன் இபுறாஹிம் தொகுத்துள்ள 'கடையநல்லூர் முஸ்லிம்களின் வரலாறு' ஒன்று மட்டுமே சமூகப் பண்பாட்டுப் பின்புலத்தோடு வெளிவந்துள்ள வட்டராம் சார்ந்த முஸ்லிம்களின் வரலாற்று நூலாகும். கோவை முஸ்லிம்களின் 300 ஆண்டுகால வரலாறாக வெளிவந்துள்ள பெட்டகம், வட்டார முஸ்லிம்களின் வரலாற்றைப் பன்முகத்தன்மையுடன் முறையாக ஆவணப்படுத்தியுள்ள முன்மாதிரித் தொகுப்பு எனலாம்.

சிறந்த வடிவமைப்பில், ஆரிட் பேப்பரில், 916 பக்கங்களில் அமைந்துள்ள இந்தநூலீல் 2300 வண்ணப் புகைப்படங்களுடன் கோவை முஸ்லிம்களைப் பற்றிய தகவல் களஞ்சியமாகத் திகழ்கிறது.

சிலதுறை சார்ந்த கோவை முஸ்லிம்களின் வரலாற்றைப் பதிவு செய்யும் போது, அது தொடர்பான தமிழக அளவிலான வரலாறும் பேசப்படுவது சிறப்பு கோவை வட்டாரத்தில் இஸ்லாத்தை வளர்த்து அங்கேயே அடக்கமாகியுள்ள இறைநேசச் செல்வர்களைப் பற்றிய பதிவில், தமிழகம் முழுக்க தீன்பயிர் வளர்த்த அருந்தவச்சீலர்கள் 154 பேரைப் பற்றிய தகவல்கள் இடம் பெறுவதும் கோவை முஸ்லிம்களின் இதழியல் துறைப் பங்களிப்பு இடம் பெறும் பகுதியில் 1888ல் வெளிவந்த 'அஃக்' முதல் 2013ல் வெளிவரும் 'சொர்க்கத் தோழி' வரையிலான முஸ்லிம்கள் வெளிக் கொணர்ந்த 564 இதழ்களைப் பற்றிய தகவல்களைப் பட்டியலிடுவதும், இது கோவை முஸ்லிம்களின் வரலாறா? தமிழக முஸ்லிம்களின் வரலாறா? என்ற பிரமிப்பை ஏற்படுத்துகிறது. அமீலீ; அல்தாபின் தேடல் ஆச்சர யப்படுத்துகிறது. சென்னை விருது வழங்கும் விழாவில், "இந்தப் பெட்டகத்திற்காக அமீர் அல்தாபிற்கு ஏதேனும் ஒரு பல்கலைக்கழகம் டாக்டர் பட்டம் வழங்கலாம்" என்று கவிக்கோ அப்துல் ரகுமான் குறிப்பிட்டது உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை.

பல்வேறு துறை சார்ந்த ஆளுமைகளையும் அவர்களது பங்களிப்புகளையும் பேசும் விதத்தில் வாசிப்போருக்கான முழுமையான புரிதலைத் தரும் புதுமைத் தென்படுகிறது. நாகூரில் பிறந்து கோவையில் வாழ்ந்து மறைந்த, 1938ல் 'காதலா கடமையா' நாவலைத் தந்த ஜெய்புன்னி'லீ என்ற சித்தி ஜுனைதாவை சிலவரிகளில் தருவதோடு நின்று விடாமல், அவரது நாவலுக்கு தமிழ்த்தாத்தா உ.வே.சா.வழங்கிய மதிப்புரையில் உள்ள தகவலையும் தருகிறார். 'காதலா கடமையா' நாவலின் கதைச் சுருக்கத்தையும் தந்து முழுமை சேர்க்கிறார்.

கோவை வட்டாரத்திலுள்ள 98 ஜமாஅத்துக்கள், மார்க்க கல்வி நிறுவனங்கள், சமூகத் தொண்டு அமைப்புகள் பற்றிய உருவாக்க வரலாறுகளை தகுந்த ஆதாரங்களுடன் முன்வைக்கிறார்.

கோவைக் கலவரத்தின் பாதிப்புகளைப் பதிவு செய்யும் 603 முதல் 614 வரையிலான பக்கங்களையும், 838 முதல் 861 வரையிலான பக்கங்களையும் ஒருதுளி கண்ணீர் சிந்தாமல் யாரும் வாசிப்பில் கடந்து செல்ல முடியாது.

கோவை முஸ்லிம்களின் வீழ்ச்சியோடு உலக முஸ்லிம்களின் வீழ்ச்சியையும் பேசுபவர், மீண்டும் முஸ்லிம் சமூகம் எழுவதற்கான ஆக்கப்பூர்வமான சிந்தனைகளை 'ஆண்ட சமூகம் ஆள்வது எப்போது?'

என்ற தலைப்பில் தருவதும், சமூகப் புரட்சிக்காக ஜமாஅத் நிர்வாகங்கள் முன்னெடுத்துச் செல்ல வேண்டிய 24 திட்டங்களைத் தருவதும் நூலாசிரியரின் சமூகப் பொறுப்புணர்வையும், படைப்பு நோக்கத்தையும் கவனப்படுத்துகிறது. கோவை முஸ்லிம்களின் 'நாளைய வரலாறு' எப்படி அமைய வேண்டும் என்பதை எழுத்தில் கட்டுரை வடிவில் தராமல், ஏற்கனவே கோவையில் நடைபெற்ற சமூக மேம்பாடு, நல்லிணக்கம் தொடர்பான ஆரோக்கியமான நிகழ்வுகளின் புகைப்படங்களால் ஓர் இயலையே நிரப்பி குறியீடாக வெளிப்படுத்தியிருப்பது புதுமை.

வரலாறு தொடர்பான ஒவ்வொரு தகவல்களைத் தரும்போதும் அதுகுறித்த குர்ஆன், ஹதீஸ் வலியுறுத்தல்களைப் தந்திருப்பது அமீர் அல்தாபின் ஆழங்கால்பட்ட மார்க்க அறிவையும், மார்க்க நெறிப்படி சமுதாயம் நடைபயில வேண்டும் என்ற நல்லெண்ணத்தையும் வெளிப்படுத்தினாலும், மார்க்க வலியுறுத்தல்கள் ஒவ்வொரு பகுதியிலும் நிரம்பி வழிவது வரலாறு குறித்த வாசிப்புக்குத் தடை ஏற்படுத்துவதாய் அமைந்துள்ளது. மார்க்க நெறிகளைப் பேசும் பக்கங்கள் குறைக்கப்பட்டால் 'பெட்டகம்' செறிவான ஒரு வட்டார வரலாற்றுப் புத்தகமாகத் திகழும். அத்தோடு கோவை முஸ்லிம்களின் பண்பாடு சார்ந்த பதிவுகள் முழுமையாகச் சேர்க்கப்பட்டால், இதுதான் முஸ்லிம்களின் வட்டார வரலாற்று நூலுக்கு முன்னோடி என்ற தகுதியைப் பெட்டகம் பெறும்.

பொது சமூகம் முஸ்லிம்களை புரிந்து கொள்வதற்கும், கலத்தல் சூழலில் இணக்கமான அமைதி வாழ்வு வாழ்வதற்கும், அங்கீகாரங்களை மீட்டெடுப்பதற்கும் இந்த பெட்டகம் நிச்சயம் வழிகாட்டும்.

திப்பு சுல்தான் ஆட்சியில் 'அமைதியின் நகர்' (ஸலாமாபாத்) என்று அழைக்கப்பட்ட கோவை அப்பெயருக்குரிய சூழலை மீண்டும் பெற இப்பெட்டகம் வழி வகுக்கட்டும்!

வெளியீடு : மர்கஸுல் உலூம் அன்சாரிய்யா அரபிக் கல்லூரி, போத்தனூர், கோவை : 641 023. 9843265550, 9842277866

★★★

# ஜமாஅத்துல் உலமா புதிய நிர்வாகிகள் தேர்வு

19.08.2014 சேலத்தில் தமிழ் மாநில ஜமாஅத்துல் உலமா சபையின் மாநில நிர்வாகிகளுக்கான தேர்தல் நடைபெற்றது.

லால்பேட்டை ஷைகுல் ஹதீஸ் அப்துர் ரஹ்மான் மிஸ்பாஹி தலைவராகவும் காரைக்குடி புதுவயல் முஹம்மது ரிழா பாக்கவி பொதுச் செயலாளராகவும் மதுரை முஹம்மது காசிம் பாக்கவி பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.



# உறுப்புக்களின் பணியைவிட உள்ளத்தின் பணியே முதன்மையானது

✍ இமாம் யூசுப் அல்கர்ளாவி

தமிழ்வடிவம்:
✍ மௌலவி இல்யாஸ் ரியாஜி

இஸ்லாத்தின் அளவு கோல்படி பார்த்தால் உடலின் வெளி உறுப்புக்களால் செய்யப்படும் பணிகளை விட உள்ளத்தின் பணியே முதன்மையானது.

இப்படி நாம் கூறுவதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன.

காரணம் ஒன்று : உள்ளம் என்ற அந்தரங்கமான உறுப்பின் செயல்தான் 'நிய்யத்' என்ற எண்ணம். இந்த 'உள்ளத்தின் நிய்யத்' இல்லாத எந்த செயலையும் அல்லாஹ் ஏற்றுக் கொள்வதில்லை நபி (ஸல்) கூறினார்கள். "செயல்கள் (ஒப்புக் கொள்ளப்படுவது) எல்லாம் எண்ணங்களைப் பொருத்தே" *(நூல் : புஹாரி)*

இவ்வுலகத்தில் ஒரு பணிமையச் செய்ய விரும்புவது பற்றி உள்ளத்தில் ஏற்படும் எண்ணமே 'நிய்யத்' ஆகும். இந்த 'நிய்யத்' அல்லாஹ்வுக்காக இருந்திட வேண்டும். அதாவது தனக்காக மட்டுமே செய்யப்படும் பணிகளைத் தான் அல்லாஹ் ஏற்கிறான் மற்றவர்களுக்காக செய்யப்படுவதை அல்லாஹ் ஏற்பதில்லை.

அல்லாஹ் கூறுகிறான்: உண்மையின் பக்கம் சார்ந்தவர்களாக மார்க்கப் பணிகளை அவனுக்காகவே (அல்லாஹ்வுக்காக) செய்தவர்களாக அல்லாஹ்வை வணங்கிடவே அவர்களுக்கு கட்டளையிடப்பட்டுள்ளது. *(திருக்குர்ஆன் 98:5)*

நபி (ஸல்) கூறினார்கள்: தனது திருப்தியை மட்டுமே நாடிச் செய்யப்படுகின்ற தூய நற்செயல்களை மட்டுமே அல்லாஹ் ஏற்றுக் கொள்வான். *(நூல் : நஸயீ)*

நபி (ஸல்) கூறினார்கள்: அல்லாஹ் கூறுகிறான் இணைவைப்பை விட்டும் தேவையற்றவர்கள் அனைவரை விடவும் நானே அறவே தேவையற்றவன் தன்பணிகளில் ஒருவன் என்னுடன் இன்னொருவனை இணையாக்கினால் அவனுடைய இணைவைப்புடனேயே அவனை நான் விட்டுவிடுவேன். *(நூல் : புஹாரி, முஸ்லிம்)*

" அவன் யாரை இணையாக்கினானோ அவனுக்கு அந்தப்பணி உரியதாகிவிட்டது. நான் அதை விட்டு விலகி விட்டேன் என்று அல்லாஹ் கூறினான் என்று நபி (ஸல்) கூறியதாக மற்றொரு அறிவிப்பு கூறுகிறது. *(நூல் : புஹாரி, முஸ்லிம்)*

காரணம் இரண்டு: ஒரு மனிதனின் இதயம் தான் அவன். அவனுடைய நன்மைக்கும் தீமைக்கும் அதுவே அடிப்படை.

நபி (ஸல்) கூறுகின்றார்கள் : அறிந்து கொள்க! உடலில் ஒரு சதைத்துண்டு உள்ளது. அது சீரானால் உடல் முழுவதும் சீராகிவிடும். அது கெட்டுப்போனால் உடல் முழுவதும் கெட்டுவிடும் அறிந்து கொள்க! அது தான் இதயம். *(நூல்: புஹாரி, முஸ்லிம்)*

அல்லாஹ் உள்ளங்களைத்தான் பார்க்கிறான். உள்ளத்தின் பணிகளே கவனிக்கப்படுகின்றன என்பதை பின்வரும் நபிமொழி விளக்குகின்றது.

அல்லாஹ் உங்களின் உடல்களையோ உங்களின் உருவங்களையோ பார்ப்பதில்லை எனினும் உங்கள் இதயங்களையே பார்க்கின்றான். இப்படிச் சொல்லிவிட்டு தன் நெஞ்சைச் சுட்டிக் காட்டினார்கள் நபி(ஸல்) அவர்கள் (நூல்: முஸ்லிம்)

இதன் பொருள் உருவங்களைப் பார்ப்பதேயில்லை என்பதல்ல எந்தப் பணிகளைப் ஒப்புக் கொள்வது என்பதை சொல்பவரின் உள்ளத்தில் தோன்றும் எண்ணங்களை வைத்து முடிவு செய்கிறான் என்பதே

இணைவைப்பு, நயவஞ்சகம் மனிதனை அழிக்கும் அக நோய்கள் அனைத்தையும் விட்டு தூரவிலகி தம் இதயத்தை தூய்மையாக வைத்திருப்பவரும் அல்லாஹ்வையே லட்சியமாகக் கொண்டவரும் தான் மறுமையில் வெற்றி பெற முடியும் சுவனத்தையும் பெற முடியும்.

இதோ இபுறாஹீம் (அலை) அவர்கள் கூறியதை அல்லாஹ் எடுத்துரைக்கிறான் பாருங்கள் "(இறைவா) மனிதர்கள் எழுப்பப்படும் மறுமை நாளில் என்னை இழிவுபடுத்தி விடாதே அது செல்வமோ ஆண்மக்களோ பயன் தராத நாள் அல்லாஹ்விடம் தூய இதயத்துடன் வந்தவரைத் தவிர (திருக்குர்ஆன் 26:87,88,89)

மேலும் அல்லாஹ் கூறுகிறான்: இறையச்சமுள்ளவர்களுக்கு சுவனம் தூரத்திலன்றி சமீபமாக்கப்படும். (இறைக்கட்டளைகளைப்) பேணியவர்களுக்கும் இறைவனையே நோக்கியிருப்போர் அனைவருக்கும் மறைவிலும் அருளாளன் அல்லாஹ்வை அஞ்சியோருக்கு அல்லாஹ்வையே நோக்கியவருக்கும் இது உரியது. (திருக்குர்ஆன் 50:31,32,33)

தூய இதயத்துடன் அல்லாஹ்விடம் வருபவருக்கே மறுமையின் இழிவிலிருந்து விடுதலை கிடைக்கும் தம் இதயத்தால் இறைவனை நோக்கியவருக்கே சுவனம் கிடைத்திடும் என்பதே அந்த வசனங்கள் சொல்லும் செய்தி.

ஆரம்ப சமுதாயம் முதல் இறுதி சமுதாயம் வரை அனைவருக்கும் அல்லாஹ் செய்த உபதேசம் "தக்வா என்ற இறையச்சத்துடன் நடந்து கொள்ளுங்கள்" என்பதே இம்மை மறுமை உழைப்புகள் நன்மைகள் மேன்மைகள் அனைத்துக்கும் அடிப்படை இதுவே தான்.

இப்படிப்பட்ட தக்வாவின் இருப்பிடம் எது? இதயம் தானே! தக்வா என்பது இதயத்தின் செயல்தானே!

"தக்வா இங்கே இருக்கிறது" என்று மூன்று தடவைக் கூறிய நபி (ஸல்) அவர்கள் மூன்று தடவை கூறும் போதும் தம் இதயத்தைச் சுட்டிக் காட்டினார்கள். இதற்குக் காரணம் 'தக்வா' வின் இருப்பிடம் எது என்பதை நம் அறிவிலும் சிந்தனையிலும் பதிய வைக்கத்தான்.

பின்வரும் இறைமறை வசனமும் தக்வாவின் இருப்பிடம் இதயமே என்பதைத் தெளிவு படுத்துகிறது.

"யார் அல்லாஹ்வின் சின்னங்களை கண்ணியப் படுத்துகிறாரோ நிச்சயமாக அது உள்ளத்திலுள்ள தக்வா வினால் ஏற்படுவதே (திருக்குர்ஆன் 22:32)

ஆண்மிகப் பயிற்சியின் அழைப்பாளர்களும் சூஃபியிஸவாதிகளும் ஆண்மிகப் பாட்டையில் நடை போடுபவர்களும் பெரிதெனப் போற்றும் நற்பண்புகள் உயர்குணங்கள் இறை நெருக்கத்தைப் பெற்றிட உதவும் பண்புகள் இவை அனைத்தைப் பெற்றிட உதவும் பண்புகள் இவை அனைத்தும் இதயத்துடன் தொடர்புடையவை தான்.

உலகப்பற்றின்மை, மறுமைப்பிடிப்பு, உளத்தூய்மை, அல்லாஹ் மற்றும் ரசூல் மீது அன்பு, அல்லாஹ்வையே சார்ந்திருத்தல் அவனுடைய தண்டனைக்கு அஞ்சுதல், அவன் அருளுக்கு நன்றி செலுத்துதல்,

சோதனையில் பொறுமை, அவனின் முடிவை திருப்தியுடன் ஏற்றுக் கொள்ளுதல், அல்லாஹ்வுடன் தொடர்பிலிருத்தல், சுயபரிசோதனை இவையெல்லாம் மார்க்கத்தின் உயிர் போன்ற அதி முக்கிய குணங்கள்.

இவற்றுள் ஒன்று ஒருவரிடம் இல்லாவிட்டால் கூட அவர் அழிந்தார் தொலைந்தார்.

இப்படிப்பட்ட மிக உயர்ந்தப் பண்புகளின் இருப்பிடம் இதயம் தான். எனவேதான் சொல்கிறேன். இஸ்லாத்தின் அளவு கோலின்படி பார்த்தால் உடலின் வெளி உறுப்புக்களால் செய்யப்படும் பணிகளை விட உள்ளத்தின் பணியே முதன்மையானது. தொடரும்.......

## வாசகர் கருத்துகள்

கஷ்மீரில் காணாமல் போனவர்களைப் பற்றிப் படிக்கும்போது இலங்கையில் நடக்கும் கொடூரங்களுக்காக கொடிப் பிடித்துப் போராடும் மக்கள், நம்முடைய இந்திய நாட்டில் நடைபெறும் இந்த கொடூரத்தைத் தட்டிக் கேட்காமல் இந்திய மக்கள் இருப்பதற்கான காரணம் என்னவாக இருக்கும் என்று பார்த்தால் `` கஷ்மீரில் பாதிக்கப் பட்டவர்கள் அனைவரும் இஸ்லாமிய மதத்தை சார்ந்தவர்களாக இருப்பதால் தான் என்று எண்ணுகிறேன்..மூடத்தனமான மதவாத கொள்கைகளையெல்லாம், தூக்கியெரிந்துவிட்டு, இந்தியா ஒரு மதச்சார்பற்ற நாடு என்பதை மட்டும் மனதில் கொண்டு இனி வரும் காலங்களில் கஷ்மீர் மக்களுக்காகவும் போராடத் துணிவோம். இந்தியாவில் உள்ள அனைவரும் இந்தியர்கள்.

மு. சீதா ராமன்.

கஷ்மீர் காணாமல் போனவர்களின் தகவல்கள் அதிர்ச்சி தகவல்கள். இதுவரை அறியப்படாத தகவல்கள். நாமெல்லாம் என்ன செய்துக் கொண்டிருக்கிறோம்? இனி என்ன செய்யப்போகிறோம்?

அல் அசிஃபுதீன்.

கைது செய்யும்போது காவல் துறை பின்பற்ற வேண்டிய விதிமுறைகள் என்ற தலைப்பு மிகவும் பயனுள்ளதாக இருந்தது. மற்றும் காஸா பற்றிய மாறுபட்டக் கட்டுரை அருமை. கஷ்மீர் காணாமல் போனவர்களைப் படித்தபோது இராணுவம் அரசால் நடக்கிறதா? அல்லது ஆர்.எஸ்.எஸ். ஆல் நடத்தப்படுகிறதா? என்ற கேள்வி எழுகிறது.

முஹம்மது ஹமாது.

தங்களின் வைகறை வெளிச்சம் இதழில் சிறுகதைகள் வெளியிடுங்களேன்.....பல முறை இதை உங்களிடம் வலியுறுத்தி வருகிறேன்...

ஃபிர்தவுஸ் ராஜகுமாரன்.

காஸா இஸ்ரேல் போரில் சவுதியின் துரோகத்தை வெளிக்கொணர்ந்து வைகறை வெளிச்சம் தன் வேலையை செய்துள்ளது.

முஹம்மது நாஸிர் சுலைமான்.

## முஸ்லிம்களின் வீழ்ச்சியால் உலகம் இழந்ததென்ன?

# இஸ்லாமிய நாகரிகத்தால் மனிதகுலம் பெற்ற பலன்கள்



✍ அபுல்ஹசன் அலீ நத்வி

✍ மொழிபெயர்ப்பு அஹ்மது ஜலாலுத்தீன் நத்வீ

ஹிஜ்ரி முதலாம் நூற்றாண்டில் இஸ்லாமிய நாகரிகம் தன் முழுபரிமாணத்தோடு வெளிப்பட்டது. இஸ்லாமிய அரசு தனக்கே உரிய அழகோடும் வனப்போடும் அமைந்தது.

இது மதங்கள் மற்றும் பண்பாடுகளின் வரலாற்றில் புதியதோர் அத்தியாயமானது. ஆரசியல் மற்றும் சமூகத் தளத்தில் புதியதோர் திருப்பமானது. இதை புதியதோர் வரவாக உலகம் எதிர் கொண்டது நாகரிகம் என்ற பெயரில் அதுவரை நடப்பில் இருந்தவை எல்லாம் காணாமல் போயின.

இதற்கு முன்னரெல்லாம் இஸ்லாமிய அழைப்பை இறைத்தூதர் எனப்படும் நபிமார்கள் இடையறாது செய்து வந்தனர். இம்மார்க்கத்தை ஏற்போருக்கு நல்லோர்கள் நல்வாழ்த்துக் கூறினர் இம்மார்க்கத்தை நிலை நாட்டிட இறைப்பாதையில் தூயவர்கள் அறப்போர் புரிந்தனர்.

எனினும் இஸ்லாத்தின் அடிப்படையில் அதன் கொள்கை கோட்பாடுகளின் வழியில் ஓர் அரசை அமைத்திடும் வாய்ப்பு அவர்களுக்கெல்லாம் அமையவில்லை

ஹிஜ்ரி முதலாம் நூற்றாண்டில் அமைந்தது போல் இஸ்லாமிய சட்டதிட்டங்களின் படி அதனுடைய நாகரிகத்தின் முழுவடிவமாக ஓர் அரசு இதற்கு முன் அமைந்திடவில்லை. முஹம்மது நபி (ஸல்) அவர்களுடைய கரத்தாலும் அவர்களுக்குப் பின்னர் வந்த நேர்வழிபெற்ற கலீஃபாக்களின் கரத்தாலும் இஸ்லாம் பெற்ற வெற்றி போல முன்னர் வெற்றி பெற்றிடவில்லை.

இஸ்லாம் பெற்ற இந்த தெள்ளத் தெளிவான வெற்றியால் ஜாஹிலிய்யா எனப்படும் அஞ்ஞானக் கோட்பாடு முன்னெப்போதும் சந்தித்திருக்காத பெரும் சோதனைக்குள்ளானது. இந்த சோதனையிலிருந்து தப்பித்துத் தன்னைக் காப்பாற்றிக் கொள்வது எப்படி என்று வழி தெரியாமல் தினறி நின்றது ஜாஹில்லிய்யா

இஸ்லாம் என்றால் ஏதோ ஒரு ஆன்மிகப் பிரச்சாரம் என்று தான் ஜாஹிலிய்யா ஆரம்பத்தில் நினைத்துக் கொண்டிருந்தது.

அது பிரச்சாரமாக மட்டும் இருக்கவில்லை. ஈருலக வெற்றியாக வளமான வாழ்வாக வலிமையாக வாழ்ந்து பார்த்துவிட வேண்டும் என்ற வெறியோடு ஒருவரோடொருவர்

போட்டி போட்டு உலக சுகத்தில் மூழ்கிடும் போக்கு அரிதினும் அரிது. ஆங்கு கபடமில்லை. வஞ்சகமில்லை.

இதுவே இஸ்லாமிய நாகரிகம் ஜாஹிலிய்யாவுக்கு மாற்றாக இது வந்தது. அந்த ஜாஹிலிய்யாவின் நாகரிகம் கூச்சல் குழப்பங்களுடையது.

தடுமாற்றங்களுடையது தன்னைத்தானே அழித்துக் கொள்ளக் கூடியது. ஆடிக்கொண்டிருக்கும் தூண்கள் மீதிருக்கும் வலிமையற்ற கட்டடம் போன்றது.

.

ஆங்கு சிறியவனை பெரியவன் அநீதிக்கு உள்ளாக்குவான் பலஹீனமானவனை பலமுள்ளவன் வீழ்த்துவான் காமக்களியாட்டங்கள் வீண் விளையாட்டுக்களில் போட்டி போட்டுக் கொண்டு ஈடுபடுவார்கள்.

இஸ்லாமியவாதிகள் தம் கொள்கையை நிலைநாட்டிட இப்புதிய மார்க்கத்தைப் பரப்பிட எந்த எதிர்ப்புக்கும் சித்ரவதைக்கும் அஞ்சாமல் பணியாற்றினர்.

“உங்களை பிற மக்கள் (எந்நேரத்திலும்) தாக்கி விடக்கூடும் என்று நீங்கள் அஞ்சிக் கொண்டிருந்தீர்கள் அவன் (அல்லாஹ்) உங்களை அரவணைத்தான் தன் உதவியின் மூலம் உங்களுக்கு வலிமை தந்தான். தூயவற்றை உங்களுக்கு உணவாக்கினான்” (8:26) என்று அல்லாஹ் கூறுகின்றானே அப்படித் தான் இருந்தது அந்தக் காலம்.

இஸ்லாமிய வாதிகள் அன்று நன்மையை ஏவி தீமையைத்தடுத்தார்கள் அவர்கள் ஏவியதும் விலக்கியதும் அந்த உயர்ந்த தத்துவத்தின் அடிப்படையில் தான் அமைந்திருந்தது.

இதனால் மனிதர்களின் சுபாவங்ளும் சிந்தனைகளும் மாறின. இஸ்லாத்தின் வருகையால் அவர்கள் அறிந்தும் அறியாமலும் பலன்களைப் பெற்றுக் கொண்டிருந்தார்கள்.

வசந்த காலத்தின் வருகையால் அதுவரை வரண்டு கிடந்த பூமியின் சுபாவம் மாறுவது போல மாறிவிட்டன மனித சுபாவங்கள்.

ஜாஹிலிய்யாவின் அரசு இதற்கு நேரெதிராகவே இருந்தது அநீதியும் அக்கிரமமும் எங்கும் நீக்கமற நிறைந்தது அதன் ஆட்சியாளர்கள் மோசடிக்கும் அநியாயத்துக்கும் முன்னால் தாழ்பணிந்து கிடந்தனர்.

குடிமக்களின் சொத்துக்களை சூறையாடவும் மானங்களைப் பங்கப்படுத்தவும் குருதிகளை சிந்தவும் பெரும் முனைப்புக் காட்டினார்கள் ஆட்சியாளர்கள் குடிமக்களோ ஒழுங்கீனத்தின் உதாரணப் புருஷர்களாகி நின்றார்கள்.

அதிகாரிகளும் மன்னர்களும் தீயவர்களாகவே இருந்தனர் மன்னர் வீட்டின் நாய்களும் வளர்ப்பு மிருகங்களும் வயிறு புடைக்க உண்டு தின்று கொழுத்தன குடிமக்களோ பசியில் நெளிந்து கொண்டிருந்தார்கள்.

ஆட்சியாளர்களின் மாட மாளிகைகள் கூட ஆடை அணிந்திருந்தன. குடிமக்களோ ஆடையின்றி அம்மணமாக்கப் பட்டிருந்தனர்.

இந்த சூழ்நிலையில் தான் இஸ்லாம் வந்தது. அதன் வழியில் ஓர் அரசு அமைந்தது இங்கே இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ள யாருக்கும் எந்தத் தடையுமில்லை. வாழ்க்கை நெறியாக அதை ஏற்று நடந்திட எந்தப் பிரச்சனையும் சிரமமும் இல்லை.

கோட்பாட்டில் ஒரு சமூக நலனும் இல்லை ஒரு ஏற்றமும் இல்லை என்பதை அவர்கள் கண்ணாறக் கண்டனர்.

இஸ்லாத்தில் நுழைந்ததால் தனக்கு இழப்பு ஏதுமில்லை தன்னை விட்டு எதுவும் நழுவிப் போய்விடவில்லை என்பதை உணர்ந்தனர் அவர்கள் அது மட்டுமல்ல நிறையப் பெற்றுக் கொண்டனர்.

ஆம்! தடுமாற்றமில்லாத உறுதி கிடைத்தது. ஈமானின் (இறைநம்பிக்கையின்) சுவை கிடைத்தது. இஸ்லாம் தந்த கண்ணியம் கிடைத்தது. கண்ணியம் தரும் வலிமையான அரசு கிடைத்தது. உயிருக்கு உயிரான ஆத்மார்த்தமான நண்பர்கள் கிடைத்தனர். மனதுக்கு அமைதி கிடைத்தது. மரணத்துக்குப் பின் ஒரு பெருவாழ்வு உண்டு என்ற திடமான நம்பிக்கை கிடைத்தது.

இப்படி இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதால் எதையும் இழக்கவில்லை எல்லாம் கிடைத்தது அதனால் அவர்கள் 'ஜாஹிலிய்யாவை நிலைநாட்டப் போராடிய களங்களை விட்டுவிலகி இஸ்லாமியக் களம் நோக்கி விரும்பித் திரும்பினர்.இதனால் ஜாஹிலிய்யா கோலோச்சிக் கொண்டிருந்த நிலப்பரப்பின் அளவு சுருங்கிக் கொண்டே போனது. இஸ்லாத்தின் கொள்கை முழக்கம் உயர்ந்து கொண்டேயிருந்தது. அதன் நிழல் விரிந்து பரந்து எங்கும் வியாபித்தது. இறுதியில் குழப்பம் அகன்றது. தீன் மார்க்கம் வழிபாடு அல்லாஹ்வுக்கே என்றானது.

இந்தப் புரட்சி மகத்தான பெரும் தாக்கங்களை ஏற்படுத்தியது ஜாஹிலிய்யா ஆட்சிக் காலத்தில் இஸ்லாத்தை ஏற்கவும் அதனடிப்படையில் வாழ்ந்திடவும் சொல்லிடவொண்ணா சிரமங்களைத் தாங்கிட வேண்டியிருந்த நிலை மாறியது இப்போது இஸ்லாத்தின் படி வாழ்வது எளிதானது. இலகுவாகி விட்டது. இதுவே அமைதி தரும் வாழ்வானது.

ஜாஹிலிய்யாவின் வட்டத்தில் மக்கள் சிக்கியிருந்த போது அல்லாஹ்வை வணங்கிடவே பெரும் சிரமங்களை சந்திக்க வேண்டியதிருந்த அவலம் முடிவுக்கு வந்தது இப்போது அல்லாஹ்வுக்கு மாறுசெய்திடும் வழிகள் அடைக்கப்பட்டுவிட்டதால் குற்றமிழைப்பதற்குத்தான் சிரமப்பட வேண்டும் என்றானது. நேற்றுவரை நரகத்தை நோக்கி இருப்பவை வெளிப்படையாகவும் அரசின் உதவியோடும் அரங்கேறிய அசிங்கம் இருந்தது. இன்று அது அடியோடு அகன்று அழிந்தது.

நேற்றுவரை அல்லாஹ்வுக்கு மாறு செய்திடவும் அவனது கோபத்துக்கு ஆளாகவுமான வாய்ப்புக்கள் ஏராளம் நிறைந்திருந்தன. இன்றோ அது அரிதினும் அரிதாகித் தொலைந்தே போனது.

நேற்றுவரை அல்லாஹ்வின் பூமியில் அல்லாஹ்வை நோக்கி மக்களை அழைப்பது ஒளிந்தும் மறைந்தும் செய்திட வேண்டிய பெரும் குற்றம் என்றிருந்த நிலைமாறி இன்று அது பகிரங்கமாகவும் வெளிப்படையாகவும் முழுசுதந்திரத்தோடும் பாதுகாப்பாகவும் எள் முனையளவு கூட எதிர்பின்றியும் நடை பெற ஆரம்பித்தது.

இறுகிக்கிடந்த முரட்டு இதயங்கள் நெகிழ்ந்து இளகின இஸ்லாத்தின் கோட்பாடுகள் அவர்களுடைய இதயங்களின் அடியாளம்வரை ஊடுருவிப் பாய்ந்தன அவர்களுடன் இரண்டறக் கலந்தன. ஒவ்வொரு பொருளின் மதிப்பும் அவர்களின் கண்களுக்கு அப்போது தான் தெரிந்தது பழைய மதிப்பீடுகளும்

பார்வைகளும் மாறின புதிய மதிப்பீடுகள் வழியாக அவர்கள் உலகைப் பார்த்தார்கள். ஜாஹிலிய்யா என்ற அஞ்ஞானம் அவர்களின் வாழ்விலிருந்து முற்றாக அகன்றது அதைக் கடைப்பிடிப்பது மதியீனம் அறிவீனம் எனக்கருதினர் அவர்கள்.

இஸ்லாமே காலத்துக்கேற்ற முன்னேறிய நாகரிகம் இஸ்லாத்தில் இணைந்து அதன் அடையாளங்களோடு வாழ்வதே புத்திசாலித்தனம் அதுவே காலத்தின் கட்டாயம் என்றானது.

மனிதர்கள் மாத்திரமல்ல அவர்கள் வாழும் பூமியும் மெல்ல மெல்ல இஸ்லாத்தை நோக்கி நகர்ந்தது.

பூமிப்பந்தின் மேல் பரப்பில் வசிப்பவர்களுக்குத் தெரியாது அவர்களையும் சுமந்து கொண்டே இந்த பூமி சூரியனைச் சுற்றி வருகின்றது என்பது.

இதுபோலவே பூமியெங்கும் மக்கள் அனைவரும் அவர்கள் அறியாமலே இஸ்லாத்தின் வழியாக வந்த பலன்களை அனுபவித்தார்கள். அது அவர்களுக்கே தெரியவில்லை எனினும் அவர்களின் தத்துவங்களிலும் இலக்கியங்களிலும், நாகரிகங்களிலும் ஆண்மிகத்திலும், இஸ்லாத்தின் தாக்கம் இருந்தது. அது வெளிப்பட்டது. அவர்களின் அந்தரங்கத்திலும் ரகசியங்களிலும் இஸ்லாமிய நாகரிகத்தின் பிரதிபலிப்பால் (இஸ்லாமி அரசு இல்லாத பூமியில் கூட) அவர்கள் மத்தியில் சீர்திருத்த இயக்கங்கள் தோன்றின.

முஸ்லிம்கள் வீழ்ச்சியடைந்த பின்னரும் கூட இஸ்லாத்தின் வருகையால் இதர சமூகத்தினர் பெற்ற பயன்கள் தொடர்ந்தன. தொடரும்.....

தமிழ்வடிவம்:
✍ மௌலவி இல்யாஸ் ரியாஜி

## இப்தார் நிகழ்ச்சி

*15.07.2014* அன்று தமிழ் மாநில தேசிய லீக் கட்சியின் சார்பில் நோன்பு துறக்கும் நிகழ்ச்சி சென்னை எழும்பூரிலுள்ள சிராஜ் மஹாலில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு ஜனாப் எம்.கச்.அப்துல்சலாம் மாநில அவைத் தலைவர் தமிழ் மாநில தேசிய லீக் தலைமை தாங்கினார்கள்.

நிகழ்ச்சி வருகை தந்தவர்களை தமிழ் மாநில தேசிய லீக்இன் தாளாளரும் தலைவருமான திருப்பூர் அல்தாப் அவர்கள் வரவேற்றார்கள்.

நிகழ்ச்சியில் தாருல் இஸ்லாம் ஃபவுன்டேஷன் டிரஸ்ட்இன் பொருளாளர் பேராசிரியர் இல்யாஸ் ரியாஜி அவர்கள் சிறப்புரை ஆற்றினார்கள்.

நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக தி.மு.க பொருளாளர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டார்கள்.

அவருக்கு இலக்கியச்சுடர் மு.கலாம் முஹம்மத் அவர்கள் எழுதிய "பாலஸ்தீன முஸ்லிம்கள் அகதிகளான வரலாறு" என்ற வரலாற்று நூல் அன்பளிப்பாக வழங்கப்பெற்றது. நிகழ்சிகளை தலைமைக் கழக செயலாளர் ஜி.சம்சுதின் நெறிப்படுத்தினார்




# மும்பை 26/11 வினிதா காம்தி தொடுக்கும் போர்

✍ H.முஹம்மத் இக்பால்

மும்பை 26/11 தாக்குதலின் போது பதியப்பட்ட தொலைபேசி கோப்புகளை திருத்தம் செய்ததைபற்றி விசாரிக்க கமிஷன் அமைக்க வேண்டும் என்று மாநில முதன்மைதகவல் ஆணையர் மஹாராஷ்டிரா அரசை கேட்டு கொண்டுள்ளார்.

மும்பை 26/11 தாக்குதளின் போது தொலைபேசி உரையாடல்களை மும்பை காவல் துறை பதிவுசெய்தது. இந்த தாக்குதலில் வீரமகன் கர்கரேயுடன் அசோக் காம்தி மற்றும் சலாஸ்கர் ஆகிய இருவரும் கொல்லப்பட்டனர். இதில் அசோக் காம்தியின் மனைவி வினிதா காம்தி தன்னுடைய கணவன் சாவில் சந்தேகமடைந்து அவரே நேரடியாக விசாரணையில் இறங்கினார். இதில் அவருக்கு கிடைத்த தகவலை வைத்து To The last Bullet என்ற புத்தகத்தை எழுதினார்.

வினிதா காம்தி மார்ச் 4, 2009 அன்று தகவல் அறியும் உரிமை சட்டம் (2005) கீழ் நவம்பர் 26,27 2008ல் இரண்டுநாள் பதிவு செய்யப்பட்ட தொலைபேசியின் விவரத்தை கேட்டிருந்தார் தகவல் அறியும் உரிமைசட்டம் கீழ் தொலைபேசி உரையாடல்கள் பதிவு செய்யப்பட்ட ஆடியோ மற்றும் எழுத்து வடிவில் அதன் முழுவிவரத்தை அளிக்குமாறு கேட்டிருந்தார்.

26.11.2008 காலை 9 மணி முதல் 27.11.2008 மதியம் 12 மணிவரை நடந்த உரையாடல் விவரம் தனக்கு தருமாறு கேட்டிருந்தார்.

**அவர் கேட்ட கேள்விகள் வருமாறு:**

. 1. முக்கிய கட்டுப்பாட்டு அறையில் பதிவு செய்யப்பட்ட தொலைபேசி உரையாடல்கள் அனைத்து ஆடியோ மற்றும் எழுத்து வடிவம் வேண்டும்.

2. முக்கிய கட்டுபாட்டு அறை கிழக்கு கட்டுபாட்டு அறை மற்றும் தெற்கு கட்டுபாட்டு அறை இந்த மூன்று கட்டுபாட்டு அறைகளுக்கு அதன் எழுத்து வடிவம் விவரம் வேண்டும்.

3. பிதானி போலிஸ் ஜீப்பில் இருந்து கைப்பற்றப்பட்ட அசோக் காம்தி செல்போன் மோட்டோரோலா எரிக்சன் இருந்து பேசப்பட்ட தொலைபேசியின் அனைத்து விவரத்தையும் ஆடியோ மற்றும் எழுத்துவடிவம் வேண்டும்.

காவல் முதன்மை கட்டுபாட்டுஅறை தெற்கு கிழக்கு பகுதியில் ஜெயவர்த்பட்டில் இடையே நடந்த உரையாடல்களின் ஆடியோ மற்றும் அதன் எழுத்து விவரம் தேவை என மேற்கண்ட கேள்வியை RTI யின் கீழ் கேட்டிருந்தார்

அதே நேரத்தில் காவல்துறை எண்100 க்கு வந்த தொலைப்பேசியின் விபரம் முழுவதும் வேண்டும் என்றும் கேட்டிருந்தார்.

இந்த இரண்டாவது கேள்விக்கு பொது தகவல் அதிகாரி தன்னிடம் உள்ள விவரத்தை அளித்தார் இந்த விவரமும் முதலில் கேட்ட கேள்வியின் விவரம் முன்னுக்கு பின் முரணாக இருந்தது. இரண்டாவது கேட்ட விபரத்தில் தெற்கு காவல் கட்டுபாட்டு அறையில் பதிவு செய்ய பட்ட அலைபேசி, நேரம், நொடி முதலில் கேட்ட விவரத்தின் நேரம் நொடியும் வெவ்வேறாக இருந்தது. ரங்கா பவனில் கொல்லப்பட்ட கர்கரே சலாஸ்கர் அசோக் காம்தி இடத்தில் நடைபெற்ற அலைபேசி உரையாடல்கள் விவரம் பொய்யாக இருந்தது.

அஜ்மல் கசாப்பின் குற்றப்பத்திரிக்கையில் குறிப்பிடப்பட்ட தொலைபேசி விவரங்கள் இன்னும் மாசுபட்டு இருந்தது.

மும்பை தெற்கு கட்டுப்பாட்டு அறை அதிகாரிகள் இரண்டு முறை தவறான தகவல் கொடுத்திருப்பது சந்தேகத்தை அதிகரித்துள்ளது.

மார்ச் 3.2009 ல் வினிதா காம்தி முதன் முதலில் இந்த விவரங்களை தனக்கு தரவேண்டும் என கேட்டபோது இதனை மும்பை காவல் தகவல் அதிகாரி தர மறுத்து விடவே இவர் முதல் மேல்முறையீடு செய்த பொது அவர் ஆவணங்களை வினிதா காம்தி பார்க்கவும் பதிவு செய்யப்பட்ட ஆடியோவை கேட்கவும் நேரில் வரவேண்டும் என்றும் ஆவணங்களின் ஆடியோ பதிவு தரமுடியாது எனவும் பதிலளித்தார்

இதன் பிறகு வனிதா காம்தி மாநில முதன்மை தகவல் ஆணையர் கதவை தட்டினார். இறுதியில் மாநில முதன்மை தகவல் ஆணையர் ரத்னாகர் கேக்வாட் இந்த தொலைபேசியில் முரண்பாடுகள் இருப்பதை அறிந்து அவர் மாநில தலைமை செயலருக்கு இது சம்பந்தமாக ஒரு ஓய்வு பெற்ற நீதிபதி மூலம் ஒரு விசாரணை கமிஷன் அமைக்க வேண்டும் என்று 9 ஜூலை 2014 அன்று உத்தரவிட்டுள்ளார். இந்த உத்தரவின் மூலம் வினிதா காம்தி பெருத்த ஆறுதல் அடைந்துள்ளார் இன்னும் மாநில அரசு என்ன செய்ய போகிறது என்பதை நாம் பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

வினிதா காம்தி ஆர்.டி.ஐ மூலம் கேட்டிருந்த கேள்விகளுக்கு முதன்மை தகவல் தொடர் அதிகாரி அளித்த பதிலில் வினிதா காம்தி துணை கமிஷனர் அலுவலகத்திற்கு வந்து பதிவேடுகள் பார்த்து மற்றும் பதியப்பட்ட அலைபேசியின் பதிவுகளை கேட்டும் செல்லலாம் இன்னும் இதன் நகல்கள் தரமுடியாது காம்தி முதல் முறையீடு மார்ச் 3.2009 அளித்த தகவல் சரிபார்த்து தரப்பட்ட தகவல் இல்லை இது திருத்தப்பட்ட தகவல் ஆகும்.

வினிதா காம்தி மாநில தகவல் ஆணைய மேல் முறையீட்டில் கூறுவது தான் கேட்ட தகவல்களை மும்பை துணை கமிஷனர் (குற்றம்) 26/11 சம்பவத்தின் போது காவல் கட்டு பாட்டு அறையின் பொறுப்பில் இருந்தவர் தகவல் தர மறுத்த காரணம் கர்கரே மற்றும் இரண்டு அதிகாரிகள் கொல்லப்பட்ட இடத்தின் விவரம் உரையாடல் மூலம் எங்கு இறந்தார்கள் என்பதை கட்டுப்பாட்டு அறையில் உள்ளவர்களுக்கு தெரியும்

இந்த மூவரும் தனக்கு உதவி தேவை என கட்டுப்பாட்டு அறைக்கு தொடர்பு கொண்டு கேட்டனர். ஆனால் கட்டுப்பாட்டு அறையின் அதிகாரியான மரியா இந்த மூவருக்கு தேவையான எந்த உதவியையும் செய்யாமல் வேலையில் அலட்சியமாக இருந்து குற்ற தடுப்பை மேற்கொள்ளாமல் இருந்தார். அதனால் இவரின் அலட்சியத்தால் மரணம் அடைந்துள்ளனர். இதன் காரணமாகவே மும்பை காவல்துறை உண்மையான தகவலை தரவில்லை.

முதல் மேல்முறையீட்டு அதிகாரி மே 5.2009 அன்று வினிதா காம்தி மேல்முறையீட்டுக்கு பதில் தந்தார். அதில் அவர் வினிதா காம்தே அவர்கள் தகவல் ஆவணங்களையும் பதியப்பட்ட ஆடியோவைவும் நேரில் வந்து பார்த்தும் கேட்டுக்கொள்ளலாம் என்று. அவருக்கு துணை கமிஷனர் அலுவலகத்தில் அனுமதி மறுக்கப்பட்டது. கவிதா காம்தி அவருக்கு அனுமதி மறுக்கப்பட்டது தொடர்பாக துணை கமிஷனர் (சட்டம் ஒழுங்கு) அவருக்கு கடிதம் எழுதினார் அதில் தான் 20 ஜூன் 2009 காலை 11 மணி இருந்து 5 மணி வரை இந்த ஆவணங்களை சரிபார்க்க தமக்கு அனுமதி வேண்டும் என்று 9 ஜூன் 2009 கடிதம் எழுகிறார் வினிதாவும் அவரது தோழியும் 29 மற்றும் 30 ஆகஸ்ட் 2009 அன்று இந்த ஆவணங்கள் சரிபார்த்தனர். இதில் ஆவணங்கள் மற்றும் ஆடியோ பதிவில் பல மாற்றங்கள் தில்லு முல்லு செய்யபப்பட்டதை தெரிந்துக்கொண்டனர்

வினிதா காம்தி இரண்டாவது முறையீடில் தனக்கு தரப்பட்ட இரண்டு ஆவணங்களில் வித்தியாசம் இருப்பதாக கூறி தனக்கு மும்பை காவல் பொதுதகவல் அதிகாரி தகவல் அறியும் சட்டம் 2005 கீழ் தவறான தகவல் தந்துள்ளார். எனவே நான் உங்களிடத்தில் உண்மையான தகவல் தரவும் தவறு செய்த அதிகாரி மீது நடவடிக்கை எடுக்க கூறி மேல் முறையீடு செய்தேன்.

அஜ்மல் கசாப் குற்றப் பத்திரிகையில் தெற்கு மண்டல உரையாடல்களின் பதிவு செய்யப்பட்டுள்ள தகவலில் தவறான ஆவணக் குறிப்புகள் தரப்பட்டதை அறிந்தேன். இந்த தகவல் எனக்கு தரப்பட்ட இரண்டு தகவல்களில் இருந்து வேறுபட்டிருந்தது. இது எனக்கு தரப்பட்ட தகவல்களுக்கு பிறகு குற்றப்பத்திரிக்கையில் சேர்க்கப்பட்டதை பின்னர் நான் அறிந்து அதிர்ச்சி அடைந்தேன். ஏனெனில் இந்த தகவல்களில் உள்ள ஆடியோ பதிவு நேரம் ஆவணகுறிப்பு நேரம் 26/11 வழக்கு விசாரணை நடந்ததால் நான் இந்த அஜ்மல் கசாபின் தகவல்களின் விவரத்தை தங்களிடம் புகாராக தெரிவிக்க வில்லை.

எனக்கு பதில் அளித்த மும்பை காவல் துறையினர் தாங்கள் அளித்த புகார் சரியானது என்று குறிப்பிட்டு இருந்தனர். மூன்று வெவ்வேறான தகவல்கள் எப்படி சரியாக இருக்கும்.




எனக்கு தவறான தகவல் அளித்த அதிகாரிகள் மீது சட்ட ரீதியான நடவடிக்கை எடுத்து இதில் மேல்விசாரணைக்கு நீதி உத்தரவிட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாநில முதன்மை தகவல் ஆணையர் ஏப்ரல் 18. 2013 அன்று ஓர் உத்தரவு போட்டிருந்தார் அதில் துணை கமிஷனர் (சட்டம் ஒழுங்கு) ஆவணம் திருத்தம் செய்யப்பட்டது பற்றி விசாரணை நடத்தி உண்மை என்ன என்பதை மேலதிகாரிகளுக்கும் மற்றும் வினிதா காம்திக்கும் தாங்கள் ஓர் அறிக்கை மே20.2013குள் அளிக்கும் படி கூறியிருக்கிறது.இதன் பிறகு இணை கமிஷனர் விசாரணைக்கு நேரில் ஆஜராகும் படி விதி 18 கீழ் உத்தரவு இடப்பட்டார். மாநில முதன்மை காவல் ஆணையத்துக்கு ஓர் அறிக்கை அளிக்ககப்பட்டது. அதில் தந்த முத்திரையில் கையொப்பம் இட்டு தரவில்லை என்று தெரிவித்தனர்.

வினிதா இதனை பற்றி கூறுகையில் எனக்கு தரப்பட்ட ஆவணத்தில் கையெழுத்து வெவ்வேறாகவும் ஆடியோ பதிவின் நேரம் மாறுபட்டும் இருந்தன. அதிலும் 6 நிமிடம் ஓர் ஆவணத்தில் நேரம் மாற்றப்பட்டு இருந்தது என்றார்.

நவம்பர் 19. 2013 அன்று மாநில முதன்மை தகவல் ஆணையர் மாநில இணை செயலாளருக்கு ஓர் உத்தரவு பிறப்பித்தார். அதில் வினிதா காம்தி விவகாரத்தின் அறிக்கையை டிசம்பர் 1. 2013 குள் தனக்கு அனுப்புமாறு கேட்டுக்கொண்டார்.

இந்நிலையில் மாநில முதன்மை தகவல் ஆணையம் ஓர் உத்தரவு பிறப்பித்தது. அதில் இணை போலீஸ் கமிஷனர் அமிதாப் ரன்ஜன் ராஜேஷ் மரியா சஞ்சை பர்ஜித் மற்றும் முகனோ ஆகியோர் நேரில் 21 மார்ச் 2014 ஆஜராகும்படி சொல்லிருந்தார். இதில் காவல் துறை அதிகாரிகளுக்கு பதிலாக இரண்டு வழக்கரிஞர்கள் நேரில் ஆஜராகினர்.




இறுதியில் மேற்கண்ட நிகழ்வுக்கு பிறகு மாநில முதன்மை தகவல் ஆணையர் ரத்னாகர் கேக்வாட் மாநில தலைமை செயலாளருக்கு இதுபற்றி ஓய்வு பெற்ற நீதிபதி மூலம் விசாரணை மேற்கொள்ள வேண்டும் என உத்தரவு பிறப்பித்தார்.

நன்றி இந்தியன் எக்ஸ்பிரஸ்




துத்துக்குடி - திருச்செந்தூர் நெடுஞ்சாலையில் அமைந்துள்ள சிறிய அழகிய ஊர் காயல்பட்டிணம். பண்டைய காலம் தொட்டு இன்றளவும் இந்திய இலங்கை வர்த்தகத்திற்க்கு பெயர் பெற்ற ஊரும் ஆகும்

## சமூக ஒற்றுமைக்கு பெயர் பெற்ற காயல்

கி.பி 1988 ல் நகராட்சி தலைவர் பதவிக்கு போட்டியிட்ட பொன்னையா நாடார் என்பவரை அங்கு 80% வாழக்கூடிய காயல்பட்டினத்து முஸ்லிம்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து தேர்ந்தெடுத்துள்ளனர்.

அன்று முதல் இன்றுவரை சமூக ஒற்றுமைக்கு பெயர் பெற்ற நகரமாகவும் அதை இன்றளவும் நடைமுறைப் படுத்தி அங்குள்ள மக்கள் வாழ்ந்து வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## மர்மக் கடிதம் ஏற்படுத்திய பரபரப்பு:

ஆகஸ்டு திங்கள் மூன்றாம் வாரத்தில் காயல்பட்டிணத்தில் வாழும் பி.ஜே.பி நகர நிர்வாகி பண்டாரம் மற்றும் சிலருக்கு ஒரு மர்மக்கடிதம் தபாலில் வந்தது. அந்தக் கடிதம் பி.ஜே.பி நிர்வாகி பண்டாரம் நடத்திவரும் சைக்கிள் கடைக்கு தபாலில் வந்த போது மிகச் சரியாக அந்த நேரத்தில் அவருடைய சைக்கிள் கடை சாத்தியிருந்தது. அந்த கடிதத்தை வாங்கி பண்டாரம் (பி.ஜே.பி நிர்வாகி கையில் ஒப்படைத்தவர் உளவுத்துறை (திருச்செந்தூர்) காவலர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இதனை பி.ஜே.பி நிர்வாகி பண்டாரம் நேர்காணலின் போது நம்மிடம் நேரடியாகவே கூறினார் அப்படி என்றால் அந்தக் கடிதத்தை அனுப்பியவர் தான் யார்? என்பது வாசகர்களுக்கே புரிந்திருக்கும் எங்கே அந்தக் கடிதம் பி.ஜே.பி நிர்வாகி பண்டாரம் கையில் கிடைக்காமல் போய்விடுமோ? என்று அவசரப்பட்டு உளவுத்துறை காவலரே போஸ்ட்மேனாக மாறியது அவரை மட்டுமல்லாது அவரது துறையையும் காட்டிக் கொடுத்து விட்டது. இச்சம்பவம் நிலுவையில் இருக்க இன்னொரு நிகழ்வு கொழுந்து விட்டு எரியத் துவங்கியது. அது கோவிலுக்கு தீவைப்பு என்ற பெயரில்!

## கோவிலுக்கு தீவைப்பு:

23.08.2014 அன்று அதிகாலை 8 மணியளவில் தென்பாகம் கிராமம் சர்வே எண்494 ல் இருக்கும் வாவு

அவர்களுடைய வீட்டின் மதில் சுவர் அருகே இருந்த மாவு இசக்கியம்மன் கோயில் கூரை திடீரென தீப்பிடித்து எரிந்தது.

இச்சம்பவம் நடந்து முடிந்த சுமார் 3 மணிநேரத்திற்கு உள்ளாக அதாவது காலை 6 மணியளவில் அருகில் உள்ள ஓனக்கரை கிராமத்தைச் சேர்ந்த மக்கள் சுமார் 40 பேர் இந்து முன்னனி மாநில துணைத் தலைவர் ஜெயக்குமார் தலைமையில் ஒன்று சேர்ந்து மணல் ஜல்லி ஹாலோபிளாக் கற்களை இறக்கி உடனடியாக கட்டடத் துவங்கிவிட்டார்.

காலை 11:30 மணிக்குள்ளாக கிட்டதட்ட முக்கால் வாசி கட்டடம் கட்டி முடிக்கப்படட்டது. இந்த விஷயம் முஸ்லீம்களின் மத்தியில் கொஞ்சம் கொஞ்சமாக தெரிய வர முஸ்லீம்கள் ஒன்று திரண்டு ஒரு முஸ்லீம் லீக் கொடியுடன் சம்பந்தபட்ட இடத்திற்கு சென்று அதை நட்டு கிட்டதட்ட 200க்கு மேற்பட்ட முஸ்லீம்கள் அந்த இடத்தில் தொழுகை நடத்துகின்றனர் இது அந்த பகுதியில் பதற்றத்தை ஏற்படுத்தியது. இதைத் தெரிந்து கொண்ட பண்டாரம் மற்றும் காவ்துறை உயர் அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு விரைந்து சட்ட ஒழுங்கை சரிசெய்து 24.08.2014 அன்று இரண்டு சமூகத்தையும் சுமார் காலை 11:30 மணியளவில் அமைதிப் பேச்சு வார்த்தைக்கு அழைத்தனர்.

இதற்கிடையில் அந்த கோயில் மற்றும் வா.வு செய்யத் அப்துர் ரஹ்மான் அவர்கள் வீட்டின் மதில் சுவர் ஆகிய இரண்டையும் நெடுஞ்சாலைத்துறை கோட்ட உதவியாளர் காவல் துறை உதவியுடன் JCB யின் துனை கொண்டு அதை இடித்து தரைமட்டமாக்கினர். இதனை தொடர்ந்து நடந்த அமைதிக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின் படி இடிக்கப்பட்ட கோயில் மற்றும் வா.உ செய்யத் அப்துர் ரஹ்மான் வீட்டு மதில் சுவர் இரண்டுமே நெடுஞ்சாலைத் துறைக்கு சொந்தமான நிலத்தில் அமைந்துள்ளது என்று இரு தரப்பிலும் ஒப்புக் கொள்ளப்பட்டு மாவட்ட கண்காணிப்பாளர் மா.துரை கோட்டாட்சியர் மு.தமிழ்ராஜன் வட்டாட்சியர் நல்லசிவன் நெடுஞ்சாலைத்துறை கோட்ட உதவியாளர் ஆகியோர் முன்னிலையில் மையெழுத்து பெற்று பிரச்சினையை சுமூகமாக முடித்துக் கொண்டனர். இதனால் நடக்க இருந்த மாபெரும் கலவரம் தடுக்கப்பட்டது.

மேற்கண்ட நிகழ்வில் உண்மைகளை அரிவதற்காக வைகறை குழுவை காயல் பட்டினத்திற்கு அனுப்பி வைத்தோம். அதில் அவர்கள் திரட்டிய தகவல்கள் நம்மை அதிர்ச்சியில் ஆழ்த்தியது.

1. மாவு இசக்கியம்மன் கோயிலில் நடந்த தீ வைப்பு சம்பவத்தில் இதுவரை ஒரு புகார் மனுகூட காவல் நிலையத்தில் யாராலும் கொடுக்கப்படவில்லை. ஆனால் இந்து முன்னனி நிர்வாகிகளால் மறுநாள் அதிகாலை 6 மணிக்கே கட்டிடத்திற்கு தேவையான அனைத்து கட்டுமானப்

பொருட்களும் வந்து இறங்கியது இது நமக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியது. எனவே இது முன்கூட்டியே திட்டமிடப்பட்ட செயலே அன்றி வேறில்லை.

*2.* அந்த மாவு இசக்கியம்மன் கோவில் என்பது ஓடக்கரை கிராமத்தை சேர்ந்த காளிமுத்து என்பவருடைய குடும்ப குல தெய்வமாக வணங்கி வந்திருக்கின்றனர். நிலை இதுவாக இருக்க சம்பந்தமே இல்லாமல் இந்து முன்னனி மாநில தலைவர் ஜெயக்குமார் இதில் தலையிட்டு இத்தனை காலமாக நிலவி வந்த சுமூக உறவுகளை சீர்குலைத்திட முனைந்த செயல் என்பது இதன் மூலம் தெளிவாகிறது.

*3.* இந்த கோயிலில் நடந்த தீ வைப்பு சம்பவத்திற்கு பிண்புலமாக இருப்பது சமூக விரோதிகள் மட்டுமில்லை மின்சார வாரியத்தின் அதிகாகளும் இதன் பின்னணியில் உள்ளனர் என்று தெரிய வருகிறது.

எவ்வாறு என்றால் வெருமனே கூரையுடன் கூடிய கோவிலுக்கு மின் இணைப்பு தரமுடியாது என்றும் கட்டிடமாக இருந்தால் மட்டுமே மின் இணைப்பு தர முடியும் என்ற அவர்களுடைய தூண்டுதலும் ஒரு காரணமாகும். இதனை மையப்படுத்தியே சமூக விரோதிகளால் அவர்கள் வணங்கும் கோவிலுக்கு அவர்களே தீ வைத்து விட்டனர்.

*4.* ஒரு மோட்டார் சைக்கிளில் *2* பேர் காலை *08:00* மணியளவில் *(23.08.2014)* வந்து நின்று கோயிலுக்கு பெட்ரோல் ஊற்றி தீ வைத்ததை நேரில் கண்ட இருவர் நம்மிடம் கூறினர். இதை அவர்கள் காவல்துறை அதிகாரிகளுக்கும் சமூக விரோதிகளுக்கும் பயந்து எதையும் வெளிப்படுத்தாமல் இருக்கின்றனர்.

*5.* இந்த ஆய்வின் மூலம் பி.ஜே.பி நிர்வாகிக்கும் காவல்துறை உளவுப்பிரிவுக்கும் ஒரு நெருங்கிய உறவு இருப்பது நமக்கு தெரியவந்தது.

பண்டாரம் நேர்கானலின் போது உளவுப்பிரிவு காவல் ஆய்வாளர் ரவீந்தரன் என்ற அதிகாரியின் ஆலோசனையோ உத்தரவோ இல்லாமல் எந்த ஒரு காரியத்திலும் ஈடுபடுவதில்லை என்று பண்டாரமே ஒத்துக் கொண்ட உண்மை. இதனை கடந்த ஆகஸ்டு மாத பண்டாரம் மற்றும் உளவுப்பிரிவு ஆய்வாளர் ரவீந்திரனுடைய கைப்பேசியை ஆய்வு செய்தால் இந்த உண்மை ஆதாரங்களுடன் உலகிற்கு தெரியவரும்.

இதன் மூலம் முஸ்லீம்களுக்கு தெரிவிக்க வேண்டிய படிப்பினை என்னவெனில் காவல் துறை உளவுப்பிரிவு மற்றும் சமூக விரோதிகள் அனைவரும் ஓரணியில் நின்று முஸ்லீம்களுக்கெதிராக திட்டம் தீட்டுகின்றனர். என்பது இந்த காயல்பட்டிணம் நிகழ்வில் அப்பட்டமாக தெரிகிறது என்பது முஸ்லிம்களுக்கு ஓர் எச்சரிக்கையே.

காயல் பட்டினத்திலிருந்து

யாசர் மற்றும் சிக்கந்தர்

Owned and published by M.Gulam Mohamed from 52/1, Mannady Street, Manndady, Chennai - 600 001. Editor : M.Gulam Mohamed, Printed by M.Gulam Mohamed at Chennai Offset Printers, 19/1, 21/2, Kitabath Khan Bhadhur Street, Chennai - 600 002.




# இப்போதைய
# பரப்பரப்பான விற்பனையில்

**விலை ரூ.100/-**

சிராதுல் முஸ்தகீம் பதிப்பகம்

அல் ஹூதா எலெக்ட்ரானிக்ஸ் - மொபைல்ஸ்
NO. 51 P.V.ஐயர் தெரு மாஸ்கான் சாவடி,
சென்னை 600001.

செல்: 9894907531 , 8973392393